# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 021 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 02, புதன்கிழமை 17.12.2014


**வானிலை**

மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

## நேற்றும் இரு தரப்பிலும் கட்சி தாவல்கள்

கொழும்பு, டிசெ.17

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆறு பேர் எதிரணிப் பக்கம் தாவியுள்ளனர். அதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் இருவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். பக்.20

## தேர்தல் நிலை பற்றி ஆராய பஸில் நேற்று திடீர் வருகை

கொழும்பு, டிசெ.17

பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ். குடாநாட்டுக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டு நேற்று வருகை தந்திருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவும் அவருடன் கூடவே வந்திருந்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்புக்கள் இடம்பெற்றன. அமைச்சர் டக்ளஸ் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்களையும் அவர்கள் சந்தித்துப் பேசினர். அரச அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று மதியத்திற்கு மேலேயே அமைச்சரின் வருகை தொடர்பில் அவசர அவசரமாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலுக்கான பரப்புரைகளை சுதந்திரக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. கட்சிகளின் அமைப்பாளர்கள் மூலமாகத் தீவிரமாக முன்னெடுக்கும்படி அமைச்சர் பஸில் கேட்டுக் கொண்டார் என்று தெரிகிறது. (உ-4)

# வெட்கக்கேடு!

- யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அடிபிடி சண்டை, தண்ணீர்ப் போத்தல் தாக்குதல், அமளி துமளி.
- ஈ.பி.டி.பியினர் தாக்கியதில் அமைச்சர் ஐங்கரநேசனது உதடு வெடித்து குருதி சொட்டியது.
- 7 பேர் காயம் எனத் தெரிவிப்பு.
- அபிவிருத்திக் கூட்டத்தில் அரசியல் பேசியதால் வினை.
- ஒரு மணி நேரத்தில் கூட்டம் ஒத்தி வைப்பு.



யாழ்ப்பாணம், டிசெம்பர் 17

வாய்த்தர்க்கம், கூச்சல் குழப்பம், அமளி துமளி, தள்ளுமுள்ளு, அடிபிடி சண்டை, தண்ணீர்ப் போத்தல் தாக்குதல், குருதி சிந்தல் என்று நேற்று நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ரணகளமாகியது. ஈ.பி.டி.பியினர் எறிந்த தண்ணீர்ப் போத்தல் மோதி வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் உதடு பிளந்து குருதி சொட்டியது. கூட்டமைப்பைச் சேர்ந்த மேலும் மூவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். தமது தரப்பில் நான்கு பேர் காயமடைந்து (இரத்தக்காயங்கள் அல்ல) வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே வெடித்துக் கிளம்பிய எதிர்பாராத இந்தச் சம்பவங்களால் சபை அதிர்ந்தது. இதனால் ஒரு மணி நேரத்தில் கூட்டம் அவசரமாக ஒத்தி வைக்கப்பட்டது. எந்தவொரு உருப்படியான கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரால் வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட வெளியாள்களுமே இவை எல்லாவற்றுக்கும் பொறுப்பு என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டினார். பக்.26

17 2014

## அமைச்சர் டக்ளஸே பொறுப்பு முதலமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் குழப்பமடைந் தமைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அவர் அழைத்து வந்த சம்பந்தமில்லாத வெளியாள்களுமே காரணம். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே ஒத்திவைக்கப்பட்டது. கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பம், பக்.20

## புலிச் சீருடையில் இராணுவம் கணவரைக் கடத்திச் சென்றது

### ஆணைக்குழு முன்பாக மனைவி கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.17

புலிச்சீருடையுடன்பவள்கவசவாகனத்தில் வந்த இராணுவத்தினரே எனது கணவரைக் கடத்திக் கொண்டு சென்றனர். கணவர் கடத்தப்பட்டு 6 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அவர் எங்கே என்று தெரியாது. அவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் – இவ்வாறு ஆணைக்குழு முன்பாக தாயார் ஒருவர் நேற்றுச் சாட்சியமளித்தார்.

வவுனியாவைச் சேர்ந்த இந்திரமலர் என்பவரே பக்.20

## தமிழ்க் கூட்டமைப்பை குறிவைக்கும் அரசு

### 'மை-3 ஒபரேஷன்' வெற்றியளிக்கும் சரத் பொன்சேகா கருத்து

கொழும்பு, டிசெ.17

ஊழல் மோசடிமிக்க மஹிந்த அரசை தோற்கடித்து, நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக பொது எதிரணி வகுத்துள்ள 'மை-3 ஒபரேஷன்' நிச்சயம் வெற்றியிலக்கை அடைவது உறுதி. பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு 65 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்கும்–என்றும் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

"பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு தமிழ்க் பக்.26

## இராணுவத்துக்கு எதிராக அதிகளவு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 17

எமது உறவுகள் காணாமற் போனமைக்கு இராணுவத்தினரே காரணம். பவள்கவச வாகனத்திலும், வெள்ளை வானிலும் அவர்களே கொண்டு சென்றனர்.

எமது உறவுகள் எமக்கு வேண்டும்என்றுஆணைக் குழு முன்பாக நேற்றும் பலர் சாட்சியமளித்தனர். இராணுவத்தினருக்கு எதிராக நேற்றைய தினம் மாத்திரம் 31 பேர் சாட்சியமளித்தனர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு வவுனியாவில் நடைபெற்று பக்.26

## அச்சம் காரணமாக இரகசியச் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஆணைக்குழுவின் அமர்வில் நேற்றைய தினம் இருவர் இரகசிய சாட்சியம் வழங்கினர். பாதுகாப்பு அச்சம் காரணமாக, தம்மால் பகிரங்கமாக சாட்சியம் வழங்க முடியாது எனத் தெரிவித்தே அவர்கள் இருவரும் இரகசிய சாட்சியத்தை வழங்கினார்கள்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு வவுனியா நகர் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சாட்சியமளித்த இருவரே இவ்வாறு இரகசியச் சாட்சியத்தை வழங்கினர்.

ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்கள், மொழிபெயர்ப்பாளர், சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தவிர்ந்த ஏனையோர் வெளியேற்றப்பட்ட பின்னர், இரகசியச் சாட்சிய வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

மதிய போசனத்துக்கு முன்பதாக ஒருவரது சாட்சியமும், அமர்வின் இறுதியில் மற்றையவரது இரகசிய சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது. சாட்சியமளித்தவரில் ஒருவர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதி ஒருவரது மனைவி என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## டெங்கு தொற்றை தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் டிசெ.17

டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கைகள் நாளை முதல் எதிர்வரும் மூன்று தினங்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளன. யாழ்ப்பாணம், பக்.26

## கூட்டமைப்பின் நிலைப்பாடு வெளியானால் வடக்கில் அரசின் அச்சுறுத்தல் அதிகமாகும்

### எச்சரிக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, டிசெ.17

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்டால், வடக்கில் அரசின் அச்சுறுத்தல்கள் அதிகரித்து அந்த மக்கள் நிம்மதியாக உண்டு, உறங்க முடியாத அபாய நிலை ஏற்படும் – என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

எனக்கு மனநோய் இல்லை. அந்த நோய் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் 2 ஆவது பதவிக் காலத்துடன் ஆட்சியைக் கைவிட்டு வீட்டுக்கு வந்தேன். ஆனால், அந்த நோய் இப்போது வேறொருவருக்கு வந்துள்ளது. அதற்கு மருந்தில்லை – என்றும் பக்.21

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செய்திகள்

## சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு செயற்படுக

### வேண்டுகோள் விடுக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, டிசெ.17
சிறுவர்களின் எதிர்காலநலனைக் கருத்தில் கொண்டு நாட்டு மக்கள் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ், கொஸ்கஸ் சந்தியில் நேற்று மதியம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இக்கருத்தினை வெளியிட்டார்.

"2005 ஆம் ஆண்டில் நாட்டில் இருந்த நிலைமை மற்றும் தற்போது நாடு இருக்கும் தன்மை ஆகியவற்றைநாம்புதிதாகவிளங்கப்படுத்த வேண்டிய தேவையில்லை. அதனை மக்களாகிய நீங்களே நன்கு உணர்வீர்கள். ஒருகாலத்தில் நாட்டில் தேசிய அடையாள அட்டை இல் லாது வீட்டை விட்டு வெளியில் இறங்கவே முடியாது. எப்போது குண்டு வெடிக்கும் என்ற அச்சத்துடனேயே எமது ஒவ்வொரு நாளும் கடந்தன. வெளியில் சென்றவர் வீட்டிற்கு வரும் வரை அந்த அச்சம் எம் மில் குடி கொண்டே இருக்கும். ஆனால், இன்றுஅந்தநிலைமைமுற்றிலும் அழிந்து விட்டது. அனை வரும் சுதந்திரமாகசெயற்படமுடியும்."– என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

"காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாச லுக்கு தீவிரவாதிகள் தற்கொலைத் தூக்குதல் நடத்தினர். மாறாகதற்போதே நாட்டில் மதச் சுதந்திரமும் சிறப்பாக காணப்படுகிறது. அனைவரும் தைரியத்துடன் வழிபடக் கூடியவாறு நாட்டில் அமைதியான சூழ்நிலை காணப்படுகிறது.

எனினும், சில இனவாதிகள் மற்றும் மதவாதிகள் நாட்டை துண்டாடவே தற்போது முயற்சித்து வருகின்றர். இதற்கு நாம் அனுமதியளித்தால் இலங்கையும் எகிப்து, சிரியா, லிபியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளைப் போல் மோசமான நிலைமைக்குத் தள்ளப் பட்டு விடும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"நாம் நாட்டில் போரை முடித்தவுடன் அபிவிருத்திப் பணிகலை மேற் கொள்வதில் அக்கறை கொண்டோம். ஏனெனில், எமக்கு நாட்டின் சிறார்களின் எதிர்காலம் குறித்து அக்கறை இருக்கிறது. அவர்களது கனவை பாதுகாப்பதே எமது பிரதான கடமையாகும். அதற்கு நாட்டு மக்களும் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும். ஆகவே, இலங் கையிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளும் அவர்களது பிள்ளைகளின்– சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டுசிந்தித்துசெயற்பட வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்."– என்றுஅவர்அங்கு மேலும் கூறியுள்ளார். (ற–சி)

## கழிவு ஒயில் வழக்கை உடன் தள்ளுபடி செய்க

### கோருகின்றது நொதேர்ன் பவர்

யாழ்ப்பாணம், டிசெ 17
சுன்னாகம் மின் உற்பத்தி நிலையங்களை மூடிவிடுமாறு கோரி மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டவழக்கைவிசாரணை செய்யும் அதிகாரம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றுக்கு இல்லை என்றும், அந்த வழக்கில் குறைபாடுகள் உள்ளன என்றும் கூறியுள்ள நொதேர்ன் பவர் நிறுவனம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் எழுத்து மூலம் பதில் அளிக்குமாறு மனுதாரருக்கு அறிவித்துள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலப்பதால் பலகிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே குறித்த மின் உற்பத்தி நிலையங்களை மூடிவிட உத்தரவிடுமாறு கோரிச் சுன்னாகம் பகுதியை அண்மித்துள்ள 11 பேர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது நொதேர்ன் பவர் நிறுவனம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த தென்பகுதிச் சட்டத்தரணி வசந்த பெர்ணான்டோ மற்றும் சட்டத்தரணி திருமதி சிவபாதம் ஆகியோர் இவ்வாறு நீதிமன்றில் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்தனர்.

அவர்களது பூர்வாங்க ஆட்சேபனைக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி எழுத்து மூலம் பதில் அளிக்குமாறு கூறியதோடு, எழுத்து மூல அறிக்கையைப் பரிசீலித்து அது தொடர்பான கட்டளையை எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதி வழங்குவதாக நீதிமன்று நேற்று அறிவித்துள்ளது.

சுமார் 2 மணித்தியாலங்களாக இடம்பெற்ற இந்த வழக்கில் மனுதாரர்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான சட்டத்தரணிகளான சோ.தேவராசா, ஜெஜெயரூபன், பார்த்தீபன், க.சுகாஷ், வி.மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

(த–4)

## சுன்னாகம் மின்நிலையக் கழிவு ஒயில் நிலத்தில் விடப்பட்டது உண்மை தான்

### மத்திய சுற்றாடல் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ 17
நொதேர்ன்பவர்நிறுவனம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை கழிவு ஒயிலை நிலத்தில் விட்டது உண்மைதான் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் முதல் முதலாக மல்லாகம் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தனர்.

முன்னர் முறையான கழிவகற்றல் வசதி இருக்கவில்லை. கழிவகற்றல்வசதிமுகாமைத்துவம்இல்லாத காரணத்தால் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனம் கழிவு ஒயிலை அவ்வாறு நிலத்தில் விட்டது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

கழிவு ஒயில் கிணற்று நீரில் கலப்பது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தாக்கல் செய்த வழக்கு நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அங்கு முன்னிலையாகியிருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அதன்போதே அவர்களால் இது பற்றிக் கூறப்பட்டது.

தற்போதுள்ள நிலையைவிட மேலும் சிறப்பான தொழில்நுட்பங்களைப்பயன்படுத்திமுன்னேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழிவு ஒயில் பிரச்சினை காரணமாகச் சுன்னாகத்தைச் சேர்ந்த சுமார் 700 கிணறுகளில் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் நொதேர்ன் பவர் நிறுவனம் கழிவு ஒயிலை 2009 ஆம் ஆண்டிலிருந்து நிலச் சூழல் பாதுகாப்பு பற்றிய அக்கறையின்றி அவ்வாறு செயற்பட்டமை முதல்முதலாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை வழக்கில் திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(த–4)

## நந்தனவின் பாதுகாப்பு அகற்றப்பட்டது

கொழும்பு, டிசெ.17
முதல் முன்னணி கட்சியின் தலைவரும், முன்னாள் பாணந்துறை முதல்வருமான நந்தன குணதிலக்கவின் பாதுகாப்பை அரசு மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. அதனால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. முன்னாள் முக்கியஸ்தரும், முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான இவர் கடைசியாக வகித்த ஆளும் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியை உதறிவிட்டு பொது வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவுக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளார். அதையடுத்தே அவரது பாதுகாப்பு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (ற)

## நாட்டில் வன்முறைகள் தலைதூக்கும் அபாயம்

### எச்சரிக்கின்றார் ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு, டிசெ.17
நாட்டில் மீண்டும் வன்முறைகள் தலை தூக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொலன்ன தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"பொது வேட்பாளா மைத்திரி பால சிறிசேன வெற்றியீட்டுவார் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது. நாட்டின் சூழ்நிலையை பார்க்கும் போது இந்த விடயம் புரிந்துவிடும். சாதாரண எண் கணிதம் தெரிந்தவர்களினால் மைத்திரிபாலவின் வெற்றியை உணர்ந்து கொள்ள முடியும்."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

"அரசு மக்கள் விருப்பத்துக்குப் புறம்பான வகையில் செல்கின்றது. இந்த பயணம் நல்ல வழியில் முடிவுறுத்தப்படாது என்றே தெரிகின்றது. 1989ஆம் ஆண்டை போன்றே நாட்டில் மீண்டும் வன்முறைகள் இடம்பெறக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களிக்க வேண்டியது அவசியமானது. நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது. அதைத் தடுத்து நிறுத்த மைத்திரிபால தலைமையிலான கூட்டமைப்புக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும்"– என்று அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## எம்பிலிப்பிட்டிய நகர சபையின் பட்ஜெட் தோல்வி

கொழும்பு, டிசெ.17
எம்பிலிப்பிட்டிய நகரசபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுதிட்டம்தோல்வியடைந்துள்ளது. இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வாக்களிப்பில்கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் இருவர் வரவு–செலவுதிட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்தனர். நகரசபையின் பதில் தலைவர் புஞ்சி ஹேவா வாக்களிக்கவில்லை. (ற)

## அச்சம் வெளியிடுகின்றது பொது பல சேனா

கொழும்பு, டிசெ.17
கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று எச்சரிக்கை விடுத்துள்ளது பொது பல சேனா அமைப்பு.

கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத அமைப்புக்கள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ள அந்தஅமைப்பின்பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர், கிழக்கு தீவிரவாத இயக் கங்கள் தொடர்பில் புலனாய் வுப் பிரிவினரின் எச்சரிக்கை களை அரசு உதாசீனம் செய்து வருகின்றது என்றும் தெரிவித் துள்ளார்.

இந்த வாரம் ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானில் இடம் பெற்ற துயரமான சம்பவங்கள் இலங்கையிலும் இடம்பெறக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும், கிழக்கில் தீவிரவாத அமைப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத இயக்கங்கள் இயங்கி வருவதாக சர்வதேச அமைப்புக்கள் கூட எச்சரிக்கை விடுத்துள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசு இவ்வாறு கிழக்கு தீவிரவாத அச்சுறுத்தல்கள் குறித்து மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருகின்றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தீவிரவாத அமைப்புக்கள் குறிப்பாக ஜிஹாதிய இயக்கங்கள் இயங்கி வருவதாக முன்னரும் பொதுபல சேனா இயக்கம் குற்றம் சுமத்தியிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள என்ற தீவிர முனைப்பில் ஈடுபட்டுள்ள அரசுக்கு பொதுபல சேனா வெளியிட்டுள்ள இந்தக் கருத்து நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ற)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். ஆனால் மனதில் குடும்ப கவலை உண்டாகும். பிள்ளைகள் உங்களது பேச்சை கேட்டு நடப்பது திருப்தி தரும்.

**இடபம்:** காரியங்கள் செய்து முடிப்பதில் மெத்தன போக்கு காணப்படும். பொறுப்புகள் கூடும். எச்சரிக்கையாகப் பேசுவது நல்லது. வீண் பிரச்சினைகள் தீரும். அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நன்மை தரும்.

**மிதுனம்:** விருப்பத்துக்கு மாறாக சில காரியங்கள் நடக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு வீண் அலைச்சல் இருக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு விடயத்துக்காக வாக்குவாதம் செய்து அமைதியை குறைப்பார்கள். குடும்பத்தில் கருத்து வேற்றுமை உண்டாகலாம். கவனம் தேவை. பாதியில் நின்ற காரியங்களை விரைவாக செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** முன்யோசனை இல்லாமல் எதில் ஈடுபட்டாலும் சிக்கலில் மாட்டாமல் நழுவிவிடுவீர்கள். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். புத்திசாதுரியத்தால் எந்தத் தடைகளையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கன்னி:** எந்தஒரு பிரச்சினையையும் துணிச்சலுடன் எதிர்கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் விழிப்புடன் இருப்பது லாபம் அதிகரிக்கச் செய்யும்.

**துலாம்:** குடும்பத்தினருடன் விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். குடும்பத்தில் இதமான உறவு காணப்படும். பிள்ளைகள் மூலம் நன்மை உண்டாகும் அவர்களது செயல்களால் பெருமை கிடைக்கும்.

**விருச்சிகம்:** எந்த ஒரு வேலையையும் விரைவாகவும், திறமையாகவும் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். விழிப்புடன் செயற்படுவது நல்லது. எல்லா காரியங்களும் அனுகூலமாகும்.

**தனுசு:** துன்பங்கள் வந்தாலும் அதனை மனதுக்குள் மறைத்து வெளியில் மகிழ்ச்சியை காண்பிப்பீர்கள். பல வகையிலும் நற்பலன்கள் கிடைக்கும். பயணங்கள் மகிழ்ச்சிதரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும்.

**மகரம்:** கவனமாகப் பேசுவது நல்லது. வீண்பழி உண்டாகலாம். வேலையில் மாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கலைச் சந்திக்க வேண்டி இருக்கலாம்.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் ஏதாவது மனம் நோகும்படியான நிலை உருவாகலாம். பிள்ளைகளின் கல்வியில் கவனம் தேவை.

**மீனம்:** பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். எச்சரிக்கையாகப் பேசுவது நல்லது. காரிய தடை ஏற்படலாம். மனதில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாமர்த்தியமான பேச்சு கைகொடுக்கும்.

# நிலவுக்கு பொக்கிஷம் அனுப்ப ரெடியா?



காதலிக்காக நிலாவைக் கையில் பிடித்துத் தரும், காதல் பாடலை எத்தனையோ முறை கேட்டிருப்போம். ஆனால் நம்முடைய காதல் நினைவுகளை நிலவில் அழியாமல் வைக்க வேண்டும் என்று நாம் என்றும் யோசித்ததில்லை.

இனி அப்படி யோசித்துக் காதல் நினைவுகளை நிலவில் கால் பதிக்க நீங்கள் நினைத்தால், உங்களது ஆசையை நிறைவேற்ற முன்வந்துள்ளது அமெரிக்க நிறுவனமான அஸ்ட்ரோபோடிக்.

அது நிலவுக்கு தபால்களை அனுப்பும் 'மூன் மெயில்' என்ற சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. நமது நினைவுகளை என்றும் பல நூற்றாண்டுகள் நிலவில் அழியாது காக்க முடியும் என்று நம்பிக்கையை இந்த நிறுவனம் இதன் மூலம் வழங்கவுள்ளது.

உலகின் எந்த மூலையிலுள்ள மக்களும் அஸ்ட்ரோபோடிக்கின், நிலவில் தரையிறங்க இருக்கும் விண்கலம் மூலம் தங்கள் நினைவுச் சின்னங்களை அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சிறிய அளவிலான நினைவுச் சின்னங்களை முதல் நிலவுப் பயணத்திற்காக சேகரிக்கத் தொடங்கியுள்ளதாகவும், 'மூன் கேப்சூல்' எனப்படும், நிலவில் பொருளை பாதுகாக்கும் பெட்டகம் ஒன்று வழங்கப்படும் எனவும் தகவல் வெளியிட்டுள்ளது.

# திரைக்கு வந்த ஆனந்தி



விஜய் தொலைக்காட்சியின் 'ஜோடி நம்பர் – 1, சீசன் – 7' இல் விருதைப் பெற்ற ஆனந்திக்கு, சினிமா வாய்ப்புத் தேடி வந்திருக்கின்றது.

ஆர்யா, ஹன்சிகா நடிக்கும், மீகாமன் திரைப்படத்தில் கதாநாயகியின் தோழியாக நடித்துள்ளார். அத்துடன் பாலாவின் தாரை தப்பட்டை திரைப்படத்தில் நடனக்காரியாகவே நடித்திருக்கின்றார்.

மேலும் பல திரைப்படங்கள் ஆனந்தியைத் தேடி வந்து கொண்டிருப்பதாகவும், விரைவில் கதாநாயகியாகவே அவர் நடிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எழுந்து நடந்தால்
இமயமலையும் நமக்கு வழி கொடுக்கும்
உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும்
நம்மைச் சிறைப் பிடிக்கும்



## ரிலாக்ஸா வாசியுங்க...

ஓர் ஊரில் குப்புசாமின்னு ஒருத்தன் இருந்தானாம். அவனுக்கு சாவே வரக்கூடாது என்று ரொம்பக் காலமாகக் கடவுளை வேண்டித் தவம் இருந்தானாம்.

ஒரு நாள் கடவுள் நேரில் வந்தாராம். "பக்தா என்ன வரம் வேண்டும் கேள்" என்று கேட்டாராம். உடனே குப்புசாமியும் ரொம்ப ஆர்வமாக, "கடவுளே எனக்கு சாவே வரக்கூடாது" என்று கேட்டானாம்.

"சரி பக்தா அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி விட்டு கடவுள் மறைந்து விட்டார்.

குப்புசாமி ரொம்ப சந்தோசமாகி வீட்டுக்கு போய்க்கொண்டு இருந்தானாம். வழியில யாரோ ஒருத்தர் குப்பு சாமியை கவனிச்சுக்கிட்டே வந்து "உங்க பெயர் என்ன?" என்று கேட்டாராம்.

அதற்கு குப்புசாமி அவனோட பெயரைச் சொல்ல முடியாமல் "குப்புமி" "குப்புமி" என்று சொன்னானாம்.

பாவம் கடைசிவரை அவனுக்கு 'சா' வே வரலையாம்.

கடவுள் தனது 'மைண்ட் வொய்ஸில்' "வரம் கேக்குற உனக்கே இத்தன அதப்புனா, குடுக்குற எனக்கு எவ்வோளவு இருக்கும்" என்றாராம்.

## செய்திகள்

# உறுதியளித்தவாறு நடராஜாவை உடன் உறுப்பினர் ஆக்குக

## வவுனியா மாவட்ட மக்கள் வடமாகாண சபையிடம் கோரிக்கை

வவுனியா, டிசெ.17

2014 ஆண்டு ஒக்ரோபர் மாதம் எம்.பி.நடராஜாவை வடக்கு மாகாண சபை உறுப்பினராக் கக் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் ஏற்கனவே முடிவு செய்த போதும் அவருக்கான பதவி இன்னமும் வழங்கப்படாமை குறித்து வவுனியா மாவட்ட மக்ள் விசனம் தெரிவித்துள்ளனர்

வடமாகாண சபையின் போனஸ் ஆசனத்தை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவர் வீதம் நால்வருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தவகையில் தற்போது போனஸ் ஆசனத்தில் வடமாகாண சபை உறுப்பினராக மேரி கமலா குணசீலன் உள்ளார். இவருடைய பதவிக்காலம் 2014 ஒக்ரோபர் மாதத்துடன் முடிவடைந்துள்ளது. அடுத்து வவுனியா கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி வருபவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவருமாகிய எம்.பி. நடராஜா வடமாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்படவேண்டும். டிசெம்பர் மாதத்தின் நடுப்பகுதியைத் தாண்டியும் இவருக்குரிய பதவி இன்னும் வழங்கப்படவில்லை. இது குறித்து வவுனியா மாவட்ட மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

எனவே இந்த வருட இறுதிக்குள் அவருக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியை வழங்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்திடம் வவுனியா மாவட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-402)



யாழ்ப்பாணம்பொலிஸ்அத்தியட்சகர்பிரிவில் ஜனாதிபதித்தேர் தல் வேட்பாளர்களின் பதாகைகளை அகற்றுவதில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் பதாகைகள் கடந்த வாரம் இரவோடு இரவாகக் காணாமற்போன நிலையில் யாழ். புதிய பொலிஸ் நிலையத்தின் முன் ஏற்கனவே இருந்த ஜனாதிபதியின்படம்வெள்ளைச்சீலைகொண்டுமறைக்கப்பட்டுள்ளது.(த-86)

## புதிய மதுபான நிலையத்தை அகற்றாதது ஏன்?

மன்னார், டிசெ. 17

மன்னார் பெரியகடைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மது விற்பனை நிலையத்தை அகற்ற இதுவரை மன்னார் நகர சபை நடவடிக்கை எடுக்காதது ஏன் என மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் கேள்வி எழுப்பினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபைக்குட்பட்ட பெரியகடைப் பகுதியில் நகர சபையின் அனுமதி இன்றி மது விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளனர். இது திறக்கப்பட்டு ஒரு வருடமாகின்றது.

குறித்த மது விற்பனை நிலையத்தினால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தொடர்ச்சியாக எங்களிடம் முறையிட்டு வருகின்றனர்.

எனவே மன்னார் நகர சபை இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் தெரிவித்தார்.

இதற்குப் பதில் அளித்த மன்னார் நகர சபை தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம்,

குறித்த மது விற்பனை நிலையத்துக்கு மன்னார் நகர சபை எந்தவித அனுமதியையும் வழங்கவில்லை. ஆனால் அவர்கள் ஏனைய சகல அனுமதியையும் பெற்றுள்ளனர். அந்தப் பகுதி மக்களின் ஒற்றுமை இன்மையினால் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. அரசியல் செல்வாக்குடன், பொலிஸாரின் ஆதரவுடனும் குறித்த மது விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது—என்றார்.

(த-56)

## உயரமாகக் கட்டப்படும் மஹிந்தவின் 'கட்அவுட்'

கரணவாய், டிசெ. 17



யாழ். நகரை அண்டிய பகுதிகளில் தேர்தல் பரப்புரைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'கட் அவுட்' கள் பொலிஸாரால் அகற்றப்படுகின்றன. ஆனால் வடமராட்சிப் பகுதியில் அவை அகற்ற முடியாதவாறு மின்சாரக் கம்பங்களில் உயரமாகக் கட்டப்படுகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சிறிய 'கட் அவுட்' கள் வடமராட்சிப் பகுதியிலுள்ள மின்கம்பங்களில் உயரமாகக் கட்டப்பட்டுள்ளன.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தபோதும், வடமராட்சிப் பகுதியில் அகற்ற நேற்று வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை— ஒட்டப்பட்டிருந்த ஜனாதிபதியின் வர்ண சுவரொட்டிகள் பல இடங்களிலும் இனந்தெரியாத நபர்களினால் கிழித்தெறியப்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(த-108)

## சுன்னாகம் மீன் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

வலி.வடக்கு, டிசெ. 17

சுன்னாகம் மீன் சந்தைக்கு முன்னால் தேங்கும் கழிவு நீரினால் பெரும்சுகாதாரச் சீர்கேடுகாணப்படுவதுடன் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மீன் சந்தை, அயலில் உள்ள கழிப்பிடம் என்பவற்றில் இருந்து வெளியேறும் கழிவு நீர் மீன் சந்தையின் முன்னால் உள்ள பிரதானவாசலில்தேங்குகின்றது. சந்தைக்குள் செல்லும் பொது மக்கள் இந்தக் கழிவு நீருக்கு ஊடாகச் செல்ல வேண்டியுள்ளதுடன் நுளம்புகள் பெருகும் நிலைமையும் காணப்படுகின்றது.

கழிவு நீரில் வந்து அமரும் ஈக்கள் மீண்டும் சந்தையில் விற்பனை செய்யப்படும் மீன்களில் மொய்ப்பதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன.

இந்தக் கழிவு நீரைத் தேங்கவிடாது அகற்றச் சுன்னாகம் பிரதேச சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள்கோரியுள்ளனர். (த-86)

# காய்களை வாங்கி பழுக்க வைத்து உட்கொள்ளுங்கள்

## பொது மருத்துவ நிபுணர் ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ. 17

பழங்களை மருந்து மூலமாகப் பழுக்கச் செய்து விற்பனை செய்வது உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்குமென்பதால் இனிமேல் அவற்றைப் பச்சையாகவே வாங்கி வீட்டில் பழுக்க வைத்து உண்ணுங்கள்.

அவ்வாறு செய்தால் மருந்து மூலமாகப் பழுக்க வைத்து விற்பனை செய்யும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். அதனை பழம் வாங்குபவர்கள் தூண்டவேண்டும் என்று யாழ். போதனா வைத்தியசாலைபொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன் சுதன் தெரிவித்தார்.

அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் நல்ல பழங்கள் வாங்குவதில் சிக்கல் காணப்படுகின்றது. எங்கும் மருந்து அடித்துப் பழுக்க வைத்த பழங்களே விற்பனை செய்யப்படுகின்றன. அந்தச் சிக்கலைத் தவிர்க்க கடைகளில் வாழைப் பழம் என்று கேட்டு வாங்காது பழுக்க முன்னர் காயாக உள்ள போதே வாங்கி வீட்டுக்குச் சென்று பழுக்க வைத்து உண்ணுங்கள். அவ்வாறு செய்தால் மருந்து அடித்து விற்பனை செய்யப்படும் கலாசாரமும் குறைக்கப்படும். மருந்து மூலமாகப் பழுக்க வைத்து உண்பது பல நோய்கள் ஏற்படக் காரணமாகிவிடுகிறது. விற்றமின் மாத்திரைகள் பயன்பாடு தொடர்பில் கேட்கப்பட்டுள்ளது. உலகம் இப்போது இயற்கையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இயற்கையான உணவுகளையே பலரும் இப்போது நாடத் தொடங்கிவிட்டனர். அதாவது உரம் அல்லாத உணவுகளையே இந்த உலகம் விரும்புகின்றது. இயற்கையான உரங்களைப் பாவித்து உணவு, மரக்கறி வகைகளை உற்பத்தி செய்ததாக இருத்தல் வேண்டும். காலம் காலமாக மனிதன் இயற்கையுடன் ஒன்றித்தே வாழ்ந்துள்ளான். பாலும் முட்டையும் அதிக ஊட்டமுள்ள உணவுப் பொருள்கள். சில இடங்களில் – கிராமங்களில் வீட்டில் பசு வளர்ப்போர் பாலைக் கறந்து விற்றுவிட்டு அதிக பணத்துக்கு பால்மா வகைகளைப் பயன்படுத்துகிறார்கள். பால்மா வகைகளில் உள்ள ஊட்டச் சத்தைவிட நேரடியாகக் கறந்து பெறப்படும் பாலில் அதிக ஊட்டம் உள்ளன. எனவே நேரடியாகப் பெறப்படும் பாலை அருந்துங்கள்.

அவ்வாறே ஊர்க் கோழி முட்டையைவிட புறொயிலர் கோழி முட்டையில் சத்து குறைவாகவே உள்ளது. வளர்ப்புக் கோழிகள் பிரச்சினையில்லை. பாம் கோழிகளுக்கு ஓமோன் வழங்கப்படுகின்றது. முட்டையை கொலஸ்ரோல் இல்லாதவர்கள் பயன்படுத்தலாம். கொலஸ்ரோல் உள்ளவர்கள் வாரத்தில் 3 அல்லது நான்கு முட்டைகள் சாப்பிடலாம்.

எண்ணெயை எவ்வளவு குறைவாகப் பயன்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு அது நல்லது. தேங்காயெண்ணெயை இயன்றளவு குறைப்பது நலம் தரும். பதிலாக நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் பயன்படுத்தல் சிறப்பானது – என்றார்.

(த-4-21)

## தண்டவாளத்தில் கல் வைத்து விளையாடிய இருவர் மறியலில்

தென்மராட்சி,டிசெ.17
நாவற்குழி ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தண்டவாளப் பாதை பிரிவின் பிளவுப் பகுதியில் கற்களை வைத்ததாகக் கைதானவர்களில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ரயில்கள் தண்டவாளத்தில் மாறுவதற்காக உள்ள பிளவுப் பகுதியில் கற்களை வைத்து ரயில் சேவையைத் தடுப்பதற்கு முயற்சி செய்யப்படுவதாக பொலிஸ் நிலையத்தில் ரயில்வே திணைக்களத்தினர் முறைபாடு செய் திருந்தனர்.

இது தொடர்பாகப் பல தடவைகள் பொலிஸார் காத்திருந்தும் கற்கள் வைப்பவர்களைக் கண்டு பிடிக்கமுடியவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தண்டவாளப் பிளவுப் பகுதியில் கற்களை வைத்ததாக இளைஞர்கள் மூவரை அங்கு மறைந்திருந்த படையினர் பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ரயில் சேவையைக் குழப்பும் வகையில் தண்டவாளப் பிளவில் கற்களை வைத்ததாகக் குற்றஞ்சாட்டி இந்த மூவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன் றில் பொலிஸார் அறிக்கை தாக் கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கண பதிப்பிள்ளை 18 வயது இளை ஞர்கள் இருவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைத்ததுடன் 17 வயது சிறுவனை 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்லவும் அனுமதித்தார். (த–9)

# டெங்கு ஆபத்து

## வலி.தென்மேற்கில்

### கொழும்பில் இருந்து வருகிறது கட்டுப்பாட்டு நடவடிக்கைக் குழு

வலி.தென்மேற்கு, டிசெ.17
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் அதிக டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டுள்ள ஐந்து கிராமங்களில் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள டெங்குக் கட்டுப்பாட்டு விசேட குழுவினரின் நேரடிக் கண்காணிப்பில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி றஜீவ் மேற்கொண்டுள்ளார்.

குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக உயிர்கொல்லியான டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதையடுத்து இந்த நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்டுள்ள யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்கள் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்வதற்குச் சுகாதாரப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ளனர். கொழும்பிலிருந்து வரவுள்ள டெங்குக் கட்டுப்பாட்டு விசேட குழுவினரின் நேரடிக் கண்காணிப்பில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை, சாவல்கட்டு ஆகிய இடங்களில் எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை இடம்பெறவுள்ளது. சுகாதார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ்–இராணுவம் இணைந்து வீடு வீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

(த–115)

## உரப் பாவனையால் மாசை மறந்தது ஏன்?

### சுகாதாரத் திணைக்களத்திடம் மக்கள் கேள்வி

தென்மராட்சி, டிசெ.17
சுன்னாகம் பகுதிக் கிணறுகளில் எண்ணெய் கசிவு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளும் சுகாதாரத் திணைக்களத்தினர், யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் உரப் பாவனை மற்றும் களைநாசினி பாவனை போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பை ஆய்வு செய்ய மறந்தமை குறித்துப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

நெல் உற்பத்திக்கென வழங்கப்பட்டும் உர வகைகளை யாழ். மாவட்ட விவசாயிகளும் பொது மக்களும் பல்வேறு பயிர் களுக்குப் பயன்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

இந்த உரம் விவசாய நிலங்களில் மட்டுமல்ல குடியிருப்பு நிலங்களிலும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின் றன.

உர வகைகளில் காணப் படும் இரசாயனப் பதார்த்தங் கள் நிலத்தடி நீருடன் கலக்கின் றன. இந்த நீரையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படும் களை நாசினிகள், கிருமி நாசினிகள் என்பவற்றின் பாவனையும் அதிகரித்துள்ளன. இவையும் நிலத்தடி நீருடன் கலக்கும் அபாயம் உள்ளன.

மேலும் வறட்சியான காலங்களில் விவசாய நிலங்களில் உள்ள நீரைப் பெற்று மக்கள் குடிதண்ணீராகவும் சமையலுக்கும் பயன்படுத்துகின்றனர். கொதித்தாறிய நீரைப் பருகும் பழக்கம் எமது மக்களுக்குக் குறைவாக உள்ளதால் இதன் பாதிப்புக்களை மாவட்டத்தில் பல்வேறு நோய்களை உருவாக்குவதாகக் கருதுகின்றனர்.

அண்மைக் காலமாகக் குடியிருப்புக் காணிகளில் காணப்படும் பூண்டுகளை அழிக்கச் சக்தி வாய்ந்த களை கொல்லி நாசினியை விசிறி வருகின்றனர். விசிறப்படும் நச்சு மருந்து குடியிருப்புக் காணியில் உள்ள கிணறுகளுக்குள் பரவும் அபாயம் உள்ளது.

சுன்னாகத்தில் உள்ள 150 க்கு மேற்பட்ட கிணறுகளில் எண்ணெய்க் கசிவு காணப்படும் அதேவேளையில் மாவட்டத்தில் உள்ள பல்லாயிரக் கணக் கான கிணறுகள் உரம் மற்றும் நாசினிகள் பாவனையால் மாசுபடுவதைத் தடுக்க எவரும் முன்வராதமை குறித்து பலரும் கவலை தெரிவித்துள்ளனர். (த–9)

## குற்றத்தை ஏற்ற 23 மீனவர்கள்

### தலா 3 ஆயிரம் ரூபா அபராதம்

வலி.தென்மேற்கு, டிசெ. 17
தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 23 மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் இவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் கிளாலிக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களைப் பிடிப்பதற்காக வள்ளத்தில் சென்ற கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளை ஏழு வள்ளங்களில் சென்ற மீனவர்கள் கடமை செய்ய விடாது தடுத்ததுடன் உயிருக்கு அச்சுறுத்தலும் விடுத்திருந்தனர்.

இவர்களின் அச்சுறுத்தலினால் திரும்பிச் சென்ற அதிகாரிகள் மீனவர்களின் அடாவடித்தனம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தபோதிலும் ஒரு மாதத்துக்கு, மேலாகியும் மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் முன்வரவில்லை.

பொலிஸாரின் நடவடிக்கை குறித்து விரக்தியடைந்து, பாதிக்கப்பட்ட அதிகாரிகளால் சம்பந்தப்பட்ட கச்சாயைச் சேர்ந்த 23 மீனவர்களுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் அவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (த–115)

## மன்னாரில் நேற்றுத் திடீரென தடைப்பட்ட தேர்தல் பரப்புரை



மன்னார், டிசெ. 17
எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தோர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து மன்னாரில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகள் திடீரென இடை நிறுத்தப்பட்டன.

இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட பல அரசியல் வாதிகள் கலந்துகொள்ள இருந்தனர். முசலியில் விவசாயப் பாதிப்புக்கான நட்டஈடு வழங்கல், மன்னாரில் அலுவலகம் திறப்பு என்பவற்றுடன் தேர்தல் பரப்புரைக் கூட்டமும் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதி மறிக்கப்பட்டு தேர்தல் பரப்புரை மேடை ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் மன்னார் பயணம் நிறுத்தப்பட்டதால் நேற்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சகல நிகழ்வுகளும் தடைப்பட்டன.

எனினும் மன்னார் சிறுவர் பூங்காவுக்கு முன் வீதியை இடைமறித்து அமைக்கப்பட்ட தேர்தல் பரப்புரை மேடை இதுவரை அகற்றப்படவில்லை.

(த–56)

## கூமாங்குளம் மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்

வவுனியா, டிசெ. 17
வவுனியா கூமாங்குளப் பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங் கும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கூமாங்குளம் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கூமாங்குளப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி தனிப்பட்ட நபர்களின் அன்பளிப்பின் பேரில் தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டுச் சுத்திகரிப்பு இயந்திரம் ஊடாகச் சுத்திகரிக்கப்பட்ட நீர் இன்று கூமாங்குளம் மக்களுக்கு வழங்கப்பட வுள்ளது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர இந்த நீர் வழங்கும் நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கிறார்.

வவுனியா மாட்டத்தில் கிராமப் புற மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் செயற்றிட்டம் இதுவே முதல் முறையாக இடம்பெறுவதால் இதற்கு வவுனியா மாவட்ட மக்கள் பெரும் வரவேற்பைத் தெரிவித்துள்ளனர். (த–402)

# செய்திகள்

## மக்கள் பயனடைந்த மருத்துவ சோதனை முகாம்

### ஞாயிறன்று கைதடியில் நடத்தப்பட்டது

தென்மராட்சி,டிசெ.17
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடிப் பிரதேச மக்களுக்காக ஞாயிற்றுக்கிழமை நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் நீரிழிவு நோயாளர்கள் 8 பேர் புதிதாக இனங்காணப்பட்டனர். அவர்களை தொடர் சிகிச்சை பெற சாவகச்சேரி மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



கழகத்தினரால் கைதடி விநாயகர் திருமண மண்டபத்தில் நடத்தப்பட்ட குறித்த மருத்துவ பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அமுக்கம், பொதுமருத்துவம் உட்பட்ட சிகிச்சைகளும் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. இந்த முகாமில் கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 200 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கண் பரிசோதனையில் கலந்து கொண்டவர்களில் 157 பேருக்கு பார்வையில் குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அனைவருக்கும் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டதாக கழகத் தலைவர் லயன் க.தர்சன் தெரிவித்தார். (வ–9)



கைதடி நவீல்ட் பாடசாலையில், பிரிட்டனில் உள்ள றீபில்டிங் சிறீலங்கா (rebuilding srilanka) அமைப்பின் ஊடாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட நூலகத்தை அதன் பிரதிநிதி திருமதி கிளேரா அலன் மற்றும் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். பாடசாலைக்குப் பல புத்தகங்களும் விசேட தேவையுடையவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (வ–4)

## கவனிப்பாரற்ற நிலையில் பாலம்



யாழ்ப்பாணம், டிசெ.17
சாவகச்சேரி – பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பாலம் ஒன்று, வெடிப்புக்குள்ளாகி ஆபத்தான நிலையில் காணப் படுகின்றது. கப்பூது வெளியில் உள்ள விராலியடி வைரவர் ஆலயத்துக்கு அண்மையாக உள்ள 13ஆவ்து கிலோமீற்றரில் உள்ள 2ஆவது பாலமே இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பாலத்தினூடாகப் பெருமளவு மக்கள் பயணிப்பதுடன், பாரவூர்திகள், பயணிகள் பஸ் என்பனவும் பயணிக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள பொதுமக்கள், சம்பந்தப்பட்டவர்கள் குறித்த பாலத்தை விரைவில் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு விவரம் திரட்டும் நடவடிக்கை

*மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தால் முன்னெடுப்பு*

மன்னார், டிசெ.17
மன்னார் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி, 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்ற சகல ஆசிரியர்களது விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தெரிவித்தார்.
ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு தொடர்பாக விவரம் திரட்டுவதற்காக, குறித்த காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், மன்னார் வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் விண்ணப்பத்தைப் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவர் தெரிவித்துள்ளார். சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களிலும் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–56)

## எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வு



யாழ்ப்பாணம்,டிசெ.17
சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் முன்னெடுக்கப்பட்ட எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று முன்தினம் பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையரங்கில் இடம்பெற்றது. குருநகர் பிரதேச சுகாதார பொதுப்பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றது. யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகளான மருத்துவர் யசிதரன், மருத்துவர் உமாசுதன், மருத்துவர் திருமதி தி.சிவதாஸ் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த கருத்தமர்வில் கலந்துகொண்டனர்.
எய்ட்ஸ் என்ற கொடிய நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது அவற்றில் இருந்து எவ்வாறு எம்மைப் பாதுகாப்பது போன்ற விடயங்கள் இந்தக் கருத்தமர்வில் விளக்கிக் கூறப்பட்டதோடு அதற்கான பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.
அதனைவிட நிகழ்வில் கலந்து கொண்ட கர்ப்பிணிகளுக்கு எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுப் பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கத்தோலிக்க இளைஞர் ஆணைக் குழுவினரின் 'எச்சில்' என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது. (வ–17)

## கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் பொது அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு

கரணவாய்,டிசெ. 17
ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பொது அமைப்புக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென் 9 லட்சத்து 16 ஆயிரத்து 650 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவசிறி தெரிவித்துள்ளார்.
சமூக மட்ட நிறுவனங்களான முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பனவற்றினதும், மீன்பிடி அமைப்புக்களினதும் உபகரணக் கொள்வனவுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
இந்த வகையில் உடுப்பிட்டி வடக்கில் கொம்மந்தறை முன்பள்ளிக்கு 72ஆயிரத்து 750 ரூபாவும், பாரதி சனசமூக நிலையத்துக்கு 48ஆயிரத்து 500 ரூபாவும் கொம்மந்தறை விளையாட்டுக் கழகம், கலைவாணி சனசமூக நிலையம் ஆகிய வற்றுக்கு தலா 48ஆயிரத்து 750 ரூபாவும், மத்தொனி சிந்தாமணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், இமையாணன் மேற்கில் நாவலடி முன்பள்ளி, இமையாணனில் நித்தி விளையாட்டுக் கழகம், கரணவாய் மேற்கில் சந்திரோதயம் சனசமூக நிலையம், உடுப்பிட்டியில் நீதிதேவி சனசமூக நிலையம் என்பவற்றுக்கு தலா 48ஆயிரத்து 500 ரூபாவும். கரணவாயில் இளங்கோ சனசமூகநிலையத்துக்கு 53 ஆயிரத்து 350 ரூபாவும், அத்தாயில் விநாயகர் முன்பள்ளிக்கு 43 ஆயிரத்து 650 ரூபாவும், புதுத்தோட்டம் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்துக்கு 97 ஆயிரம் ரூபாவும், வல்வெட்டி மத்திமாவடி சனசமூக நிலையத்துக்கு 97 ஆயிரம் ரூபாவும், கரணவாய் அறிவாலயம் சனசமூக நிலையத்துக்கு 1லட்சத்து 21ஆயிரத்து 250 ரூபாவும், இமையாணன் அறிவாலயம் விளையாட்டுக் கழகத்துக்கு 43ஆயிரத்து 650 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.
இதேவேளை மக்கள் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட 33 திட்டங்களுக்கு சுமார் 33 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வடமராட்சி கல்வி வலயத்துக்கு 16லட்சம் ரூபாவும், பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்காக 6 லட்சத்து 75ஆயிரம் ரூபாவும் கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 10லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (வ–108)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2 ஆம் பரிசு ரூ. | 3 ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02. | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில் உதயன்

**தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!**

# மாணவர்களே!

## கட்டுரைப் போட்டிக்கு தயாரா நீங்கள்?

உதயன் 30ஆவது ஆண்டு சிறுகதைப் போட்டி விதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில் கட்டுரைப் போட்டி பற்றி எந்தவித அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் வராமையிட்டு நீங்கள் கலங்கிப் போயிருப்பதனை நாமறிவோம்.

**கட்டுரைப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.**

A பிரிவு தரம் 10,11,12,13

Bபிரிவு தரம் தரம் 6,7,8,9

வருங்கால தலைவர்களும், சிந்தனையாளர்களும் நீங்களே!

எங்கே ?

உங்கள் சிந்தனையில் உதித்தவற்றை செயல் வடிவமாக்குவதற்கு முதலில் உங்கள் சிந்தனைக்கு ரி வடிவம் கொடுங்கள்.

தரப்படும் விடயங்களில் ஒன்றினைப் பற்றி கட்டுரையை ஆக்கி அனுப்புங்கள்

30ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு உங்கள் ஆக்கங்களை 28.02.2015இற்கு முன் அனுப்பி வையுங்கள்.

உங்கள் முகவரி உலகிற்கு தெரியவரும் நாள் 14.04.2015 இற்கு ஆகும். ஆம் அன்றைய தினம் பரிசுகள் வழங்கப்படும்:

கட்டுரைப் போட்டிக்கான தலைப்புப் பிரிவுகள் பிரிவு A (600–750 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்'
- 'மாகாணத்துக்கான நிலை பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்'
- 'எமது சட்ட ஒழுங்குகளில் புலம்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்'
- 'எமது பண்பாடும் நாம் படும்பாடும்'
- நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்'

கட்டுரைப்போட்டிக்கான தலைப்புகள் பிரிவு B(400–550 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு'
- 'கிராமியம் எமது உயிர் மூச்சு'
- 'சுற்றாடல் பேணுவோம்'
- 'தமிழர் வாழ்வும் வளமும்'

ஏற்கனவே 2014.12.09,10,11 ஆம் திகதிகளில் உதயனில் அறிவிக்கப்பட்டது போன்று பரிசுத் தொகை அமையும்.

**மகிழ்ச்சிதானே!**

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கிறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:–
செல்வன்/செல்வி ..........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................
கற்கும் பாடசாலை: ....................
தரம்: ..........

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ....................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:....................
ஆசிரியரின் பாடத்துறை: ....................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும்.
செல்வன்/செல்வி ..................... அவர்களது சுய ஆக்கம்
என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்

பத்திரிகையுடன் நாளர்ந்தம் இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெருத்த அவமானம்

அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தினுள் அடிபிடி சண்டையிட்டுக் கொள்வதைத் தமிழ்ச் சனம் தொலைக்காட்சியில் பார்த்து ரசித்து, அதன் மீதொரு வியாக்கியானமும் சொன்னது ஒரு காலத்தில் நடந்தது. பின்னர் இலங்கை நாடாளுமன்றத்திலும் அதுபோன்றதொரு காட்சியை காணும் அளவுக்கு பாவப்பட்ட பிறப்புகளாக இலங்கை வாழ் சனங்கள் மாறிப்போனார்கள். இப்போதோ நிலைமை அதனிலும் மோசமானது; படுகேவலமாகிவிட்டது.

தாம் வாக்களித்துத் தேர்த்தெடுத்துவிட்ட அரசியல்வாதிகளின் அடிபிடி சண்டையைத் தொலைக்காட்சியில் பார்த்துத் தலையில் கை வைத்துக் குந்தியிருக்க வேண்டிய நிலைமை இந்தப் பாவப்பட்ட தமிழ்ச் சனத்துக்கு ஏற்பட்டுவிட்டது.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நடந்தவைகளைக் கருத்தில் கொள்ளும் போது இந்த வர்ணனைகளில் கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. உலகின் சில நாடுகளில் இதற்கு முன்னர் நடந்திருக்கக்கூடிய எந்தவொரு அடிபிடி சண்டைக்கும் சற்றும் சளைத்ததல்ல என்று நிரூபிக்கும் விதத்தில் தமிழ் அரசியல்வாதிகள் நிதானமிழந்து படுகேவலமாக நடந்து கொண்ட காட்சிகள், தமிழ் மக்களை சொல்லொணாத் துன்பத்துக்குள் ஆழ்த்தியுள்ளன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித நாகரிகம் எல்லாவற்றுக்கும் அப்பால் சென்று நடந்துகொண்டுள்ளார்கள் அரசியல்வாதிகள். குறிப்பாக, கற்றறிந்த நீதியரசரொருவர் முன்னிலையில், கொழும்பு அரசின் அமைச்சர் ஒருவர் முன்னிலையில் மாகாண அமைச்சர் மீதும் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் மீதும் தண்ணீர்ப் போத்தல்களால் ஈ.பி.டி.பி. கட்சி அமைப்பாளர்கள் தாக்குதல் நடத்தினர். கோபப்பட்ட மாகாண அமைச்சரும் பதிலுக்குத் தண்ணீர்ப் போத்தல்களை எறிந்தார். கூச்சல், குழப்பம், அடிபிடி, தள்ளுமுள்ளு என்று எல்லாவகையான சீர்கேடுகளுக்கும் பிறகு அந்தக் கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

குழப்பத்தை விரிவாக்கி, தாக்குதல்களை நடத்தியவர்கள் ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளர்களும் ஆதரவாளர்களுமே என்பதற்குப் போதிய ஒளிப்படக் காட்சிச் சான்றுகள் உள்ளன. அதேபோன்று, கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களும் எல்லைமீறிச் செயற்பட்டமைக்கும் கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்தியமைக்கும் போதிய ஒளிப்படச் சான்றுகள் உள்ளன.

தமிழ் மக்கள் தமிழ் அரசியல்வாதிகளிடம் எதிர்பார்ப்பது இப்படிப்பட்ட அடிபிடி சண்டைகளையும், கூச்சல் குழப்பங்களையும் அல்ல என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் எப்போதும் தமது உணர்வுகளைக் கட்டுக்குலைய விடாமல் வைத்திருக்க வேண்டிய முன்னுதாரணங்களாக இருக்க வேண்டியவர்கள். வழிகாட்டிகளாகச் செயற்படவேண்டியவர்கள். அதையெல்லாம் விடுத்து, அவர்கள் மிகக் கேவலமாக நடந்துகொண்டமை தமிழ் மக்களுக்குப் பெருத்த அவமானம். இது வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்கது. இதுபோன்று இனியொரு சந்தர்ப்பத்தில் நடப்பதற்கு அரசியல்வாதிகள் இடமளிக்கக்கூடாது. பொது இடத்தில் பொது நாகரிகத்துடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அரசியல்வாதிகள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மக்களும் அவர்களிடமிருந்து அந்தப் பண்பைக் கற்றுக்கொள்ள முடியும்.

# கட்சி மாறிய திஸ்ஸவுக்கு உடனடி உச்சக் கௌரவம் அரச தரப்புக்குள் அமைச்சர்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

திஸ்ஸ அத்தநாயக்க – ஐ.தே.கவின் முன்னாள் பொதுச் செயலாளர், அரசு பக்கம் தாவியமைக்கான காரணங்கள் பலவற்றை இப்போது கூறிவந்தாலும், இரண்டு வருடகாலமாக ராஜபக்ஷவுடன் தொடர்புகள் வைத்திருந்துள்ளார் என்ற சங்கதி இப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அது ஒரு புறமிருக்க, சுமார் 100 அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட இன்னமும் அனுபவிக்காத கௌரவமும் அந்தஸ்த்தும் அவருக்கு உடனடியாகக் கிடைத்துள்ளன. ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களில் அவரது பரிவாரங்களில் ஒருவராகச் சென்றுவர பலபேர் ஆவலாய் இருக்கக்கூடிய நிலையில், தனது கட்சி மற்றும் தலைவர்கள் மீது வைத்திருந்த விசுவாசத்தை மாற்றிக் கொண்டவுடனேயே அரசுத் தரப்பின் உச்சக்கட்ட கவனிப்புக்கு உயர்த்தப்பட்டதுடன் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயண பரிவாரத்திலும் இடம்பிடித்துக் கொண்டார் திஸ்ஸ. பின்னர் அமைச்சரவையிலும் அமர்த்தப்பட்டுவிட்டார்.

வாக்காளர் வங்கி எதுவும் இல்லாத நிலையில் ஐ.தே.க. தேசிய பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் அவர். ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் என்ற முறையிலேயே அவருக்கு மதிப்பு. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன எதிர்த்தரப்புக்குச் சென்றதால் அதற்கு ஈடாக ஐ.தே.கவின் பொதுச் செயலாளரின் வருகை அமைந்துவிட்டதாக அரசு தரப்பினர் திருப்தி அடைந்துள்ளனர்.

திருப்பதி வெங்கடேஸ்வரர் கோயில் தரிசனத்துக்கென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விமானத்தில் குடும்பத்தோடும் பரிவாரங்களோடும் புறப்பட்டபோது அத்தநாயக்கவும் அவர்களில் ஒருவராகப் பயணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

காலதாமதம் காரணமாக அதிகாலை சுவாமி தரிசனம் அத்தநாயக்கவுக்கு கிடைக்கவில்லை. அடுத்த கட்டம் வாயில் திறக்கப்பட்டபோது பொது மக்களோடுதான் அவரால் உள்ளே செல்ல முடிந்தது. ராஜபக்ஷ குடும்பத்தின் திருப்பதிப் பயணத்துக்கான ஏற்பாடுகளை, கொழும்பு வர்த்தகரும் கொழும்பு ஹில்ரன் தலைவருமான நடேசன் செய்திருந்தார். நீர் வழங்கல் மற்றும் வடிகால் துறை பிரதி அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷவின் கணவர் இவர்.

### ஆந்திரமுதல்வர் வரவில்லை

ராஜபக்ஷ திருமலை வந்து சேர்ந்தபோது அரச மரியாதைகள் வழங்கப்பட்டிருந்தாலும், வரவேற்பில் கலந்துகொள்ளாத முக்கியஸ்தர்களில் ஒருவராக ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளார். ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்த தமிழ்நாட்டவர்களை பகைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை என்று கூறப்பட்டது.

ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் மேலும் பல விருதுகள் அத்தநாயக்கவுக்குக் கிடைத்தன. முன்னர் சிறிசேன வகித்த சுகாதார அமைச்சர் பதவியில் அமர சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். அந்தப் பதவி தமக்குக் கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்த பதில் அமைச்சர் லலித் திஸ்ஸநாயக்கவுக்கு இது பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. சிறிசேன கட்சிமாறியதும் பதில் அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர் அமைச்சில் சமய வைபவம் ஒன்றை நடத்தியிருந்ததுடன் அந்த நிகழ்வுக்கு குடும்ப உறுப்பினர்களையும் அழைத்து வந்திருந்தார். அமைச்சரின் அலுவலகத்தையே பயன்படுத்தவும் தொடங்கியிருந்தார். இனிப் பழையபடி தமது பிரதி அமைச்சர் அலுவலகத்துக்கு அவர் திரும்பிவிட வேண்டும். இந்தப் பதவிக்காகக் காத்துக் கொண்டிருந்த வேறு சிலருக்கும் இந்த நியமனத்தால் மனத்தாங்கல் ஏற்பட்டுள்ளமை இரகசியமன்று.

அத்தநாயக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் சேர்வதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டிருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது. பல்கலைக்கழகக் காலத்தில் சகாக்களாக இருந்து இப்போது ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரியும் சிரேஷ்ட அதிகாரி ஒருவருடன் அவருக்கு தொடர்ச்சியான நெருக்கம் இருந்துள்ளது. அத்துடன் தான் மேற்கொள்ளும் தொடர்புகள் பற்றி எதுவும் கசிந்துவிடாமல் இருப்பதிலும் அவர் கவனமாக இருந்துள்ளார். இறுதியில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதும் ஜனாதிபதியின் அருகில் போய் அமர்ந்துகொண்டார்.

அத்தநாயக்க ஐ.தே.க. தலைவருக்கு எழுதிய பதவி விலகல் கடிதத்தில் தங்களைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது குறித்து மூவர் கோபமுற்றுள்ளனர். அத்தநாயக்க ஐ.தே.கவின் பொது செயலராவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவரான மனிக் சமரவிக்கிரம கூறுகையில், "சமீபகாலமாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி தலைவர்களுடன் அவர் நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பது எமக்குத் தெரிய வந்திருந்தது. இந்த மாதிரி சந்தேகத்துக்குரியவருடன் இயற்கையாகவே நாங்கள் இரகசிய விடயங்களைப் பகிர்ந்து கொள்ளாமல் இருந்து வந்தோம். அத்தநாயக்கவை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தூக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் இருந்து அவரை நான் தப்ப வைத்தேன் என்பது கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியும்" என்றார்.

கட்சி மாறியதன் பின்னர் அத்தநாயக்க அனுராதபுரத்தில் நடந்த அரசுத் தரப்புக் கூட்டத்தில் முதல் தடவையாக பகிரங்கமாகத் தோன்றினார். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான பஸ்களில் மக்கள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருந்தார்கள். இது பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பெரும் சங்கடமாகப் போய்விட்டது.

அதேபோல் சிறிசேனவும் ஏனைய தலைவர்களும் நடத்திய திறந்தவெளிக் கூட்டத்துக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் நிறைந்து காணப்பட்டார்கள். 1977 நாடாளுமன்றத் தேர்தல் கூட்டத்துக்குப் பின்னர் இப்பொழுது தான் இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தைத் தாம் காண்பதாக ரணில் விக்கிரமசிங்க தமது சகாக்களிடம் கூறியுள்ளார்.

தேசிய ஜனநாயக முன்னணி 60 பக்கங்கள் கொண்ட நீண்ட அறிக்கையொன்றையும் 4 பக்கங்கள் கொண்ட சுருக்கமான அறிக்கையொன்றையும் வெளியிடவிருக்கின்றது. இரண்டாவது அறிக்கையில் காணப்படும் முக்கிய அம்சங்களில், அரசுத் தரப்பு பணியாளர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வு, பெற்றோல் விலையை 50 ரூபாவால் குறைப்பதுடன் ஏனைய பெற்றோலிய பொருள்களின்விலையும் குறைப்பது. சமுர்த்திக் கொடுப்பனவுகளை இரண்டு மடங்காக்குவது, மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கு அரசு தரப்பினருக்கு வழங்கிய கடன்களை தள்ளுபடி செய்வது, நெல்லின் உத்தரவாத விலையை கிலோ 50 ரூபாவாகவும், உருளைக் கிழங்கை 80 ரூபாவாகவும் உயர்த்துவது, தனியார் துறையினரின் சம்பளத்தை உயர்த்துவது ஆகியவை உள்ளடங்கும். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது தொடர்பான நிகழ்ச்சித் திட்டமும் அதில் அடங்கியிருக்கும்.

மவ்பிம
பத்திரிகையிலிருந்து
தமிழில் வீ.எஸ்.ரி

# மஹிந்தர் தோற்றுப் போனால் என்ன நடக்கப் போகின்றது?



> இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை வகித்த எவரும் இதுவரை தேர்தலில் தோல்வி கண்டதில்லை. அதற்கான காரணம், நிறைவேற்று ஜனாதிபதியொருவர் இரு தடவைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாதென ஜே.ஆரின் அரசமைப்பு விதிகளில் விதிக்கப்பட்டுள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற அரச சார்பற்ற நிறுவனமொன்றான 'இன்ரர்நஷனல் கிறைப்ஸ் குரூப், கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையொன்றில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுறுவாரானால், இலங்கையில் இராணுவ ஆட்சியொன்று ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை வகித்த எவரும் இதுவரை தேர்தலில் தோல்வி கண்டதில்லை. அதற்கான காரணம், நிறைவேற்று ஜனாதிபதியொருவர் இரு தடவைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாதென ஜே.ஆரின் அரசமைப்பு விதிகளில் விதிக்கப்பட்டுள்ள தடையேயாகும்.

இந்தத் தடை காரணமாக முதல் தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ஒருவர், தமது பதவிக்கால முடிவில் தாம் நாட்டு மக்களது அதிருப்திக்கு உள்ளாகக் கூடுமா என்ற அச்சம் காரணமாக, தமது முதலாவது பதவிக் காலத்தின் முதல் நான்காண்டுகள் காலம் பூர்த்தியான பின்னர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த இயலுமென்ற உபவிதி அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஜே.ஆரும் சரி, சந்திரிகாவும் சரி தத்தமது இரண்டாவது பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் முடிவில், பொது மக்களது அதிருப்திக்கு உட்பட நேர்ந்தது.

இந்திய –இலங்கை ஒப்பந்தம் காரணமாக ஜே.ஆரும், 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி தோல்வி கண்டதனால் சந்திரிகாவும் நாட்டு மக்களது ஆதரவை இழக்க நேர்ந்தது.

அந்த வகையில் நோக்கும் போது மஹிந்த இந்தமுறை தேர்தலில் தோல்வியடைய நேருமானால் தோல்வியுற்று அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற முதலாவது ஜனாதிபதி என்ற பெயர் மஹிந்தவுக்கு ஏற்படும்.

தத்தமது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் முதல் நான்காண்டுகள் கழிந்த வேளை, ஜே.ஆரும் சந்திரிகாவும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தமை போன்றே தற்போது மஹிந்தவுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

தோல்வியின் வேதனை குறித்து மஹிந்த அனுபவம் இல்லாதவரல்ல, 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவர் தோல்வியைச் சந்தித்தவரே.

மீண்டும் 1989இல் நாடாளுமன்றத்துள் பிரவேசித்த அவர் 2001ஆம் ஆண்டில் தமது அமைச்சர் பதவியையும் இழக்க நேர்ந்தது. ஜனாதிபதிப் பதவி மற்றும் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி என்பவற்றை ஒரு சேர இழப்பதென்பது மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றப் பதவிகளை இழந்தமையுடன் ஒப்பிட்டு நோக்க இயலாததொன்று.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்ட ஜே.ஆர்., 1994ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதைக் கண்டு அச்சமடைந்தார். சிறிமாவோ நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றால், தான் அவரது பிரஜா உரிமையைப் பறித்த குற்றத்துக்காக சிறிமாவோ தம்மைப் பழிவாங்க முயலக் கூடுமென ஜே.ஆர். எண்ணினார். 1994 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் முடிவடைந்தவேளை, சுதந்திரக் கட்சிக்குள் குழப்பமொன்றை ஏற்படுத்தி விடக் கருதி சிறிமாவோவைப் பிரதமர் பதவியை ஏற்கும்படி கோருவதற்கு அவ்வேளைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க திட்டமிட்டபோது ஜே.ஆர்.அந்த விடயத்தில் தலையிட்டு சந்திரிகாவையே பிரதமர் பதவியை ஏற்கக் கோருமாறு ஆலோசனை வழங்கினார். சிறிமாவோ பிரதமராகப் பதவியேற்றால், பதவியிலிருந்து தான் ஓய்வு பெற்றிருந்தாலும் கூட, ஏதோ வகையில் சிறிமாவோ தம்மைப் பழிவாங்க முயலக் கூடும் என்ற அச்சமே அவரது அந்தத் தலையீட்டுக்கான காரணமாகும்.

தற்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மஹிந்தவுக்கும் ஜே.ஆருக்கும் அன்று ஏற்பட்டிருந்தமை போன்ற அச்சம் – இரண்டோ மூன்றோ பங்கு அதிகமான அச்சம் மனதில் எழுந்திருக்கக் கூடும். இன்று சந்திரிகா, மைத்திரிபால சிறிசேனவை வழிநடத்தும் ஒருவராக இருப்பதே அதற்கான காரணமாகும். 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மஹிந்த, சந்திரிகாவின் பிறந்ததினத்தன்று சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைச் சந்திரிகாவிடமிருந்து பறித்துக் கொண்டார். இத்தகைய பின்னணியில் தாம் இந்தத் தேர்தலில் தோல்வியுற நேர்ந்தால்,சந்திரிகா தனது அரசியல் வாழ்க்கையை மட்டுமன்றி, தமது குடும்பத்தின் அரசியல் வாழ்க்கையையும் அழித்து விட முயல்வார் என்ற அச்சம் மஹிந்தவின் மனதில் தோன்றுவது இயல்பானதே.

> இந்திய இலங்கை ஒப்பந்தம் காரணமாக ஜே.ஆரும், 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி தோல்வி கண்டதனால் சந்திரிகாவும் நாட்டு மக்களது ஆதரவை இழக்க நேர்ந்தது. அந்த வகையில் நோக்கும் போது மஹிந்த இந்தமுறை தேர்தலில் தோல்வியடைய நேருமானால் தோல்வியுற்று அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற முதலாவது ஜனாதிபதி என்ற பெயர் மஹிந்தவுக்கு ஏற்படும்.

மஹிந்தவின் இந்த அச்சத்தை மதிப்பிட்டே இந்தத் தேர்தலில் மஹிந்த தோல்வியுற நேர்ந்தாலும் அவர் ஜனாதிபதிப் பதவியைக்கைவிடப்போவதில்லை என சர்வதேச அமைப்புகள் கூட எதிர்வுகூற முனைகின்றன. ஆனால் தென் ஆசிய வட்டகையில் தமது அயல் நாடொன்றில் இராணுவ ஆட்சி உருவாக தென் ஆசிய வட்டகை நாடுகளின் மூத்த அண்ணன் போன்ற இந்தியா இடமளிக்கும் எனக் கருதமுடியாது. அவ்விதம் இராணுவ ஆட்சியொன்று ஏற்படுமானால் கூட, இந்தியா அதில் நிச்சயம் தலையீடு செய்தே ஆகும். அண்மையில் இலங்கைக்குப் பயணமொன்றை மேற்கொண்ட இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் டொவால், இந்து சமுத்திர பிரதேசம் அமைதி வட்டகையாக இருக்க வேண்டுமெனக் கருத்து வெளியிட்டிருந்தமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. இதுவொரு வகையில் இலங்கையில் இராணுவ ஆட்சியொன்று ஏற்படுமானால், அது சமாதானத்துக்கும் அமைதிக்கும் ஊறுவிளைவிப்பதாக அமையுமென அவர் சொல்லாமற் சொல்லிச் சென்றிருக்கிறார் எனக் கருத இயலும்.

தாம் இந்தத் தேர்தலில் தோல்வியடைய நேர்ந்தால் இராணுவ நிர்வாகமொன்றை உருவாக்கித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மஹிந்த ஒன்றும் விவேகமற்ற ஒருவரல்ல. தம்மீது போர்க் குற்றச்சாட்டைச் சுமத்தி போர் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தின் முன் தன்னை நிறுத்தக் கூடுமென்ற அச்சம் மஹிந்தவுக்கு இருக்குமானாலும் அதற்கு இந்திய அரசு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள்சபையில்அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமைக்கான காரணமே, தான் அதற்கு ஆதரவாக வாக்களித்தால், காஷ்மீரில் போர்க் குற்றங்கள் மேற்கொண்டதாக தன்மீதும் அத்தகைய குற்றச்சாட்டு சுமத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே ஆகும். ஆதலால் தேர்தலில் மஹிந்த தோல்வியுற நேர்ந்தாலும் மஹிந்த மீது எவர்தானும் கைவைக்க இந்தியா அனுமதிக்கப் போவதில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதியொருவர் தேர்தலில் ஒருபோதும் தோல்வி கண்டதில்லை என்று கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். அதற்கமைய இடம்பெறவுள்ள தேர்தலில் மஹிந்தவின் வெற்றி வாய்ப்பு இருப்பதாகவே தென்படுகிறது. அதே போன்று இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியொருவர், தமது இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் நான்காண்டுகள் நிறைவில், தமது மக்கள் ஆதரவு நலிவடைந்து போயுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலொன்றைப் பிரகடனப்படுத்தியமை இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும்.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### உயிர்களுடன் விளையாட வேண்டாம்

யாழ்.குடாநாட்டில் காணப்படும் நிலத்தடி நீர் மிகவும் மோசமான நிலைக்கு மாறியுள்ளதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்த கதைபோன்று ஏற்கனவே மோசமான நிலைக்கு மாறியுள்ள நிலத்தடி நீரில் கழிவு எண்ணெயும் கலந்து நீரைப் பயன்படுத்த முடியாத அவல நிலை உருவாகியுள்ளது.

மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு சுத்தமான நீர் அவசியமானது என்பதை அனைவரும் அறிவாளர்கள். மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு சுத்தமில்லாத நீரே பிரதான காரணமெனவும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் லட்சக்கணக்கான மக்கள் இரசாயனங்களும், கழிவு எண்ணெயும் கலந்த நீரைப் பருகுவதால் ஏற்படப்போகும் எதிர் விளைவுகள் மோசமாகவே இருக்கப்போகின்றன.

மனிதர்களின் அழிவுக்கே இது வழிவகுக்கப் போகின்றது.

ஆகவே இந்தப் பேரிடரிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்குரிய நடவ்டிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். வெறுமனே இரணைமடு, நிலாவரை, கடல்நீர் எனக் கூறிக் கொண்டு காலத்தைக் கடத்தாது மக்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வினாடியும் ஏற்படும் காலதாமதம் மக்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

மக்களின் உயிர்களுடன் விளையாடுவதற்குரிய தருணம் இது வல்ல என்பதையும் உரியவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். உடனடி நடவடிக்கைகளே இங்குள்ள மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உதவும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*ம.ஜெகதீசன்,*
*தெல்லிப்பழை.*

### ஆக்கபூர்வமான மரநடுகைத் திட்டம்


வடமாகாண சபை விவசாய அமைச்சு 2015ஆம் வருட கார்த்திகை மாதத்தை, மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியதுடன் பல்வேறு-வகையிலான மரநடுகைத் திட்டங்களையும் முன்னெடுத்து ஆக்கபூர்வமான ஒரு நற்செயலை மேற்கொண்டமை நம் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அத்துடன் குறிப்பிடத்தக்க வகையில் பல்வேறு தரப்பினரும் தாமாகவே முன்வந்து மரக்கன்றுகள் மற்றும் பயன்தரு விருட்சங்களையும் நடுகை செய்து தமது சுற்றுச்சூழல் தொடர்பான கடமையை மிகவும் சிறப்பாக மேற்கொண்டிருந்தமை சிறந்த தோர் முன்னுதாரணமாகும். பாடசாலைகள், அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், கூட்டு றவுத்துறை அலுவலகங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து தன்னார்வத் தொண்டர் கள் மற்றும் நிறுவனங்கள் என அனைத்துத் துறையினரும் மேற்படி செயலை மிகவும் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர்.

விடயம் யாதெனில், மரக்கன்றுகளை நடுவது என்பது அனைவராலும் மேற்கொள்ளப்பட முடியும் என்பதுடன் அவற்றை வளர்த்து விருட்சமாக உருவாக்குவதிலேயே அதன் நோக்கம் முழுமையடையும் என்பதாகும். பிரதிபயன் கருதாமல் நம் முன்னோர்களால் முதலீடு செய்யப்பட்ட சுற்றாடல் மற்றும் இயற்கையோடிணைந்த சேமிப்பிலேயே எம்மால் இன்றுவரைக்கும் ஆரோக்கியமான ஒரு வாழ்க்கையை அனுபவிக்க முடிகின்றது எனில் அது மிகையல்ல. 2009ஆம் வருடத்துக்கு முன்னரான காலப்பகுதியில் மரக்கன்றுகள் நடப்படுவது மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டதுடன் அந்த மரக் கன்றுகளை முழுமையான விருட்சமாக வளர்த்தெடுக்கவும் அனைத்து சாத்தியமான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டமை அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இன்றும் அவ்வாறான பயன்தரு விருட்சங்களை நாம் அவதானிக்க முடிகின்றது.

எனவே மேற்படி நிலைமைகளின் அடிப்படையில் மரக் கன்றுகளை நடுவதுடன் மட்டும் நின்றுவிடாது, அவற்றை வளர்த்தெடுத்து எதிர்கால சந்ததியினருக்கு வளமானதோர் சூழலை கையளிப்பதற்கு ஆவன செய்வதற்கு அனைவரும் உறுதிபூணுவோம்.

*விமல்,கொக்குவில்.*

கேலிச் சித்திரம்



நன்றி: டெய்லிமிரர்

### அதிக விருதுகள் பெற்ற நிறுவனமாக திகழும் லியோ பேர்ணெற் ஸ்ரீலங்கா

லியோ பேர்ணெற்ஸ் சொல்யூஷன்ஸ் ஆனது, கம்பெயின் ஆசியாவின் பெருமைமிகு ஆண்டுக்கான தென்ஆசிய முகவர் நிலையம் விருதுகள் 2014 நிகழ்வில், அதிகபட்ச விருதுகளை வென்ற தனியொரு முகவர் நிலையம் என்ற பெயரைப் பெற்ற தன் மூலம், இலங்கை தொடர்பாடல் தொழிற்றுறையின் சரித்திரத்தில் புதியதொரு சாதனையை படைத்துள்ளது. எல்.பி. எஸ்.ஐ. மற்றும் அதன் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவான ஆர்க் வேர்ள்வைட் ஆகியன ஆண்டுக்கான கூட்டாண்மை தொடர்பாடல் குழாம் பிரிவில் தங்க விருதினையும், பொதுமக்கள் தொடர்பாடல் முகவர் நிலையம் பிரிவில் வெண்கல விருதினையும் பெற்றுக் கொண்டது. எல்.பி.எஸ்.ஐ. இன் சித்தும் வோல்ட்டர் இளம் சாதனையாளர் பிரிவில் தங்க வீருதினைப் பெற்றுக்கொண்டார்.



லியோ பேர் ணெற்ஸ் ஆண்டுக்கான மிகச் சிறந்த டிஜிற்றல் முகவர் நிறுவனம் பிரிவில் வெள்ளி விருதினையும், ஆண்டுக்கான விருது கருத்தாக்கம்மிக்க முகவர் நிலையம் பிரிவில் வெண்கல விருதினையும் தனதாக்கிக் கொண்டது.

இந்தியாவின் மும்பை நகரில் இடம் பெற்ற கம்பெயின் ஆசியா விருதுகள் பிராந்தியத்தின் அதி சிறப்பு மிக்கதும், அனைவராலும் எதிர் பார்க்கப்படுவதுமான மாபெரும்விளம்பரப்படுத்தல் தொழிற்றுறை நிகழ்வாக திகழ்கின்றது.

இலங்கையில் கூட்டாண்மை தொடர்பாடல் பிரிவின் கீழ் தங்கவிருதினைப்பெற்றுக்கொள்ளும் முதன்மை முகவர் நிலையமாக லியோ பேர்ணெற் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மாபெரும் சாதனையை நிறைவேற்றியமையை கோலாகலத்துடன்கொண்டாடும்இலங்கை பெர்ணெற்றர்ஸ் அனைவரும், மும்பையிலிருந்துதாயகம்வரும் தென்ஆசிய விருதுகள் 14 வென்ற வெற்றிக் குழுவினருக்கு சிறப்பான வரவேற்பை அளிப்பதற்கு தயாராகக் காத்திருக்கின்றனர்.

லியோ பேர்ணெற்ஸ் இலங்கையில் தமது 15 வருட செயற்பாடுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், இந்நிறுவனமானது, வலுவான வர்த்தக நாமங்களை கட்டமைப்பதற்கும், தமது வாடிக்கையாளர்களுடன் அர்த்தமுள்ள பங்குடைமையைபேணவும்அதன்செயற்திறனை உபயோகித்தவாறு, சக பணியாளர்கள் மத்தியில் திருப்திகரமான முடிவுகளை அளித்தவாறு அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்கின்றது. (த)

### 100 நாள்களில் நாடு முழுவதும் 200 வலையமைப்பு நிலையங்கள்

#### எடிசலாட் நிறுவனம் ஏற்படுத்தும்

நாடு முழுவதும் 100 நாள்களில் மேலும் 200 வலையமைப்பு நிலையங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் சிறந்த சேவையை அனுபவிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், எடிசலாட் லங்கா, எதிர்வரும் 100 நாள்களில் 200 வலையமைப்பு நிலையங்களை அமைக்க முன்வந்துள்ளது.

தனது வலையமைப்பு கொள்ளளவ விஸ்தரிப்பு திட்டத்துக்கமைய இந்த நிலையங்களை அமைக்க எடிசலாட் முன்வந்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து சிறந்த சேவை களை வழங்கும் வகையில் தன்னை அர்ப்பணித்துள்ள மைக்கான மற்றுமொரு எடுத்துக்காட்டாக இந்த விஸ் தரிப்பு நடவடிக்கை அமைந்துள்ளது.

நாடு முழுவதும்வலையமைப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் அமையும் என்பதுடன், வலையமைப்பு உட்கட்டமைப்பு விஸ்தரிப்பு செயற்பாடுகளுக்கு அமையவும் அமைந்துள்ளது.

புதிதாக அமையவுள்ள வலையமைப்பு நிலையங்களில் 2G மற்றும் 3G கோபுரங்கள் போன்றன நாட்டின் 8 மாவட்டங்களில் அமையவுள்ளன.

தொடர்ச்சியான சேவை மேம்பாட்டுக்காக எடிசலாட் லங்கா காண்பிக்கும் முதலீடுகளுக்கு அமைய, தற்போதைய திட்டம் 2015 ஜனவரி 31ஆம் திகதியளவில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வலையமைப்பில் அதிகரித்துச் செல்லும் டேடா பாவனைக்கான தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த விஸ்தரிப்பு நடவடிக்கை அமைந்திருக்கும் என்பதுடன், நகரங்களுக்கு அப்பாலுள்ள வாடிக்கையாளர்கள் தமது கையடக்க தொலைபேசிகளை ஸ்மார்ட்ஃபோன் ஒன்றுக்கு மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்குச்சிறந்த 3G வலையமைப்பு சேவைகளை அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். 2015 இல் எடிசலாட் லங்கா வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த நிலையை எய்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். (த)

# சிறுவர்

## அறிந்தும் அறியாதவை



- ★ ஆஸ்திரேலியாவில் உள்ள கோலா என்ற விலங்கு தண்ணீர் குடிப்பதில்லை. ஏனென்றால், அது உணவாக உட்கொள்ளும் யூகலிப்டஸ் மரக்கிளைகள் மூலம் அதற்குத் தேவையான நீர் கிடைத்து விடுகிறதாம்.
- ★ ஈ, எறும்பு போன்ற பூச்சிகளுக்கு கேட்கும் சக்தி இல்லை.
- ★ வண்டு, தேனீ, குளவி போன்றவை தமது கொடுக்கை ஒரே ஒரு முறைதான் கொட்டுவதற்குப் பயன்படுத்த முடியும். ஒரு முறை கொட்டியவுடன் கொடுக்கு ஒடிந்து விடுகிறது.
- ★ உலகில் ஆயிரக்கணக்கான நிறங்கள் காணப்பட்டாலும், இதுவரை 267 நிறங்களுக்கு மட்டுமே பெயரிடப்பட்டுள்ளன.
- ★ பறவைகள் இலந்தை மரத்தில் மட்டும் கூடு கட்டுவதில்லை. இதுபோல் பறவைகள் வெறுக்கும் ஒரே பழம் இலந்தைப் பழம் தானாம்.
  வெட்டுக்கிளிகளுக்குக் காதுகள் அவற்றின் தலைப்பகுதியில் இல்லை, கால்களில் தான் இருக்கின்றன.
- ★ வெளவாலுக்கு கண் பார்வை கிடையாது. தான் பறக்கும் போது உண்டாகும் காற்றலைகளின் அதிர்வைக் கொண்டு எதிரிலிருக்கும் சுவர், வழி போன்றவைகளை அறிந்து கொள்கின்றது.
- ★ கரப்பான் பூச்சியின் இரத்தத்தில் சிவப்பணுக்கள் இல்லை. எனவே அதன் இரத்தம் வெள்ளை நிறத்திலிருக்கிறது.
- ★ கொசுக்களில் 2,426 வகைகள் இருக்கின்றன.
- ★ தேனீயின் விசம் 'எபிடாக்சின்' எனப்படுகிறது. இந்த விசம் வாத நோய், நியூரைட்டிஸ், நியூரால்ஜியா போன்ற பல நோய்களைத் தீர்க்கக் கூடியது.


## தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பதற்கு தேசிய அடையாளஅட்டை அவசியம் என்பதை நீங்கள் அறிவீர்களா?**

- ➡ உங்களது தேசிய அடையாள அட்டை இல்லைஎனில்.
- ➡ உங்களது தேசிய அடையாள அட்டை தெளிவில்லை எனில்.
- ➡ உரிய ஆவணங்கள் இல்லாமையால் அடையாள அட்டையைப் பெறமுடியவில்லை எனில்.

**நீங்கள் புதிய அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு**

- ➡ உங்களது பிறப்புச் சான்றிதழ் அல்லது
- ➡ பிறப்புச் சான்றிதழ் இல்லாதவிடத்து அண்ணளவான வயதை உறுதிப்படுத்தக் கூடிய ஜாதகக் குறிப்பு அல்லது
- ➡ பாடசாலை விலகல் சான்றிதழ் அல்லது
- ➡ திருமணப் பதிவுச் சான்றிதழ் அல்லது
- ➡ பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
- ➡ தங்களது வயது தொடர்பில் உறவினர் ஒருவரால் வழங்கப்படும் சத்தியக் கடதாசி ஒன்றை எடுத்து வரவும்
- ➡ உங்களது பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதற்குரிய ஆவணங்களைக் கொண்டு வரவும்.

**உங்களது பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று இல்லை எனில் அதைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக உள்ளோம்.**

### 2014 டிசம்பர் 18

**காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

**கரைத்துறைப் பற்று பிரதேச செயலகம்**

**புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம்**

**முல்லைத்தீவு பிரதேச செயலகம்**

**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்கொள்ளும் நடமாடும் சேவையாகும்.**

அமுல்படுத்தும் பங்காளர் AFRIEL வவுனியா பிரதேச செயலகம்





## மரண அறிவித்தல்கள்



### திருமதி நாகபிள்ளை மாணிக்கம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் வேலணையில் வசித்து வந்தவருமாகிய திருமதி நாகபிள்ளை மாணிக்கம் 15.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் (ஆசாரி) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாதம் (டென்மார்க்), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பவளராணி (சுவிஸ்), குணபாதம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் தவராணி (டென்மார்க்), சிவஞானசுந்தரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருமாலவன் மற்றும் சக்தி, ரஜனி, கஜன் (டென்மார்க்), கமலக்கண்ணன், விமலக்கண்ணன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுகந்தி மற்றும் விஜிதா (சுவிஸ்), விஜயகாந்தன் (சுவிஸ்), விஜிதரன், விசித்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஸ்வா, விக்கேஸ், லக்ஸ்மிநாத், லக்ஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.12.2014) செவ்வாய்க்கிழமை வேலணையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் அம்பலவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களாவடி, காளிகோவிலடி,
வேலணை-06. (55000) (4.6.3)

தகவல்:
மகன்-மா.சிவபாதம்.



### இராஜேஸ்வரி இராசதுரை

ஏழாலை மேற்கு, கோட்டைக்காடு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி இராசதுரை 15.12.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், இராசதுரை (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜீவா (லண்டன்), ரஞ்சனா (கனடா), பிரதீபா (நெதர்லாந்து), ரெனிகா ஆகியோரின் அன்புத் தாயும், அனுசுயதீபா, ரவீந்திரராஜா, சதீஸ்குமார், ஜெஸ்லி ஆகியோ ரின் அன்பு மாமியும், தவமணி, அன்னரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, விஜயராணி, நவரட்ணம், கயிலங்கிரி நாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வர்ஷா, வருண், தீப்திகா, அஞ்சனா, ஆரணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
கோட்டைக்காடு, சுன்னாகம். (55006) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.



### பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் சண்முகநாதன்
(பறாளாய், சுழிபுரம்)

பறாளாய், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மஸ்கன்ஸ் லிமெட் - முன்னாள் கணக்காளராகவும், இந்தியாவில் பிள்ளையார்பட்டி தஞ்சாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் -சண்முகநாதன் 15.12.2014 திங்கட் கிழமை அதிகாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜஐயர் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமிக் குருக்கள் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்னக்குருக்கள், சோமாஸ்கந்தக் குருக்கள், ஜெயலட்சுமி மற்றும் இராஜராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சபேச சர்மா, காலஞ்சென்ற இராமச்சந்திரசர்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரி (கொட்டாஞ்சேனை) காலஞ்சென்றவர்களான சிவராஜஐயர் சோமாஸ் கந்தக்குருக்கள் மற்றும் சண்முகநாதன் (கொட்டாஞ்சேனை), உமாமகேஸ் வரி, இராகினிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி ச.பவானி
(இந்தியா - 0091-999 480 7084)
(55016) (45.3)

தகவல்: ந.சபேசசர்மா,
பறாளாய், சுழிபுரம்.
T.P.077 206 2427

## செய்திகள்

# என் கணவர் நகுலன் உயிருடன் உள்ளார்

### புலிகளின் தளபதியின் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

போரின் இறுதியில் எனது கணவரும், அவரது நண்பர்களும் அருட்தந்தை பிரான்சிஸுடன் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். சரணடைந்து 5 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் இல்லை. எனது கணவர் உயி ருடன்தான் இருக்கின்றார். அவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்று, இம்ரான்கான் படையணியின் தளபதிகளில் ஒருவராக இருந்த ராகுலனின் மனைவி நேற்று சாட்சியமளித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு, வவுனியா நகர் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரூபன் மீனலோஜினி என்ற தளபதி ராகுலனின் மனைவி தனது சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்காலில் இருந்து வட்டுவாகல் ஊடாக நான் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் முன்னரே வந்துவிட்டேன். எனது கணவர், அவரது நண்பர் பிரேமதாஸாவுடன் வந்தார். நண்பரது குடும்பமும் அவர்களுடன் வந்தார்கள்.

வட்டுவாகல் பாலத்தடியில் வைத்து, அருட்தந்தை பிரான்சிஸ் முன்னிலையில் எனது கணவரும், அவருடைய நண்பர் பிரேமதாஸாவும் சரணடைந்தனர். இதனை அவரது நண்பருடைய குடும்பத்தினர் எனக்குத் தெரிவித்தனர். எனது கணவர் கொடுத்து விட்ட 10 ஆயிரம் ரூபா பணத்தையும் கொண்டு வந்து தந்தனர்.

எனது கணவரும், அவருடைய நண்பரும் இராணுவத்தினரிடமே சரணடைந்தனர். இராணுவத்தினரிடம் சரணடைந்த அவர்கள், 5 வருடமாக எங்கே? அவர்களை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார். (த–5)

# புளொட் அமைப்பினரே என் மகனை கடத்தினர்

### ஆணைக்குழு முன்பாக தாயார் ஒருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

புளொட் அமைப்பினரே எனது மகனை வெள்ளைவானில் கடத்தினர். இன்று வரையில் எனது பிள்ளை வீடு திரும்பவில்லை. எனது பிள்ளையை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்று ஆணைக்குழு முன்பாக தாயார் ஒருவர் கேட்டுக் கொண்டார்.

கற்குழியைச் சேர்ந்த தாயார் ஒருவர் சாட்சியமளித்தார். எனது மகன் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டான்.

இரண்டாம் குறுக்குத் தெருவில் ரயர் கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தவன். அப்போது பின்னேரம் 5.45 மணிக்கு, வெள்ளை வான் கடைக்கு முன்பாக வந்து நின்றுள்ளது. வெள்ளை வானின் ரயரை கழற்றி மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இதற்காக எனது மகன் வானுக்கு அருகில் செல்லும்போது அவனை வெள்ளை வானில் பிடித்துச் சென்று விட்டார்கள்.

இதனைக் கடையில் வேலை செய்த இன்னொருவரே எனக்குத் தெரிவித்தார். கோயில் குளத்தில் இருந்த புளொட் அமைப்பினரின் முகாமுக்கே வெள்ளை வான் சென்றதாகத் தெரிவித்தனர். நான் அங்கு சென்று கேட்டபோது புளொட் அமைப்பினர் இரவு வரையில் காத்திருக்குமாறு கூறினர். தாங்கள் விசாரணை செய்துவிட்டுச் சொல்வதாகத் தெரிவித்தனர். பின்னர் அவரைப் பிடிக்கவில்லை என்று மறுத்தனர். இன்றுவரை எனது மகன் வீடு திரும்பவில்லை என்று தெரிவித்தார் தாயார்.

இதேவேளை, இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த இன்னொரு தாயார் சாட்சியமளிக்கையில், 1990 ஆம் ஆண்டு வவுனியா நகரம் புளொட் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. வவுனியா நகருக்குப் பொருள்கள் வாங்குவதற்காக வந்த வேளையில் எனது கணவர் காணாமற்போய்விட்டார். அவரைப் புளொட் அமைப்பினரே பிடித்திருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (த–5)

# இந்திய இராணுவத்தினரே மகனை கூட்டிச் சென்றனர்

### 26 வருடங்கள் கடந்தும் அவர் பற்றி தகவல் இல்லை என்கிறார் தாயார்

யாழ்ப்பாணம், டிசெ. 17

இந்திய இராணுவத்தினர் எனது மகனைக் கொண்டு சென்றனர். 26 வருடங்களாகியும் மக னைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இந்திய இராணுவத் தினரிடம் கேட்ட போதும் அவர் கள் எனது மகனைத் தர வில்லை என்று ஆணைக்குழு முன்பாக தாயார் ஒருவர் சாட் சியமளித்தார்.

வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த துரைராஜா பாரணை தேவி என்பவர் சாட்சியமளித் தார்.

தான் ஊர்காவற்றுறை நாரந் தனையில் தங்கியிருந்ததாகவும் அப் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வீட்டிலிருந்த எனது மகனை இந்திய இராணுவத்தினர் கொண்டு சென்றனர். இந்திய இராணுவத்தினர் ட்ரக்கில் வீட்டுக்கு வந்தனர். எங்கள் எல்லோரையும் அடித்துத் துன்புறுத்தினர். அதன் பின்னர் வீட்டிலிருந்த மகனைக் கொண்டு சென்றனர்.

மறுநாள் வேலணையிலிருந்த இந்திய இராணுவத்தின் முகாமுக்குச் சென்று கேட்டோம். அங்கிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினரே பதிலளித்தனர். இந்திய இராணுவத்தினர் எனது மகனைப் பிடிக்கவில்லை என்று குறிப்பிட்டனர். இன்றுவரை எனது மகனைப் பற்றி எதுவும் தெரியாது – என்று சாட்சியமளித்தார். (த–5)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி
நித்தியலக்ஷ்மி சசிக்குமார் அவர்களின் தந்தையார்
**வீரசிங்கம் உத்தமசிங்கம்** அவர்கள் 07.12.2014
இறைபதமடைந்துவிட்டார். அவரது மறைவினையொட்டி
துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின்
ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
(சி/18759) (4.6.3) பாடசாலைச் சமூகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விற்பனைக்கு** ISUZU-150 Jurney
26 ஸ்ரீ மொடல் கை ரூஃப் வான் மற்றும் பாவித்த தீராந்திகள், மரங்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 669 5559, 021 300 3333
(55010) (4.3.6)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**NICK Advertising International**
**கம்பனியில் தொழில்வாய்ப்பு**
க.பொ.த. சா/த, உ/த முடித்தவர்களுக்கு பயிற்சிகளுடன் நிரந்தர தொழில்வாய்ப்பு.
அனுபவம் தேவையில்லை.
பயிற்சியின்போது கொடுப்பனவுகள் வழங்கப்படும். (12000)
(55002) (45.3)
தொடர்பு: 075 505 0814, 076 635 2014
175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**Personal Class** புதிய ஆண்டுக்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English வகுப்புகளும் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து தரப்படும்.
(55009) (4.3.6)
பிரபல ஆசிரியர், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 077 836 1521

## வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிலையம்

**இலவச தொழிற்திறன் பயிற்சி வகுப்புக்கள் அணி 06 - 2015**

பாடசாலை விட்டுவிலகியோருக்கான **இலவச**

- ஆடையமைத்தல் தையல் பயிற்சி
- மனைப் பொருளியலும், மனை அலங்காரமும் பயிற்சி ஆகியன.

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம், இல.39, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தில் 2015 ஜனவரி முதலாம் திகதியன்று தொடங்கப்படவுள்ளன.

வசதி குறைந்த மற்றும் இடம்பெயர்ந்து வசித்துவரும் ஆர்வமுடையவர்கள் தமது பெயர் விவரங்களை 19.12.2014 வெள்ளிக்கிழமையன்று முற்பகல் 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மேற்படி பயிற்சி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

**நிர்வாகம்,**
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்,
பதிவு இலக்கம்: Nallur/DS/05/LIFe skill/2012.
(சி18266) (12.3)

## வீடு வாடகைக்கு

யாழ். நல்லூர் கோயில் வீதியில் மூன்று அறைகள் சுற்றுமதில், வாகனத்தரிப்பிடம், நீர்ப்பம்பியுடன் கூடிய கிணறு ஆகிய வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 738 9696
(52047) (45.6)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986.09.09, விசாகம், 2 ஆம் பாதம், பாவம்-16 (ஒரு சுற்று) (Dip.in.Eng) B.A இறுதி ஆண்டு பேராதனை மாணவனுக்கு வெளிநாட்டு PR உள்ள பெண் தேவை.
(55007) (4.3.6)
தொடர்பு: 077 137 2280

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த
அழையுங்கள்: 077 326 6949

## வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனம்

5 ஆவது அணியினரின்
ஆக்கத் திறன் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கலும்.
இடம்:- வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன பயிற்சி நிலையம்.
இல 39, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
காலம்: 19.12.2014 (வெள்ளிக்கிழமை)
நேரம்: மு.ப. 09.30 மணி.
பிரதம விருந்தினர்:
கௌரவ ஈ.சரவணபவன்.
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.

**நிகழ்ச்சி நிரல்**

- பிரதம விருந்தினரை அழைத்து வரல்.
- மங்கல விளக்கு ஏற்றுதல்.
- வரவேற்புரை திருமதி மு.பாக்கியம். ஆசிரியர்.
- தலைமையுரை
- பயிலுநர்களின் கலை நிகழ்வு
- ஆசியுரையும், கண்காட்சி மண்டபம் திறந்து வைத்தலும்:-
- பிரதம விருந்தினர் உரை.
- சான்றிதழ் வழங்கல்.
- நன்றியுரை : செல்வி விஜயரூபி தியாகராசா. (சி.18265)

**கண்காட்சி பி.ப. 05.00 மணிவரை நடைபெறும்.**
அனைவரும் வருக! ஆதரவு தருக!!
ஆட்சிக்குழு உறுப்பினர்களும், ஆசிரியர்கள்,பயிற்சியாளர்களும்.

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வரணி

**பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்தல்**

எமது வரணி வடிசாலையிலுள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை முழுமையாகத் தொழிற்படுத்துவதற்காக இந்தத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம் அதனைத் திருத்தம் செய்யவுள்ளோம். செய்யவேண்டிய திருத்தத்தை பரீட்சித்து திருத்தத்திற்கான உத்தேச செலவு மதிப்பிட்டைக் குறிப்பிட்டு **தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி, வரணி** என்ற முகவரிக்கு **25.12.2014** ஆம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூறுவிலை அனைத்தும் எமது நெறியாளர் குழுவுக்குச் சமர்ப்பித்து இறுதி முடிவு அவர்களால் மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்படும்.

சி. பூபாலசிங்கம்
தலைவர்
(சி.16754) (45.3)

## இப்பொழுது திரையில்




Majestic Cineplex Jaffna காகில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



# உலகச் செய்திகள்



## முகம் பார்த்த நிலையில் பிறந்த இரு குழந்தைகள்

ஒட்டிப்பிறந்த குழந்தைகளை சத்திர சிகிச்சை மூலம் பிரிக்க பிரார்த்தனை செய்யுமாறு பேஸ்புக்கில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் வசிக்கும் மைக்கல் பிரான்ட்லி– பிரயண்ட்மிராபல் தம்பதிக்கு கடந்த வெள்ளியன்று ஒட்டிப்பிறந்த நிலையில் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர்.

இரு ஆண் குழந்தைகளின் முகமும் ஒன்றையொன்று பார்த்தவாறு உள்ளன. அவர்களது முகம் தனித்தனியே உள்ளபோதும், அடிவயிறு இருவருக்கும் ஒன்றாக இணைந்துள்ளது. அதே வேளை இடுப்புக்கு கீழே இருவரும் தனித்தனி உடல் உறுப்புகளைக் கொண்டுள்ளனர்.

அவர்களது உடலை ஸ்கேன் செய்து பார்த்த மருத்துவர்கள், கல்லீரலைத் தவிர அனைத்துப் பாகங்களும் தனித்தனியே இருப்பதால் அறுவைச் சிகிச்சை செய்து குழந்தைகளைத் தனித்தனியே பிரிக்க முடிவு செய்துள்ளனர். எனினும் இவர்களை பிரிக்கும்போது, ஐந்து சதவிகிதம் தான் இருவரும் உயிர் பிழைக்க வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். (ரி)

# பாடசாலைக்குள் புகுந்து தலிபான்கள் சூடு

## பாகிஸ்தானில் மாணவர்கள் உட்பட 104 பேர் சாவு, 500 பேர் வரை சிறைப்பிடிப்பு

இஸ்லாமபாத், டிசெ.17

பாகிஸ்தானில் தலிபான்கள் பாடசாலை ஒன்றுக்குள் நுழைந்து சரமாரியமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள இராணுவத்துக்கு சொந்தமான பாடசாலையை குறிவைத்து தலிபான்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.



இதில் 84 குழந்தைகள் உட்பட 104 பேர் சாவடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் 500க்கும் மேற்பட்டோர் பாடசாலை வளாகத்தில் தீவிரவாதிகளால் சிறை பிடித்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவலொன்று வெளியாகியுள்ளது. தலிபான்கள் பாடசாலையினுள் புகுந்தவுடன் பாடசாலை வளாகத்திலிருந்து துப்பாக்கிச் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது என்றும், படுகாயமடைந்த மாணவர்களை மீட்க அவசர ஊர்திகள் சென்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.



## அமெரிக்காவில் மர்ம மனிதன் தாக்குதல்: ஐவர் சாவு

வொஷிங்டன், டிசெ.17

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள மோன்ட்கோமேரி கவுன்டியில் உள்ள பல வீடுகளுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த மர்ம மனிதனால் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த நபர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

லோயர் சால்போர்ட் டவுன்சிப்பில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் துப்பாக்கி சூடு நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த அரைமணி நேரம் கழித்து லேன்ஸ்டேல் பகுதியில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது, இதில் இரண்டு பேர் இறந்துள்ளனர்.


மேலும், சவுதர்டனில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் இறந்துள்ளனர்.

பென்ஸ்பர்க்கிலும் துப்பாக்கி சூடு நடைபெற்றுள்ளது. இதுவும் இந்த மூன்று சம்பவங்களின் தொடர்ச்சி எனக் கருதப்படுகிறது.

# நிலக்கரி சுரங்க முறைகேடு; மன்மோகனிடம் விசாரணை

சென்னை, டிசெ. 17

நிலக்கரி சுரங்க முறைகேடு வழக்கில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மன்மோகன் சிங்கிடம் விசாரணை நடத்தி, அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.



முறைகேட்டில் பிர்லாவின் ஹிண்டால்கோ நிறுவனம் ஈடுபட்டமை குறித்த வழக்கை முடித்துக் கொள்ள சி.பி.ஐ முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மேலும், சுரங்கமுறை கேட்டில் முன்னாள் நிலக்கரித்துறைச் செயலர் பி.சி. பரேக்கின் தொடர்பு குறித்து விசாரணை நடத்தவும் சி.பி.ஐக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரித்து வரும் சி.பி.ஐ. அப்போது நிலக்கரிச் சுரங்கத்துறை அமைச்சராக இருந்த மன்மோகன் சிங்கிடம் ஏன் விசாரணை நடத்தவில்லை என்று சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் கடந்த விசாரணையின்போது கேள்விஎழுப்பியிருந்த நிலையில் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## இயக்குநர் கே.பாலச்சந்தர் மருத்துவமனையில்

சென்னை, டிசெ.17


புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் கே.பாலசந்தர் உடல்நலக் குறைவு காரணமாக, சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாலச்சந்தரின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோதலால் உருவானதே சந்திரன்

## ஜேர்மனி விஞ்ஞானிகள் தெரிவிப்பு

பூமி உருவான சமயத்தில் அதன் மீது வேறொரு கிரகம் மோதிய பின்னர் பூமியைச் சுற்றி உருவான கோளம்தான் சந்திரன் என்ற அறிவியல் கோட்பாட்டுக்கு ஆதரவான ஒரு ஆதாரம் கிடைத்திருக்கிறது. நாற்பது ஆண்டுகளுக்கும் முன்பு சந்திரனுக்குச் சென்றிருந்த விண்வெளி வீரர்கள் எடுத்துவந்த நிலவுப் பாறைகளில் ரசாயன ஆய்வுகளை மேற்கொண்ட ஜேர்மனி விஞ்ஞானிகள் இதனைத் தெரிவிக்கின்றனர். 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக பூமியின் மீது வேறு ஒரு கிரகம் வந்து பயங்கரமாக மோதியது என்பதும், அப்படி மோதிச் சிதறிய சிதறல்கள்தான் பூமியைச் சுற்றி ஒன்றுதிரண்டு சந்திரனாக உருவானது என்பதும்தான் 1980 ஆம் ஆண்டு முதல் விஞ்ஞானிகள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாக இருந்து வருகிறது. அவ்வாறு மோதியதாகக் கருதப்படும் கிரகத்துக்கு தியா என்ற ஒரு பெயரை விஞ்ஞானிகள் கொடுத்திருந்தார்கள். ஆனால் இந்தக் கோட்பாட்டுக்கு தடயபூர்வ ஆதாரம் எதுவும் இதுவரை இல்லாமல் இருந்தது. தற்போது நிலவுப் பாறைகளில் நவீன ஆய்வுகளை மேற்கொண்டபோது, பூமிப் பாறைகளின் ரசாயனக் கூறுக்கு சம்பந்தமில்லாத வெளிக்கிரகத் தோற்றத்துக்கான அடையாளங்கள் நிலவுப் பாறைகளில் தெரிவதாக ஜேர்மனியிலுள்ள கொயெடிங்கென் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பூமிப் பாறைகளுக்கும் நிலவுப் பாறைகளுக்கும் இடையில் சிறு வித்தியாசம் இருப்பதைத் தாங்கள் கண்டுபிடித்திருப்பதாகவும், இரண்டு கிரகங்கள் மோதிக்கொண்ட கோட்பாட்டை உறுதி செய்யும் வகையில் இந்தக்கண்டு பிடிப்பு அமைந்துள்ளதென்றும் ஆய்வை வழி நடத்திய டேனியல் ஹெர்வார்ட்ஸ் கூறினார். பூமிப்பாறைகளில் ஆக்ஸிஜன் ஐசடோப்களின் கலவை ஒருவிதமாக இருப்பதாகவும், நிலவுப் பாறைகளில் அது வேறுவிதமாக இருப்பதாகவும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.



# இந்தியா தயாரித்த முதல் அணுசக்தி நீர்மூழ்கி

சென்னை, டிசெ. 17

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஐ.என்.எஸ். அரிஹன்ட், விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் சோதனை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டது. இதனைப் பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இந்தியக் கடற்படையில் ஐ.என்.எஸ். சக்ரா என்ற அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஏற்கனவே கோவையில் உள்ளது. இது ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டது. இந்த நிலையில் கடற்படைக்குத் தேவையான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை இந்தியாவிலேயே தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஐ.என்.எஸ். அரிஹன்ட் என்ற அணுசக்தி நீர்மூழ்கி கப்பல், விசாகப்பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் வடிவமைக்கப்பட்டது. 6 ஆயிரம் தொன் நிறையுள்ள இந்த கப்பலில் 83 மெகாவாட் திறனுள்ள அணுஉலை உள்ளது. இந்தக் கப்பலில் இருந்து, 3,500 கி.மீ.தூரம் சென்று தாக்கக்கூடிய கே–4 ரக ஏவுகணைகள் மற்றும் 700 கி.மீ தூரம் சென்று தாக்கும் பி.ஓ. 5 ரக ஏவுகணைகளையும் ஏவ முடியும். நீர்மூழ்கியைக் கடலில் செலுத்தும் சோதனை நேற்றுத் தொடங்கியது.

நீர்மூழ்கிக் கப்பலைக் கடலுக்கு அடியில் செலுத்துதல், ஆயுதங்கள் பரிசோதித்தல் உட்பட கப்பலில் உள்ள அனைத்து வசதிகளும் இந்தக் கடல்சோதனையில் பரிசோதிக்கப்படவுள்ளன. அனைத்தும் திட்டமிட்டபடி நடந்தால், எதிர்வரும் இரு ஆண்டுகளின் பின்னர் இந்தக் கப்பல், கடற்படையில் சேர்க்கப்படும். ஐ.என்.எஸ். அரிஹந்த போருக்கு தயார் என அறிவிக்கப்பட்டுவிட்டால், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கும் திறன்படைத்த 6 நாடுகளில் இந்தியாவுமொன்று என்ற புகழ் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆஸி.ஹோட்டல் முற்றுகை; ஆயுததாரி சுட்டுக் கொலை

சிட்னி, டிசெ. 17

சிட்னியிலுள்ள சிற்றுண்டிச் சாலையொன்றில் 16 மணித்தியாலங்களாக நீடித்த பணயக்கைதி நாடகத்துக்கு பொலிஸார் இந்தச் சிற்றுண்டிச் சாலையை முற்றுகையிட்டு முடிவுக்குக் கொண்டு வந்த வேளையில் ஆயுதபாணி அடங்கலாக மூன்று பேர் உயிரிழந்துள்ளார்கள்.



சிட்னியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பலரைப் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்த ஆயுததாரி, பொலிஸாரின் முற்றுகையைத் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஹோட்டலில் பலரைப் பணயக் கைதிகளாக தடுத்து வைத்த நபர் ஈரானிய சமயத் தலைவர் மான் ஹாரொன் மொனிஸ் என்பவரே என பொலிஸார் இனங்கண்டுள்ளார்கள். ஆயுதபாணியான மான்ஹாரன்மொனிஸ்அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் வழங்கப்பட்டவர்.தமதுமுன்னாள் மனைவியின் படுகொலைக்கு உடந்தையாக இருந்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளை எதிர்கொண்டிருந்த இவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



23 ஆண்டுகளுக்கு பிறகு 4200 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு போர்வீரனது எலும்புக்கூடு மற்றும் அவரது வாளின் மர்மங்களை பற்றி தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர். கடந்த 1979ஆம் ஆண்டு தென்கிழக்கு இங்கிலாந்தின் மேற்கு சசெக்ஸ் என்னும் நாட்டின் சிச்செட்டர் என்னும் கதீட்ரல் நகரத்தில் உள்ள விளை நிலத்தில் 4200 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு போர்வீரனின் எலும்புக்கூடு மற்றும் அவன் உபயோகித்த அரிய வகை வெண்கலக் காலத்து வாளும் தோண்டியெடுக்கப்பட்டன.. இந்த எலும்புக் கூட்டுக்கு ராக்டன் மனிதர் என்று பெயரிட்டனர். 6 அடி நீளமுள்ள இந்த ராக்டன் மனிதன் வெண்கலக் காலத்தில் வாழ்ந்திருப்பவர் என்றும், உயர் பதவியில் உள்ள போர் வீரர் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் எலும்புக் கூட்டுடன் எடுக்கப்பட்ட அரியவகை வாள் ஐரோப்பிய வரலாற்றிலயே கண்டறியப்பட்ட முதல் வெண்கலக் காலத்தின் வாளாகும். இம்மனிதர் அவரது 45 வயதில் போரில் இறந்தார் என்று ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது

CMYK

## ஆர்டிக் வட துருவத்தில் வலுவான பனிப்பாறைகள்

புவிப் பந்து வெப்பமடைவதால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொண்டுவருகின்ற வடதுருவத்திலுள்ள ஆர்க்டிக் கடலில் பனிப்பாறைகள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் வலுவாக இருந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வடதுருவத்தில் இருக்கும் பனிமலைகள் மதிப்பிடப்பட்டதைவிட வலுவாக இருக்கின்றன வெப்பநிலை உயர்ந்து வருவதன் காரணமாக பனிப்பாறைகளால் மூடப்பட்ட பகுதியின் பரப்பளவு கடந்த முப்பது ஆண்டுகளில் மிக அதிக அளவு குறைந்துவருவதாக செயற்கைக்கோளால் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தெரியவருகிறது.

அதேவேளை, குளிர் அதிகம் காணப்படும் ஆண்டுகளில் இயற்கையாகவே பனிப்பாறைகள் அதிகமாக உருவாவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

# தீவிரவாதிகளை எதிர்த்து சிரியாவில் அரசு அதிரடி

## 26 பேர் சாவு; பல பகுதிகள் மீட்பு

சிரியாவின் அலெப்போவின் வடக்கு பகுதியில் தீவிரவாதிகளுக்கும், அரசு படைக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கடுமையான மோதலில் 26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தீவிரவாதிகளின் வசம் இருந்த சில பகுதிகளை அரச படைகள் தம் வசம் கொண்டுவந்துள்ளன.



சிரியாவின் முக்கிய பொருளாதார நகரமாக அலெப்போ விளங்கியது. ஆனால் அல் கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி அந்த நகரின் பாதிப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். இதனை மீட்கும் நடவடிக்கையில் சிரியா அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு போரில் இதுவரை 1 இலட்சத்து 91 ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ஐ.நா.வின் சமீபத்திய அறிக்கை தெரிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.



## உலக அழகியாக தென்னாபிரிக்க பெண்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 22 வயதான ரோலென் ஸ்ட்ராஸ், என்பவர் 2014ஆம் ஆண்டின் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக லண்டனில் நடைபெற்ற விழாவில் அவர் கௌரவிக்கப்பட்டார்.ஹங்கேரியின் எடினா மற்றும் அமெரிக்காவின் எல்சபெத் ஆகியோர் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்தனர். முன்னதாக, ஹாண்டுரான் நாட்டைச் சேர்ந்த அழகி திடீரென சுட்டுக் கொல்லப்பட்டதால் இந்தப் போட்டி நடைபெறுவதில் சந்தேகங்கள் நிலவின. எனினும் தொடர்ந்து நடைபெற்ற இந்தப் போட்டியில் பங்கேற்ற 124 அழகிகளில் தென்னாபிரிக்க அழகியே உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# பிரிட்டன் இமாம்கள் பயங்கரவாதத்துக்கு எதிர்ப்பு

பயங்கரவாதத்துக்கு எதிராக பிரிட்டனைச் சேர்ந்த 10 இமாம்கள் இணைந்து இணையத் தளம் மூலம் செயற்படத் தீர்மானித்துள்ளனர். லண்டன், லீஸ்டர், லீட்ஸ், லாங்கஷயர், பக்கிங்காம்ஷயர், மேற்கு மிட்லாண்ட்ஸ், பிரிஸ்டல் உள்ளிட்ட முக்கிய நகரங்களைச் சேர்ந்த இமாம்கள், இமாம்ஸ் ஒன்லைன்' என்ற இணையத் தளத்தை ஆரம்பித்துள்ளனர் இதனை, பிரிட்டனிலுள்ள ஷியா, சன்னி ஆகிய இரு பிரிவினரும் வரவேற்றுள்ளனர்.



இணையத்தளம் வழியாக வன்முறைமூலம், அனைவரையும் அச்சுறுத்தும் முயற்சி நடைபெறுகிறது. பொதுமக்களும், இணையத்தள சமூக வலைத்தள நிறுவனங்களும் பயங்கரவாதத்துக்கு எதிராக குரல் கொடுக்க முன்வர வேண்டும் என அந்த இயைணத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் பயங்கரவாதம் தொடர்பாக எளிதாகக் காணக் கிடைக்கக் கூடிய தகவல்களை அழிக்கத் தவறுவதன் மூலம் முஸ்லிம் சமுதாயத்தின் ஒற்றுமை குறைகிறது. என அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும், பயங்கரவாதத்துக்குப் பாதுகாப்பான உறைவிடம் அளிக்கும் இணையதள நிறுவனங்களை இமாம்கள் கண்டித்துள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த பல முஸ்லிம் இளைஞர்கள், இஸ்லாமிய தேச ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பில் இணைந்து வருவதாகச் செய்திகள் வெளிவரும் நிலையில், அந்தநாட்டின் முக்கிய பகுதிகளைச் சேர்ந்த இமாம்கள், பயங்கரவாதத்துக்கு எதிராக இணைந்து செயற்படத் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது

# பல்சுவை

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத் தீவு | வவுனியா | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 550 | 600 | 800 | 800 | 800 | - |
| நண்டு | 250 | 350 | 300 | 300 | 400 | 600 |
| கணவாய் | 400 | 450 | 400 | 600 | 550 | 600 |
| பாரை | 300 | 380 | 400 | 600 | 600 | 400 |
| சுறா | 300 | 360 | 320 | 300 | 380 | 380 |
| சீலா | 250 | 300 | 400 | 400 | 380 | - |
| விளை | 430 | 400 | 400 | 400 | 300 | 460 |
| முரல் | 280 | 250 | 350 | 300 | 280 | 390 |
| கும்பிளா | 350 | 380 | 300 | 400 | 300 | - |
| கிழாக்கன் | 170 | 190 | 300 | 300 | 210 | - |
| ஓரா | 200 | 280 | 350 | 300 | 200 | - |
| திரளி | 130 | 170 | 200 | 200 | 190 | 180 |
| நகரை | 110 | 120 | 180 | 150 | 130 | - |
| சூடை | 100 | 100 | 120 | 90 | 110 | 70 |

## பிரதி பயனை எதிர் பார்த்தே செயல்கள் அமைகின்றன

சுதந்திரமாக அன்புடன் உழைக்கும் ஒருவன் பயனைப் பற்றி நினைக்கவே மாட்டான். ஆனால் அடிமையோ சவுக்கடி வாங்குகிறான். சேவகன் கூலி கேட்கிறான். வாழ்க்கை முழுவதும் இப்படியேதான் நிகழ்கிறது. பொது வாழ்வை எடுத்துக் கொள்ளுங்கள். பொது மக்களிடம் சொற்பொழிவாற்றும் ஒருவன் கைதட்டலை எதிர்பார்க்கிறான். கூச்சலை விரும்புகிறான். அவனை ஒரு மூலையில் உட்கார வைத்தால் அது அவனைக் கொல்வதற்கு ஒப்பாகும். அவனுக்கு இவை தேவை. அடிமையாக வேலை செய்வது இது. இந்த மாதிரி நிலையில் வேலைக்கு ஏதோ ஒரு பயனை விரும்புவது இத்தகையவர்களின் இயல்பு. அடுத்ததாக தொழில் செய்து உயிர் வாழ்தலாகும். இவனுக்கு சம்பளம் அல்லது கூலி வேண்டும். அதாவது நான் உழைக்கிறேன். நீ எனக்கு சம்பளத்தைக் கொடு என்னும் பேரம் இதுவாகும். வேலைக்காகவே வேலை செய்கிறேன் என்று வாயால் சொல்வது எளிது. ஆனால் செய்முறையில் இதைப்போல் கடினமானது வேறொன்றும் இல்லை. வேலைக்காக வேலை செய்யும் உண்மையான மனிதன் இருப்பானாயின், அவனது முகத்தைக் காண இருபது மைல் தூரம் வேண்டுமானாலும் தலையால் ஊர்ந்து சென்றாவது பார்த்தாக வேண்டும். ஏனெனில் அப்படிச் சொல்பவனின் மனத்தை ஆராய்ந்தால் நோக்கம் அதில் ஒன்று ஒளிந்திருப்பது தெரியும். அது பணத்தாசை அல்லது பதவி ஆசையாக இருக்கும். எப்படியோ, எங்கேயோ, இந்தச் செயலுக்கு தூண்டுகோலான ஆசை ஒன்று இருந்தே தீரும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக எமது மனத்தை வென்ற நிலையில் செய்யும் செயலினால் மட்டுமே பற்றற்ற நிலை ஏற்பட முடியும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நாளை

**மார்கழி-03**
**வியாழக்கிழமை**
**18.12.2014**

திதி: ஏகாதசி
மு.ப.09.46 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.இ.09.11 வரை
சுபநேரம்:
07.53-09.23 வரை
இராகுகாலம்:
01.53-03.23 வரை
ஏகாதசி விரதம்

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 180 | 180 | 140 | 200 | 160 | 180 | 140 | 180 | 110 |
| கரட் | 200 | 150 | 180 | 200 | 180 | 210 | 200 | 240 | 160 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 50 | 40 | 70 | 80 | 60 | 15 |
| பயிற்றை | 200 | 280 | 240 | 240 | 200 | 240 | 200 | 220 | 180 |
| பாகல் | 300 | 350 | 400 | 120 | 300 | 160 | 140 | 180 | 180 |
| கருணைக்கிழங்கு | 80 | 50 | 80 | 60 | 40 | 230 | 200 | 230 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 110 | 120 | 110 | 120 | 110 | 100 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 60 | 40 | 120 | 100 | 100 | 140 | 120 | 130 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 | 35 | 50 | 60 | 70 | 30 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 180 | 140 | 140 | 180 | 120 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 | 70 | 70 | 70 | 80 | 70 | 90 |
| கீரை | 60 | 50 | 50 | 20 | 40 | 40 | 30 | 30 | 55 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 30 | 30 | 10 |
| மிளகாய் | 600 | 500 | 600 | 600 | 450 | 600 | 550 | 600 | 350 |
| புடோல் | 150 | 150 | 160 | 120 | 130 | 190 | 140 | 180 | 110 |
| கோவா | 120 | 140 | 160 | 180 | 130 | 150 | 120 | 140 | 200 |
| வெண்டி | 160 | 160 | 120 | 120 | 140 | 180 | 150 | 170 | 50 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 300 | 160 | 270 | 200 | 220 | 300 |
| லீக்ஸ் | 320 | 280 | 300 | 280 | 280 | 280 | 200 | 300 | 200 |
| தேங்காய் | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 120 | 190 | 140 | 190 | 120 |
| தேசிக்காய் | 90 | 120 | 80 | 90 | 100 | 120 | 140 | 100 | 40 |
| வல்லாரை | 25 | 20 | 30 | 20 | 20 | 20 | 30 | 30 | 10 |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | 6 | | |
| | 3 | | 2 | | | 5 | | 4 |
| | 1 | 6 | | 4 | | 2 | 8 | |
| | 9 | | 3 | 5 | 7 | | | |
| 3 | 8 | | 6 | | 9 | | 5 | 2 |
| | | | 4 | 8 | 2 | | 3 | |
| | 2 | 3 | | 7 | | 4 | 1 | |
| 6 | | 8 | | | 4 | | 2 | |
| | | 5 | | | | | | 7 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 6 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 |
| 5 | 4 | 2 | 8 | 3 | 6 | 9 | 7 | 1 |
| 7 | 8 | 9 | 2 | 4 | 1 | 5 | 3 | 6 |
| 1 | 2 | 4 | 7 | 8 | 9 | 3 | 6 | 5 |
| 6 | 9 | 5 | 3 | 2 | 4 | 1 | 8 | 7 |
| 8 | 3 | 7 | 6 | 1 | 5 | 4 | 2 | 9 |
| 2 | 7 | 8 | 1 | 5 | 3 | 6 | 9 | 4 |
| 9 | 6 | 1 | 4 | 7 | 2 | 8 | 5 | 3 |
| 4 | 5 | 3 | 9 | 6 | 8 | 7 | 1 | 2 |

## ஆரோக்கியத்தையும் கொஞ்சம் கவனிப்போம்

காலை எழுந்தவுடன் எளிய உடற்பயிற்சி செய்யுங்கள், குறைந்த பட்சம் 30 நிமிடங்கள் நடைப்பயிற்சியை மேற் கொள்ளுங்கள். பிறகு நல்ல சத்துள்ள காலை உணவு அதிகமாகச் சாப்பிட வேண்டும். காலை உணவில் பழங்கள், மற்றும் பால் ஆகியவற்றைச் சேர்ப்பது நல்லது. பின்னர் மதிய உணவு சமச்சீர் உணவாக சாப்பிட வேண்டும். மதிய உணவில் பச்சைக் காய்கறிகள், பழங்கள், பருப்புகள் மற்றும் கீரை வகை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வறுத்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். ஒரு நாளைக்கு 2 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் உங்கள் ஹைட்ரேட் மற்றும் பசி உணர்வைக் குறைக்கும். ஆகையால் தாகம் எடுத்த பின்னர் நீர் அருந்துவதை விட சிறிது இடைவெளியில் ஒரு முறை நீங்கள் நீர் அருந்திக் கொண்டே இருக்க வேண்டும். இரவு நேரச் சாப்பாட்டுக்கு கோதுமை உணவு வகைகளை எடுத்துக் கொள்வது, ஜீரணத்துக்கு எளிமையானது. சாப்பிட்டவுடன் தூங்கச் செல்லாமல் சிறிது நேரம் நடந்து விட்டு அல்லது வீட்டு வேலைகளை முடித்து விட்டுத் தூங்கச் செல்லலாம். அவ்வாறு செய்வது நாம் சாப் பிட்ட உணவு கலோரிகள் எமது உடலில் தங்கி விடா மல் இருக்கும். நொறுக்குத் தீனியைத் தவிர்ப்பது நல்லது. இரவு 8 மணிக்குள் சாப்பாட்டை முடித்துக் கொண்டால் அஜீரணக் கோளாறில் இருந்து தப்பி விட லாம். நாங்கள் எடுத்து கொள்ளும் உணவு களின் கலோரிகளை எரி சக்தியாக மாற்றி விட்டால் வீணாக எமது உடலில் தங்கி கொழுப்பாக மாறாது. அதாவது நாங்கள் சாப்பிடும் உணவுக்கு ஏற்ற வேலையை உடலுக்குத் தந்தால் உடல் பருமன் என்பது குறைந்து போய் விடும். நாம் செய்யும் வேலைக்கு ஏற்ப உணவு கலோரிகளை எடுத்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் உங்கள் உடல் பருமன் போய் நளினமான உடல்அமைப்புடன் இருக்கலாம்.



# எண் சோதிட பலன்கள் உங்களுக்கு எப்படி?



எண்களில் முடிவானது இந்த எண்தான். எந்த எண்ணுடன் சேர்ந்தாலும், தனது இயல்புக் குணத்தை இழக்காதது இந்த எண்தான். உதாரணமாக 3 என்ற எண்ணுடன் 9 சேர்ந்தால் 12 கிடைக்கும்.
மீண்டும் கூட்டினால் (1+2) 3 என்ற எண்ணே மீண்டும் கிடைக்கும்.
எனவே 9 எண்காரர்கள் ஏனைய எண்காரர்களுடன் சேர்ந்து செயல்பட்டுத் தங்களின் இயல்புக்கு ஏற்றவாறு அவர்களை மாற்றிவிடும் திறமை படைத்தவர்கள்!
இவர்கள் தீவிரமான மனப்போக்கும், தைரியமான செயற்பாடும் கொண்டவர்கள். எந்த முயற்சியையும் திட்டமிட்டு, அதன்படியே செயற்படுவார்கள். எத்தனை சோதனைகள் வந்தாலும், அவைகளைத் துணிவுடன் சந்தித்து வெற்றி பெறுவார்கள். மற்றவர்கள் இவர்களை அலட்சியம் செய்தால் உடனே தட்டிக் கேட்பார்கள். மனதில் எப்போதும் தைரியம், தன்னம்பிக்கை உடையவர்கள். தவறுகளைக் கண்டால் உடனே தட்டிக் கேட்கவும் தயங்கமாட்டார்கள்.
எதையும் திட்டமிட்டு, நேரம், காலம் பார்த்துத் தங்களது காரியங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால் இவர்கள் எதையும் போராடித்தான் பெற வேண்டும். இவர்களது பேச்சில் எப்போதும் வேகமும் அதிகாரமும் இருக்கும். பயம் என்பது இருக்காது! செவ்வாய்க் கிரகம், தேவர்களுக்குத் தளபதியாவார். எனவே இவர்களுக்குச் சண்டையிடும் மனோபாவம் இயற்கையிலேயே அமைந்துவிடும். இரத்தம், விபத்து, கொலை போன்ற சம்பவங்களிலும் துணிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்வார்கள். வேகம், சக்தி, அழிவு, போர் என்பவற்றின் எண் இது! ஆற்றல், ஆசை, தலைமை தாங்குதல், ஆதிக்கம் செலுத்தல் போன்ற குணங்கள் இவர்களிடம் இருக்கும். எதையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சிந்திக்க மாட்டார்கள். விரைவிலேயே ஒரு முடிவு எடுத்து அதை நிறைவேற்றுவதில் வேகம் காட்டுவார்கள். பலருக்கு உடலில் காயங்களும், சிறு விபத்துக்களும் ஏற்படும். பெரும்பாலானோர் போர் வீரர்கள், பொலிஸ் துறை போன்ற கடினமான துறைகளிலும் புகழ்பெற்று விளங்குவார்கள்.
இவர்கள் நிதானம் குறைந்தவர்கள். உணர்ச்சிவசப்படுபவர்கள், பிறருக்கு அடங்கி நடக்க முடியாதவர்கள். பகைவர்களை இவர்களே உருவாக்கிக் கொள்வார்கள். பல சமயங்களில் இவர்களது பேச்சே இவர்களுக்குப் பல சண்டைகளைக் கொண்டு வந்துவிடும். பங்காளிச் சண்டை, மனைவி குடும்



பத்தாருடன் சண்டை என்று அடிக்கடி பிரச்சினைக்குள்ளாவார்கள். பிறர் தங்களைக் குறை கூறுவதை மட்டும் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது!
சந்தர்ப்பங்களைச் சமாளிக்கும் திறமையும், சிறந்த நிர்வாக ஆற்றலும் உண்டு. அதிகாரத்துடன் அனைவரையும் வேலை வாங்குவார்கள். இல்லையெனில் மனம் உடைந்து போவார்கள்.
இவர்கள் பல ஊர்களைச் சுற்றிப் பார்க்க விரும்புவார்கள். பலர் வெளிநாடுகளுக்கும் சென்று வருவார்கள். இவர்கள் ஆன்மிகத் தலைவர்களைக் கண்டவுடன் பணிந்து மிகவும் மதிப்புக் கொடுப்பார்கள். பலருக்கு முன்னோர்கள் தேடி வைத்த செல்வங்கள் இருக்கும். இவர்களுக்கு மனைவியின் வழி சொத்துக்கள் கிட்டும் யோகமும் உண்டு. எவ்வளவு துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்ளும் மனோதைரியமும் உண்டு. இவர்கள் கூர்மையான அறிவுடையவர்கள். எதிரிகளைச் சமயம் அறிந்து அவர்களை அழித்துவிடும் இயல்பினர். தீவிரமான ஆராய்ச்சிகளில் பலர் ஈடுபடுவார்கள். இவ்வளவு இருப்பினும் சமூகக் கட்டுப் பாடுகளுக்கு மிகவும் மதிப்புக் கொடுப்பார்கள். தெய்வம் உண்டு என்பதை முழுமையாக நம்புவார்கள்.
தங்களது தொழிலில் மிகவும் உற்சாகமுள்ளவர்கள். தங்களது தொழிலைப் பெருகச் செய்வது எப்படி என்பதைப் பற்றிய எண்ணத்திலேயே இருப்பார்கள். பலருக்கு அரச பணியிலும், பொலிஸ் துறையிலும், இராணுவத்திலும் மிகவும் ஈடுபாடு இருக்கும்.

**அதிர்ஷ்ட நாள்கள்**

ஒவ்வொரு மாதத்திலும் 9, 18, 27 ஆகிய தினங்களும், 6, 15, 24 ஆகிய தினங்களும் மிகவும் சிறப்பானவை! எனவே கூட்டு எண்கள் 6 மற்றும் 9 வரும் நாள்களும் இவர்களுக்கு மிகவும் சாதகமானவையே.
1, 10, 19, 28 மற்றும் எண் 1 வரும் நாள்களும் நடுத்தரமான பலன்களையே கொடுக்கும். ஒவ்வொரு மாதத்திலும் 2, 11, 20, 29 நாள்களும் கூட்டு எண் 2 வரும் நாள்களும் துரதிர்ஷ்ட மானவை. அந்தத்தி னங்களில் எந்தச் செயலும் தொடங்கக்கூடாது.




# பெண்களுக்கு மட்டுமா?


பெண்களுக்கு மட்டும்தான் சமையல் சொந்தம் என்று எந்த ஆண்களும் சொல்லவில்லை. பெண்கள் தான் சொல்கிறோம். இன்றைய தலைமுறையினர் பெரும்பாலும் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் இருவரும் இணைந்தே வீட்டுப் பணிகளைச் செய்கிறார்கள். முந்தைய தலைமுறை ஆண்கள்தான், அம்மா, சகோதரிகளின் கேலிக்குப் பயந்து வீட்டு வேலைகளைத் தவிர்த்தனர். ஆணாதிக்கச் சிந்தனை என்று இதை நாம் குற்றம் சாட்டுகிறோம். ஆனால் அந்தச் சிந்தனையை வளர்ப்பதே பெண்கள்தானே? சமையல் என்பது விரும்பிச் செய்ய வேண்டிய வேலை. பெண்களால் எதையுமே பொறுப்பில்லாமல் செய்ய முடியாது. ஆண் குழந்தைகளைப் பெற்றவர்கள் ஏதோ தாங்கள் சாதனை செய்துவிட்டதாக நினைத்து, அவர்களுக்கு எதையுமே கற்றுக்கொடுப்பதில்லை. சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கையின் இலட்சியமாக ஆண்கள் வளர்க்கப்படுகிறார்கள். ஓர் ஆண் தனக்குத் தேவையானதை தானே செய்யப் பழகுவது பின்னாளில் அவனது குடும்பத்தில் மன நிறைவைத் தரும் என்று சொல்லி வளர்க்கப்படுவதில்லை. ஆண்கள் சமைப்பது குற்றமில்லை என்று சின்னத்திரை சமையல் நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன. மனைவி, கணவனுக்கு அனைத்து வகையிலும் உதவும்போது கணவனும் மனைவிக்கு சமையலில் உதவலாமே. இது தம்பதிகளுக்குள் புரிதலை அதிகப்படுத்தும். கணவனுக்குப் பிடித்த உணவை மனைவி சமைக்கும்போது அது வேலையாகத் தெரியாது. அதில் அளவற்ற அன்பும் காதலுமே வெளிப்படும்.



நாம் நமக்காக வாழ்கிறோம். பிறகேன் அந்த வாழ்க்கையை இரசித்து வாழ வேண்டும். சமையலைச் சுமையாக நினைத்தால் சுகம் பறி போய் விடும்' என்று சொல்வர். விசேஷமான, விருந்துக்குச் சமைப்பது ஆண்கள், வீட்டில் சமைப்பது பெண்கள் என்ற கருத்து எப்போது தோன்றியது என்று தெரியவில்லை. கால மாற்றத்தில் பெண்கள் படித்து, வேலைக்குச் சென்று கணவரின் பொருளாதாரச் சுமையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்ணுக்குக் கணவன் செய்யும் பிரதி உபகாரம் என்ன? அவளை மேலும் மேலும் கஷ்டப்படுத்துவதுதான். பெண்ணின் மனநிலை, உடல்நிலை, அலுவலகப் பணி அனைத்தையும் உணர்ந்து அவளுக்கு அனுசரணையாக இருந்தால் தானே குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்? பெண்கள் பற்றிய சித்திரிப்பு களை மாற்றி அமைத்திட வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொரு வருக்கும் இருக்கிறது. ஆண்கள் சமைத்தால் பெருங்குற்றம் என்பது போல் பேசுவது ஆணாதிக்க மனப்பான்மையின் வெளிப்பாடு. ஓர் ஆண் சமையலையே தொழிலாகச் செய்வதைப் பாராட்டிப் புகழும் உலகம், வீட்டில் மனைவிக்கு ஒத்தாசையாக சமையல் செய்தால் அதை பொண்டாட்டி தாசன் எனக் கூறுவது பெண்ணை அடிமையாக்கும் முயற்சியின் வெளிப்பாடே. ஒரு காலத்தில் பெண் வீட்டு வேலையை மட்டும் பார்த்தாள். ஆண் வேலைக் குச் சென்றான். சமையல் அவர்களுக்குச் சுமை யாகத் தெரிந்ததில்லை. ஆனால் இன்றோ கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும்போது சமையல் வேலையில் ஆண் ஒத்துழைக்கவில்லை என்றால், அதிகாலையிலேயே முணுமுணுப்புகளும் சண்டைகளும் உருவாகிவிடும். அன்றைய பொழுது அமைதியற்றதாகவே கழியும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 . 03 . 1941



மறைவு
27 . 12 . 2013

யாழ் சுதுமலையை பிறப்பிடமாகவும், கொக்குவில், பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லத்துரை பொன்னுத்துரை

### (இலங்கை போக்குவரத்துச் சபை)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

ஈன்ற தாயை இளவயதில் இழந்து நிற்க எம்மை கண்மணி போல் காத்த அபயோனே
ஊன்றிடும் கோலாய் உயர்த்திடும் ஏணியாய் வென்றிடும் வாழ்வாய் அமைந்தோனே
அள்ளியே தந்தியே அன்பினை நாளுமே அனைத்தையும் இழந்து துடிக்கின்றோம்.
பிள்ளைகள் என தினம் பிரியாமல் இருந்தியே பிரிந்திடா மனம் கொண்டு வாழ்ந்தாயே
சொந்தம் எம் நாட்டினை இரண்டாயிரத்தேழினில் நிந்தையாய் பிரித்திங்கு வந்தாயே

வந்த நல் நாட்டிலே பிள்ளைகளுடன் சந்தோஷமாக ஐந்தாண்டுகள் இருந்தாயே
பிள்ளைகளுக்காற்றும் நிறைபணியாணவ்யும் நிறைவேற்றி நெஞ்சம் நிறைந்தாயே
சிறகு கொண்டாயிரம் வாழ்வினில் பறந்தோமே பிறந்ததன் பயன் உன்னால் அடைந்தோமே
சுதந்திர நினைவுடன் சுகங்களை சுகித்தோமே அகம் தனில் என்றென்றும் நிலைப்பீரே
கடலிலும் பெரியது கடமைகள் எமக்கென காலத்தால் என்றும் மறவோம்.

வல்லமை காட்டிய வல்ல எம் தந்தையே வாழ்வில் உயர்ந்திட வழிகோலும்
இல்லையே நீ என சொல்லவோ வார்த்தைகள் இல்லையோ ...... இல்லையே....... தமிழ் மொழிதனில்
வில்லின்றிக்கிடக்கும் அம்பினைப் போலவே விழிகளும் இன்றிக் கிடக்கின்றோம்.
சொல்லொணாத் துயருடன் முதல் நினைவாண்டினை உள்ளத்தில் அனுஷ்டிப்போம் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரது முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (17.12.2014) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் Sarcelle France என்னும் வீட்டு முகவரியில் பிரார்த்தனை நிகழ்வும், எதிர்வரும் (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை 210 Avenue 8 mai 1945 93150 Le Blanc Mesnil என்னும் முகவரியில் அமைந்துள்ள மண்டபத்தில் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(54998)(12-3)

தகவல்: **பிள்ளைகள்**

**தொடர்புகளுக்கு:**

சுதாகரன் (மகன்) - 0049 17624949524 (ஜேர்மனி), தயானந்தன் (மகன்) - 0049 79171992 (ஜேர்மனி)
யோகேஸ்வரன் (மருமகன்) - 0033 758342217 (பிரான்ஸ்), சிறிகாந்தன் (வவா) (பேறாமகன்) - 0033 646589138 (பிரான்ஸ்)
தீசன் (பேறாமகன்) - 0033 651266651 (பிரான்ஸ்), அருள்காந்தன் (பேறாமகன்) - 0094 773079176 (இலங்கை)

CM K

## பத்தாமாண்டு நினைவஞ்சலி



அமரர் வல்லிபுரம்
**தாமோதரம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற பரிசாரகர்)

தோற்றம்
04.11.1932

மறைவு
06.01.2005

ஆண்டுகள் பத்து நிறைந்தாலும் அழியாது உங்கள் நினைவு வேண்டும் உங்கள் ஆசிகள் வழி நடத்தும் என்றும் எம்மை

பதீமபதி,
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு. (55004)(4.3.7)

**குடும்பத்தினர்.**

---

## நீங்கா நினைவு அலைகளில்
## 2 ஆம் ஆண்டு

மலர்வு
15
03
1974

உதிர்வு
17
12
2012



திதி: பூர்வபக்க பஞ்சமி
(26.12.2014)

செல்வி **ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை**

ஆண்டுகள் இரண்டு அகன்றோடிப்
போனாலும் ஆறுமோ நெஞ்சம்
இன்று உமது நாள் எம் நெஞ்சை வாட்டுகின்றதே
எங்கள் இதயக் கோயிலே-
உன் ஒளி முகம் எங்கே அம்மா
பாசத்தின் திருவுருவே பண்பின் சிகரமே
கருணைக் கடலே காவியத்தின் ஓவியமே
உன் நினைவு நாளில் உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"லிங்க பவனம்,"
கரணவாய் மத்தி.
கரவெட்டி. (54940)(4.3.6)

உன் பிரிவினால் வாடும்
**குடும்பத்தினர்.**

---

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**இராஜேஸ்வரி நவரட்ணம்**



தோற்றம்
01
12
1953

மறைவு
17
11
2014

கடந்த 17.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இராஜேஸ்வரி நவரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 15.12.2014 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிரியை நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (17.12.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் பங்குபற்றி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், அதன் பின்னர் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் எனது மனைவியின் மரணச்செய்திகேட்டு, உடன்வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர்அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாவற்குழி,
கைதடி.
077 716 0633

கணவர் - ஆ.நவரட்ணம்
ஓய்வுபெற்ற மின்சாரசபை அலுவலர்
(55013)(4.6.3)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12
11
1947

மறைவு
17
11
2014



திருமதி **இரத்தினேஸ்வரி மகேஸ்வரன்**

ஆலமரமாய் வீற்றிருந்து எமக்கெல்லாம்
ஆறுதலளித்த அம்மாவே!
கருவிலே ஒன்றாய் எம்மிருவரைச் சுமந்து
பாசமுடன் நற்பண்புகளை ஊட்டி வளர்த்து
பாரில் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே!
உங்கள் நினைவுகள் எம் உள்ளமதில் என்றும்
அழியா சுடரொளியாய் வீசும் அம்மா!

அன்னாரின் இறுதிச்சடங்குகளின் போது எம் துயரில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சிவபூதவராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (54982) (4.6.3)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## நீங்கா நினைவில் 8 ஆம் ஆண்டு



அமரர் **நல்லதம்பி கணேசன்**
(ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்- பச்சிலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்)

தோற்றம்
15.04.1928

மறைவு
16.12.2006

திதி: கார்த்திகை மாத அபரபக்க ஏகாதசி

அன்பின் சிகரமாய் திகழ்ந்த எம் ஐயாவே!
ஜாதி மதம் மட்டும் இல்லை
கடல் கடந்து வந்தது இந்த
பந்தமும் உறவும்- எங்கள் இதயம் கனிந்த
பாச மலர்களை உங்கள் காலடியில்
சமர்ப்பிக்கின்றோம்.
எங்கள் குடும்ப தீபத்தின் ஆத்மாசாந்தியடைய வாரிவளவு
கற்பக விநாயகரை மனதார வேண்டுகின்றோம்.


9/5. கோபால் லேன்,
கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம். (55003)(4.6.3)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18
12
1955



மறைவு
17
12
2005

**கதிர்காமு முருகேசு** (சிவபாதம்)

எங்கள் குடும்ப விளக்காய்
வாழ்ந்திட்ட எங்கள் தம்பியே!
உறவுகள் இருந்தாலும்
நீர் இருக்கிற மாதிரி இல்லை தம்பி!
என்றும் உன் பாசம் எங்களை
விட்டு அகலாது தம்பி!

(54774)(4.6.3)

நாகர்கோயில் கிழக்கு,
நாகர்கோயில்.

அன்பின் சகோதரிகள்,
இராசமலர், நாகேஸ்வரி,
மருமகன், மனைவி.

---

## ஆக்கத்திறன் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், டிசெ.17

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவன 5 ஆவது அணியினரின் ஆக்கத்திறன் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல.39, கல்லூரி வீதி, நீராவி யடியில் அமைந்துள்ள வாழ்க் கைத்திறன் மேம்பாட்டு நிறுவன பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் பயிலுநர்களின் கலை நிகழ்வு, கண்காட்சி, மண்டபம் திறப்பு, சான்றிதழ் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளதாகவும் கண்காட்சி பி.ப 5 மணி வரை இடம்பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ–10)

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன போஜன் ஞாபகார்த்த நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.17

அமரர் த.நா.போஜனின் 65 ஆவது பிறந்த தினமும் 3 ஆவது நினைவு தினத்தையும் முன்னிட்டு ஞாபகார்த்த நிகழ்வுகள் யாழ் மாவட்ட சாரணர் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றன.

யாழ்.மாவட்ட சாரணர் ஆணை யாளர், உதவி மாவட்ட ஆணை யாளர், நல்லூர் திரி சாரணர் களால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் மரநடுகை, அமரரின் படத்தை தலைமைச் செயலகத்தில் நிறுவுதல், அன்னாரின் பெயரால் இலங்கை சாரணர் சங்கத்தால் நடத்தப்படும் திரி சாரணர் கலைக்கூறு 04இல் பங்குபற்றுவோருக்குரிய 50 திரி சாரணர் கழுத்துப்பட்டியை யாழ். மாவட்ட ஆணையாளரிடம் கையளித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ–10)

---

## 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கதிரவேலு ரவிச்சந்திரன்**

தோற்றம்
12.09.1980

மறைவு
01.11.2014

கடந்த 01.11.2014 சுவிஸில் அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வத்தின் மரணச்சடங்கை சுவிஸில் நடத்திய உறவினர்களுக்கும் இந்த மரணச்சடங்கிற்கு சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது வீட்டில் நடைபெற்ற துக்க நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (17.12.2014) புதன்கிழமை எமது வீட்டில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
ஆஸ்பத்திரி வீதி, தொட்டிலடி,
சங்கானை.

# தொடர்ச்சிகள்

## அமைச்சர்

அடிதடி சண்டையாகியதில் கூட்டமைப்பு பிரதிநிதிகள் நால்வர் காயமடைந்தனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து அவசர கலந்துரையாடல் ஒன்று வடக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் முதலமைச்சர் செய்தியாளர்களிடம் பேசினார். அவர் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மிகத் துரதிர்ஷ்டவசமாக திடீரென முடிவுக்கு வந்தது. இதற்கான முழுப்பொறுப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் அவர் வெளியிலிருந்து கூட்டத்திற்குக் கொண்டு வந்த வெளியாள்களையுமே சாரும். தேர்தல் ஆணையாளரினால் அரசியல் சம்பந்தமாகவோ அர சியல்கட்சிகள் பற்றியோ வேட்பாளர்கள் பற்றியோ ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் உரை எதுவும் நிகழ்த்தக்கூடாது என்று மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில் இணைத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையில் அரசியல் ரீதியாகப் பேசி வடக்கு மாகாண சபையையும் அதன் ஆளுங்கட்சி உறுப்பினர்களையும் வடக்கு மாகாண சபையின் தேர்தல் அறிக்கையையும் கடுமையாக விமர்சித்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சர்வாதிகாரமாக அடக்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் முயன்றார்.

இதனால் அங்கு குழப்பம் ஆரம்பமாகியது. இதன்போது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தகுதியில்லாத மர்மநபர்கள் சிலரும் குறுக்கிட்டுக் கொண்டனர். குழப்ப்ம்மேலும் அதிகரித்தது. அமைச்சர் டக்ளஸ் சார்பில் கலந்துகொண்டவர்கள் கையில் கிடைத்தபொருள்களால் வன்முறைத் தாக்குதல் நடத்தினர். இதனால் கூட்டத்தில்பதற்றம்தோன்றியது. மக்கள் பிரதிநிதிகள் கூட்டத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்குச் சம்பந்தமில்லாது அழைத்து வரப்பட்ட வெளியாள்களும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தயாரித்து எடுத்துவந்திருந்த நான்கு பக்க அரசியல் அறிக்கை வாசிக்கப்பட்டமையும், இது முற்கூட்டியே நன்கு திட்டமிட்டு குழப்பத்தை உண்டாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி என்றே தெரிகிறது. மிகவும் வெட்கப்படவேண்டிய இந்த வன்முறைத் தாக்குதலில் வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்களான க.சர்வேஸ்வரன், விந்தன் கனகரத்தினம், சி.சிவயோகன் ஆகியோர் காயமடைந்துள்ளனர். மேலும் சில உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளனர். தாக்குதலின்போது பாதுகாப்புப் பிரிவினர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கியதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குஎவரும் பாதுகாப்பு வழங்கவில்லை என்பதும் கவலைக்குரியதே – என்று முதலமைச்சர் தெரிவித்தார். (உ–4)

## புலிச்

மேற்கண்டவாறு சாட்சியமளித்தார். 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி எனது கணவர் வீட்டில் படுத்திருந்தார். வீட்டின் முன்பாக இராணுவத்தினரின் பவள் வாகனம் வந்து நின்றது. அதிலிருந்து மூன்று பேர் இறங்கி வந்தார்கள். அவர்களில் இருவர் விடுதலைப் புலிகளின் வரிச் சீருடை அணிந்திருந்தனர். ஒருவர் பொலிஸ் உடையில் இருந்தார். எனது கணவரைக் கூப்பிட்டார்கள். அவரது அடையாள அட்டையைப் பார்த்து விட்டு, விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகக் கூறினார்கள். நான் பவள் வாகனத்தின் பின்னால் சிறிது தூரம் துரத்திச் சென் றேன். ஆனாலும் என்னால் அவரை மீட்க முடியவில்லை. – என்று தனது சாட்சியத்தில் அவர் கூறினார்.

பின்னர் நான் பல்வேறு இராணுவ முகாம்களிலும் சென்று கணவர் குறித்து விசாரித்தேன். ஆனால் அவர் எங்கும் இல்லை என்று சொன்னார்கள். 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி, சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விவரம் ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அதில் எனது கணவரின் பெயரும் இருந்தது. ஆனால் இன்றுவரையில் அவர் வீடு திரும்பவில்லை. எனவே எப்படியாவது எனது கணவரைக் கண்டுபிடித்துத் தாருங்கள் – என்று அவர் கண்ணீருடன் வேண்டினார். (ந–5)

## நேற்றும்

கொழும்பில் நேற்று நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அத்தனகல பிரதேச சபை ஆளும் கட்சி உறுப்பினர் இந்திக ராஜபக்ஷ, மீரிகம பிரதேச சபை உறுப்பினர் சோமரத்ன தியனெத்தி, சிலாபம் நகரசபை உறுப்பினர் ஜீவனி காரியவம்சம் ஆகியோர் எதிரணிப் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்குத்தாம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தனர். ஜாதிக ஹெல உறுமயவின் பாணந்துறை பிரதேச சபை உறுப்பினர் சாந்த பண்டார மற்றும் பேருவளை பிரதேச சபை உறுப்பினர் புஎன்சுமித்நிசாந்த ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸவை ஆதரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். (ந–ம)


## பாராட்டி அகமகிழ்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தின் அச்சாணிகளாக இருந்து எம்மை
சரியாக வழிநடத்தி கரவெட்டி பிரதேச நிர்வாகத்தினை
சாதனைகளுடன் திறம்படத் துலங்கச் செய்கின்ற



செ. சுபச்செல்வன்
உதவி திட்டமிடல் பணிப்பாளர்



ச. சிவஸ்ரீ
பிரதேச செயலாளர்



சி.சிவரஞ்சன்
கணக்காளர்

அவர்கள் இன்று (17.12.2014) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பொது நிர்வாக முதுமாணி பட்டம் வெறுவதையிட்டு அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் நாமும் அகமகிழ்கின்றோம்.

Best Wishes

**தலைவரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,**
**பிரதேச செயலகம் - கரவெட்டி.**



## மரண அறிவித்தல்



### வைரமுத்து தனபாலசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தனபாலசிங்கம் நேற்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து-தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், நாகலிங்கம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், அருமைத்துரை, சுப்பிரமணியம், கந்தசாமி, சரஸ்வதி, மயில்வாகனம், பாக்கியம், யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், டக்ஸினி (ஜேர்மனி), லியசுதன் (யாழ்.பல்கலைக்கழக நூலகம்), கிரிசாயினி (குடும்ப நல உத்தியோகத்தர்-நல்லூர் சுகாதார பணிமனை) ஆகியோரின் தந்தையும், ராஜ்குமார் (ஜேர்மனி), தாரணி, விஜயகுமார் ஆகியோரின் மாமனும், சரவணன் சுருத்திகா, ராம்ஜெயம், சிவானுஜன் லிதுர்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வடலித்தோட்டம் வடக்கு, மானிப்பாய்.**
T.P: 021 2255 024

(55029) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**



## தவறிவிட்டது NP BBJ/7238

நவநீதன் சுதர்மினி ஆகிய எனது மோட்டார் Cycle இன் புத்தகம் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கும் பிரதான வீதி இலங்கை வங்கிக்கிளைக்குமிடையில் 15.12.2014 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

(56020) (45.3)

தொடர்பு: 077 208 5402

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு கோவில் குடியிருப்பு J 301 கிராம அலுவலர் பிரிவு, நகரசபை எல்லைக்கு உட்பட்ட, சாவகச்சேரி A9 வீதியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் கச்சாய் வீதியில் 19 பரப்பு 11.36 குளி அளவு கொண்ட தென்னங் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 07777 22305** (53311) (10)

பல வர்ணங்களிலான தரமான கிரணைட் வகைகளைப் பெற்றுக்கொள்ள...
கிரணைட் வேலைகள் செய்து தரப்படும்.

**வணக்கத் தலங்களுக்கு விசேட விலைக் கழிவு.**

**metro granite**

(சி/17943)(4.3.6)

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0212224888



**யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்**
**புலமைப்பரிசில் பரீட்சை-2014**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பாடசாலை மாணவன் **சுதாகரன் நிதுஷன்** அவர்களையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

Congratulation

(55001)(3.6.4)

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்.**



## இதய அஞ்சலி



யாழ்ப்பாணம் நல்லூர் பிரிவின் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி சங்கத்தின் (சமுர்த்தி மகாசங்கத்தின்) முகாமைத்துவ பணிப்பாளராகக் கடமையாற்றும்
**திருமதி ராகினி யோகராஜா**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சிவயோகம் கந்தையா**
அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள் (சமுர்த்தி) சங்கம்.**
**யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம்** (55017) (12.3)



## 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
18.03.1944



ஆண்டவன் அடியில்
21.11.2014

### அமரர் துரைசிங்கம் நடராசலிங்கம்

கடந்த (21.11.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் துரைசிங்கம் நடராசலிங்கம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் தம்மாலான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி ஆறுதலளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (18.12.2014) வியாழக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 20.12.2014 சனிக்கிழமை அவரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

(55015)(10.3)

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

தகவல்:
**குடும்பத்தினர்.**

# தொடர்ச்சி

## கூட்டமைப்பின்

சந்திரிகா மேலும் குறிப்பிட்டதுடன், போர் வெற்றியின் 75 வீத உரிமை தனக்குரியது. 25 வீதமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குரியது – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கேள்வி: போரை நூற்றுக்கு 75 வீதம் நிறைவு செய்தீர்கள் என கூறினீர்கள். ஆனால், இது பொய் என்று முன்னாள் இராணுவத்தினர் கூறியுள்ளனரே?

பதில்: முழு வடக்கு மாகாணமும் பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த போதுதான் நான் ஆட்சிக்கு வந்தேன். அப்போது மன்னார், தலைமன்னார், காங்கேசன்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய 5 இடங்களில் மட்டுமே எமது முகாம்கள் இருந்தன. ஏனைய அனைத்துப் பகுதிகளும் பிரபாகரன் வசம் இருந்தன. அவ்வாறான நிலையில், ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தில் முழு யாழ்ப்பாணத்தையும் விடுவித்தேன். அதை எப்படி இல்லை என்பது? பிரபாகரனின் கட்டுப்பாட்டிலிருந்த 75 வீதமான நிலத்தை நாமே விடுவித்தோம். நான்தான் போரை முடிவுக்குக் கொண்டு வந்தேன் என நான் கூறமாட்டேன். அது இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவத்தினரால் செய்யப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபோது ஒரு பகுதியில் மட்டுமே புலிகள் இருந்தனர். புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த 25 சதவீத நிலத்தை மட்டுமே அவர் விடுவித்தார். புதுக்குடியிருப்பு உள்ளிட்ட கிழக்குப் பகுதி மட்டுமே அவர் விடுவிக்க இருந்தது. அதுவும் இராணுவத்தளபதி உள்ளிட்ட இராணுவத்தினரால் செய்யப்பட்டது. இந்நிலையில், அவ்வாறு கூறுவது புதுமையானகதையாகும். இந்த வியாதிக்கு மருந்து இல்லை.

உல்கிலுள்ள எல்லா ஆட்சியாளர்களுக்கும் நடந்தது எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் நான் ஆட்சியைக் கையளித்து விட்டுச் சென்றேன்.

கேள்வி: ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரணிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளதா?

பதில் : அதைப்பற்றி கூறுவதானால் சந்தேகமும், அச்சமும் உள்ளது. அதைக் கூறினால், வடக்கில் அரசின் அச்சுறுத்தல்கள் அதிகரிக்கும் அந்த மக்கள் நிம்மதியாக உண்டு உறங்க முடியாத நிலை ஏற்படும்(ற)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னக்குட்டி சோதிநாதன்



மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் "சாந்தி" இல.08 கனகபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னக்குட்டி சோதிநாதன் (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் நாகலிங்கம் சோதிநாதனின் (கிளிநொச்சி புனித சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் (கிளி/கனிஷ்ட மகா வித்தியாலயம்), கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் -முன்னை நாள் ஆசிரியரும், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்னை நாள் அதிபரும், முன்னை நாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும்) அன்பு மனைவியும், கலாநிதி, தயாநிதி, கபிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரதாபன், சிவஞானம், அபிராமி ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரேசன், தாரணி, சுமுகன், மேதினி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சாந்தி", இல.08, கனகபுரம், கிளிநொச்சி. (51309) (4.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 • 07 • 1932



மறைவு 15 • 12 • 2014

### திருமதி. இராஜராஜேஸ்வரி பொன்னையா

[ திருமதி. அப்போ மகேந்திரம் ]

காரைநகர் மகேந்திரம் வீதி தங்கோடையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராஜராஜேஸ்வரி பொன்னையா 15.12.2014 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிபிள்ளை (பெரிய பொடி), பேரம்பலம் - விசாலாட்சி தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற முருகேசு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் (அப்போ மகேந்திரம்) அன்பு மனைவியும், அருட்சோதி, கலாசோதி, புவனச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், Dr.சோமசுந்தரம், திருசிற்றம்பலம், நிலாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.ஜெயந்தன் - Dr.அனா, Dr.சிவஜா - Dr.ஜேக்கப், ராதிகா - Dr.திலீபன், Dr.துளசி - Dr.திருவருட்செல்வன், ஜெயகாந்தன், ராக்வன், மகேன், நரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இலியானா, ஜேடன், டிலன், ஆகாஷ், பிரணவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 18.12.2014 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

19-3/2, Collingwood Place, Wellawatte. 011 2362353

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா இராஜசிங்கம்



நீர்வேலி தெற்கு பூதர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராஜசிங்கம் நேற்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, காராளசிங்கம், மனோன்மணி மற்றும் திருஞானசம்பந்தர், இந்திராணி ஆகியோரின் சகோதரனும், உமாபதியின் அன்புக் கணவரும், இராஜேந்திரா, உதயகங்கா (லண்டன்), விஜித்தா, விஜா யினி (ஆசிரியை-மன்.இலுப்பக்கடவை அ.த.க. பாடசாலை), நந்தரூபி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார் (லண்டன்), சதீஸ்வரன் (ஜேர்மனி), உமாசங்கர் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-நல்லூர்), ஜெயமோகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், அரிஷா, அஷ்விதா, அஷ்விகா, லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.12.2014) நடைபெற்று, தகனக்கிரியை நீர்வேலி வில்லுமதவடி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(55027) (10) T.P: 077 968 8470, 077 018 7900

### Dr. நமசிவாயம் பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி- தங்கோடை, காரைநகர்)



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப்பிடமாகவும், திருநெல்வேலியில் வசித்துவந்தவருமான நமசிவாயம் பாலசுப்பிரமணியம் நேற்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நமசிவாயம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை (தலைப்பா) -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான அம்பிகை, நடராசா (Banker), திருநாவுக்கரசு மற்றும் நல்லம்மா ஆகியோரின் சகோதரரும், தேவகுஞ்சரி, குகநேசன் (Foreman-இ.போ.ச. காரைநகர்), கணேசன், சிவநேசன், சிவமணி, கஜநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தில்வேல், வசந்தகுமாரி, யசோதா, நந்தினி, காலஞ்சென்ற தவராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 32/4, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (17.12.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

32/4, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி. (55026) (10) T.P: 077 672 8093, 077 557 2025, 077 287 8097

### கந்தையா லோகநாதன்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் விசுவமடுவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தையா லோகநாதன் நேற்று (16.12.2014) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணி தேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்க ளான இராசபூபதி, இராஜேந்திரம், ஆனந்த ராசா மற்றும் சரோஜினிதேவி ஆகியோ ரின் சகோதரரும், தர்மினி, ஷாமினி ஆகி யோரின் அன்புத் தந்தையும், யோகலிங்கம், சாந்தகுமார் ஆகி யோரின் அன்பு மாமனும் சுஜன், லேக்ஹா ஆகி யோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.12.2014) செவ் வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் 12ஆம் கட்டை இந்து மயா னத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55025) (10) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சின்னம்மா சின்னக்கிளி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை நிரந்தரவதிவிடமாகவும், சண்டிலிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சின்னக்கிளி நேற்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர்-இலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னக்கிளியின் அன்பு மனைவியும், மார்க் கண்டு, தர்மலிங்கம், நடேசு ஆகியோரின் சகோதரியும், சௌந்தரராசா, பாமா, கலாதேவி, கண்ணதாசன், கௌரி, ஜெயா, கிளிரூபன் ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திராதேவி, பரராசசிங்கம், ஞானசேகரம், உமா, சந்திரகுமார், சௌந்தரராசா, யக்கொலின் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2014) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55024) (10) தகவல்: குடும்பத்தினர்.

# செய்திகள்

# 30 இலங்கை மீனவர் நல்லிணக்க விடுதலை

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு

கொழும்பு. டிசெ.17

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நல்லிணக்க அடிப்படையில் இலங்கை மீனவர்களையும் அவர்களது படகுகளையும் எதிர்வரும் 22 ஆம் திகதி விடுவிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தியக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 30 பேரும் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட 19 படகுகளும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளநிலையில்மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு உத்தர விட்டுள்ளது.

புத்தளம் மற்றும் நீர்கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுப் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலை யில் மத்திய அரசு மீனவர்களை விடுவிக்க உடன்பாடு தெரிவித் துள்ளது.

இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரி மீனவர்களின் உறவினர்கள் நேற்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-14)

## யாழில் சலூன்களுக்கான நேரக் கட்டுப்பாடு தளர்வு

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களுக்கு நத்தார், புதுவருட, தைப் பொங்கல் ஆகிய தினங்களை முன்னிட்டு நேரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் நிலையங்களைத் திறந்து சேவையாற்றுவதற் குரிய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், சங்கானை, தீவகம், அச்சுவேலி, தென்மராட்சி, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய சிகை ஒப்பனையாளர் சங்கங் கிளையினருக்கு இது தொடர்பாக அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய தினங்களை முன்னிட்டு நாளை வியாழக்கிழமையிலிருந்து எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி வரை நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, ஜன்வரி 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் தொழில் நிலையங்களைத் திறந்து மக்களுக் குச் சேவையாற்றுமாறும், நத்தார் தினத்தன்று சகல சிகை ஒப்பனை நிலையங்களையும் மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு சங்கம் அறிவித்துள்ளது.(த)

## இந்திய மீனவரையும் விடுவிக்க வேண்டும்

### மோடிக்கு பன்னீர் கடிதம்

இலங்கை மீனவர்களையும் படகுகளையும் விடுவிப்பதைப்போன்று இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு தமிழக முதல்வர் பன்னீர்ச் செல்வம் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்தியாவில் உள்ள இலங்கை மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கையில் உள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்வரும் நத்தார் பண்டிகையை இலங்கை மீனவர்கள் மட்டுமல்ல தமிழக மீனவர்களும் தங்களது குடும்பங்களுடன்கொண்டாடவேண்டும்.மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்புற்றுள்ளது. இதில் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பன்னீர்ச்செல்வம் குறிப்பிட்டுள்ளார். (த-14)



பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வரும் நிலையில் நேற்று சுதந்திர ஊடக இயக்கத்தினர் தமது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர். (த-10)

# புலிச் சந்தேக நபர் குற்றமற்றவரென விடுவிக்கப்பட்டார்

அம்பாறை, டிசெ. 17

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து, அரச படையினருக்கு எதிராகத் தாக்குதல்கள் மேற்கொண்டாரெனக் குற்றஞ் சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குறித்த இளைஞரான வீரமுனையைச் சேர்ந்த அப்புக்குட்டி சிவகுமார் (மெய்யப்பன்) என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில், மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், எதிரியான இளைஞரைக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்த குறித்த அப்புக்குட்டி சிவகுமார், படையினர் வழங்கிய மன்னிப்புக் காலத்தின்போது புதுமாத்தளன் பகுதியில் வந்து படையினரிடம் சரணடைந்துள்ளார்.

இதனையடுத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் அவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்த போது 1997 – 1998 இற்கு இடைப்பட்ட காலத்தில் கிளிநொச்சி இராணுவமுகாம் மற்றும் அரச இராணுவப் படையினருக்கு எதிராகத் தாம் தாக்குதல் நடத்தியதாகக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைத் தமது கைப்பட எழுதி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் வழங்கியிருந்தார்.

இதன்படி 16.11.2012 இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அப்புக்குட்டி சிவகுமார் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தபோது எதிரி குற்றத்தை மறுதலித்தாரெனினும்,

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பில் உண்மை விளம்பல் விசாரணையை மன்று நடத்தியதுடன், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியால் தானாக, சுயமாக அச்சுறுத்தலின்றி எழுதிக் கொடுத்ததென் ஏற்று வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியமாக ஏற்கவும் தீர்ப்புளித்தது.

இருப்பினும் ஐந்தரை வருடகாலம் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்புக்குட்டி சிவகுமார் மீதான இறுதி வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், அப்புக்குட்டி சிவகுமாரை வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

வழக்கில் எதிரி மீது தெளிவில்லாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகவும், குற்றம் எப்போது, எந்த நேரத்தில், இடம்பெற்றமை மற்றும் தடயங்கள் தொடர்பான அறிக்கைகளில்லையெனவும் தீர்ப்பின்போது நீதிபதி தெரிவித்தார்.

மேலும், குற்ற ஒப்புதலைச் சாட்சியமாக ஏற்றாலும் கூட இன்னுமொரு சாட்சியத்துடன் சுயாதீன மேலதிக சாட்சியங்களை, தடயங்களைக் கொண்டு வந்து ஒப்புறுதிப் படுத்தியிருக்கவேண்டுமெனவும், இதில் வழக்கு தொடுநர் தரப்பு தவறியிருப்பதாகவும் தெரிவித்த நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம்,

சாட்சியம் எந்தளவு நம்பகத்தன்மை உடையதாகவும், மன்றால் திருப்தியாக ஏற்பதற்குச் சாதகமானநிலையென்றுஎடுக்கமுடியவில்லை எனவும் தெரிவித்து,

நியாயமான சந்தேகத்திற்கப்பால் குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரியை விடுதலை செய்வதாகவும் தீர்ப்பளித்தார்.

தற்சமயம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிவரும் நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், வவுனியா மேல் *நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை* விசாரணை செய்துதீர்ப்புவழங்குவதற்கெனப் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-30)

## பிரபாகரனின் மைத்துனர் கனடாவில் உயிரிழப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மைத்துனர் கனடாவில் உயிரிழந்துள்ளதாகக் கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை 13ஆம் திகதி அவர் உயிரிழந்தார் எனவும், உயிரிழந்தவர் வே.பிரபாகரனின் மூத்த சகோதரி விநோதினியின் கணவரான சுந்தரம் ராஜேந்திரன் எனவும், இருதய நோய்காரணமாகவே அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-10)

# இராமேஸ்வரம் மீனவர் தொடர் வேலை நிறுத்தம்

## சக மீனவர்களையும் படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி

இராமநாதபுரம், டிசெ. 17

இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி நேற்று முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கப் பொதுச் செயலாளர் போஸ் தெரிவித்தார்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை, தஞ்சை ஆகிய நான்கு மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று ஒன்று கூடி வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக்கடற்படையினரால்சிறைப் பிடிக்கப்பட்டுப் பின்னர் மீனவர்களை மட்டும் விடுதலை செய்து படகுகளை விடுவிக்க இலங்கை அரசுவிடுவிக்கமறுத்துவருகின்றது.

இந்தநிலையில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை, தஞ்சை மற்றும் காரைக்கால் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 81பேர் இலங்கைக்கடற்படையினரால்சிறைப் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்தும், இலங்கைச் சிறையில் வாடும் 81 மீனவர்கள் மற்றும் 87 படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் நாகை, காரைக்கால், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் ஏற்கனவே காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். மேலும் பல கோடி மதிப்பிலான அந்நிய வர்த்தகம்பாதிப்படைந்துள்ளது.

நான்கு மாவட்ட மீனவர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக இராமேஸ்வரம் மீனவர்களும் நேற்று முதல் தொடர் வேலை நிறுத்தம் மேற்கொள்ளுவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது—என்றார். (த-14)



## மைத்திரிக்கு ஆதரவு வழங்கியோர் இடைநிறுத்தம்

### கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

கொழும்பு, டிசெ.17

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானித்துள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் முன்னணி வகிக்கும் செயற்பாட்டாளர்கள் 11 பேரின் உறுப்புரிமையை இடைநிறுத்தி வைப்பதற்கு அந்தக் கட்சியின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது.

இவ்விதம் கட்சி உறுப்புரிமையல் இருந்தும் இடை நிறுத்தி வைக்கப்படவுள்ள அனைவருமே கட்சியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினர்களாவர். கடந்த 12ஆம் திகதி கட்சித் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகரவின் தலைமையில் அவசரமாகக் கூட்டப்பட்டிருந்த அரசியல் கூட்டத்தில் வைத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதுபற்றி சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு இதுவரையிலும் எழுத்து மூலமான அறிவித்தலொன்றும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிந்த்துள்ளது.

இந்த விவகாரம் சம்பந்தமாக எதிர்வரும் 19ஆம் திகதி கூடும் விசேட அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-22)

# ஜே.ஆரின் நிறைவேற்று முறை ஒழிக்கப்படவே மாட்டாது

## மாற்றப்படப் போவது மஹிந்த கொண்டு வந்த திருத்தம் மட்டுமே என்கிறார் ரணில்



கொழும்பு, டிசெ.17

பொதுவேட்பாளர் மைத்திரி பால சிறிசேன வெற்றியீட்டிய பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படாது. மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிய நிறைவேற்று அதிகார முறை மத்திரமே என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. குருநாகலை, உடவல்பொல விளையாட்டுத்திடலில் இடம் பெற்றிருந்த பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"போர் முடிவுற்றதன் பின்னர் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுமென்று அன்று சொன்னார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இன்று நாட்டில் நிலவும் நிலைப்பாடு என்ன?. இன்று வாழ்க்கை செலவினம் எந்தளவுக்கு உயர்வடைந்துள்ளது என்பதை இந்த நகர மக்கள் நன்கறிவார்கள். கிடைக்கும் வருமானம் அன்றாடச் செலவுகளுக்கே காணாது. எத்தனை பேர் பட்டினியுடன் இருக்கிறார்கள்?. இவை தெரியாத ஜனாதிபதியொருவரே மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் நிற்கிறார். இவரது இந்தப் பயணத்தை நிறுத்த வேண்டும். அதற்காகத்தான் நாம் மைத்திரி பால சிறிசேனவை களத்தில் நிறுத்தியுள்ளோம்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் மைத்திரிபால பொம்மையொன்றாகவே முன்னிறுத்தப்பட்டிருந்தார். என்னை அதிகாரத்துக்கு வருமாறு கூறுகிறார்கள். நான் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதாயின் இவை எல்லாவற்றையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. என்னால் நேரடியாகவே ஜனாதிபதி வேட்பாளராகிவிடக் கூடியதாக இருந்தது. உங்கள் அனைவருக்கும் நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கி விடுவதற்கே நாம் கைகோர்த்துக் கொள் கிறோம். அந்த எதிர்காலத்தை உங்களுக்குப் பெற்றுக் கொடுப்போம் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்"– எனவும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-22)

# மைத்திரி பாலவுக்கு ஜே.வி.பி. ஆதரவளிக்கும் சாத்தியம்?

கொழும்பு, டிசெ.17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் தமது ஒத்துழைப்பை வழங்கப் போவதில்லை என்று ஜே.வி.பி. அறிவித்துள்ள போதும், அடுத்து வரும் சில வார காலத்துள் ஜே.வி.பி. எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் மேடையில் தோன்றுவதற்கோ அல்லது பகிரங்கமாகவே அவருக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடியதான பின்புலமொன்று உருவாகி வருகின்றது என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரி பால சிறிசேன ஆகிய இரு ஜனாதிபதி வேட்பாளர்களில் எவருக்கு ஒத்துழைப்பை வழங்குவது என்பது தொடர்பாக இதுவரையிலும் ஜே.வி.பி.கட்சி தீர்மானமொன்றுக்கு வரவில்லை. எனினும் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கக் கூடிய ஒரே தலைவர் மைத்திரிபால சிறிசேனவே என்பதாக பகிரங்கமாகவே எதிர்வு கூறியிருந்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க. மஹிந்த ராஜ்பக்ஷவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தீர்மானத்துக்கு வந்ததன் பின்னர் ஜே.வி.பி. கட்சியைப் போன்று அரசியல் எதிர்வுகூறல்களைக் கூறும் வேறும் கட்சியயொன்று இந்த நாட்டில் இல்லையென ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க கூறியிருந்தார். அது மாத்திரமின்றி இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றே ஆகவேண்டியுள்ளது என்று அவர் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

அதேவேளை, நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் சட்ட விரோதமானது எனவும் தெரிவித்து நாடு முழுவதிலும் மிகப் பெரிய பரப்புரையொன்றைக் கொண்டு சென்றிருந்த ஜே.வி.பி. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து விடுவதற்காக மாவட்டங்கள் மட்டத்திலான பெரிய பேரணிகள் மற்றும் மக்கள் சந்திப்புக் களையும் அது ஏற்கனவே ஒழுங்கு செய்துள்ளது. (ற-22)

## முஸ்லிம் பிரதிநிதிகள் வெளிநாடு செல்லத் தடை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு கட்சித் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் வெளிநாடு செல்வதற்கு கட்சித் தலைவரான ஹக்கீமிடம் அனுமதி கோரினார் எனவும், அதையடுத்தே குறித்த கண்டிப்பான உத்தரவை மு.காவின் தலைவர் ஹக்கீம் பிறப்பித்தார் எனவும் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மு.காவின் தலைவரும் நீதியமைச்சருமான ஹக்கீம் கூறுகையில்,

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும்வரை வெளிநாடு செல்லக்கூடாது. கட்சி உறுப்பினர்களின் நம்பகத்தன்மையைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம்"– எனத் தெரிவித்தார். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை தமது முடிவை உத்தியோகபூர்வமாக வெளியிடாத நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# காலத்தை வீணடிக்கும் ஜனாதிபதியல்ல நான்

## இப்படிக் கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, டிசெ.17

நான் காலையில் ஒன்றைக் கூறி மதியத்தில் ஒன்றைக் கூறும் ஜனாதிபதியொருவரோ வெறுமனே காலத்தை வீணடிக்கும் ஜனாதிபதியொருவரோ அல்லர் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ.

"நான் ஏனைய வேட்பாளர்களைப் போன்று காலையில் ஒன்றைக் கூறி மதியத்தில் வேறொன்றைக் கூறி மாலையில் பிறிதொன்றைக் கூறமாட்டேன். ஆரம்பத்தில் 24 மணித்தியாலயத்தில் எனக் கூறி அதன் பின்னர் நூறு தினங்களில் என்று கூறி இறுதியாக ஆறு ஆண்டுகளில் என் கூறும் இனத்தைச் சேர்ந்த வேட்பாளரொருவரும் அல்ல என்பதை உங்களுக்குத் தெளிவாக ஞாபகப்படுத்துகிறேன். அமைச்சர்களாக பணியாற்றிய காலத்திலும் கூட நாம் கருமமாற்றும் அமைச்சர்கள் என்றே பெயர் பெற்றிருந்தோம். அதனால் மக்களைச் சந்திக்கச் செல்வதற்கு எனக்கு பயமோ தயக்கமோ இல்லை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே மைத்திரி பாலவைக் குறிவைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (ற-22)

## சிறைக் கைதி தப்பி ஓட்டம்



கொழும்பு, டிசெ.17

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை சிறைச்சாலையில் 4 வருடங்களாக கைதியாக இருந்த இவர் சுகவீனமுற்ற நிலையில், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள் ளார்.

தப்பிச் சென்றவர் நிதி மோசடி உள்ளிட்ட 39 குற்றச்சாட்டுகளுடன் தொடர்பு உடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யுங்கள்

## இரு பிரதான வேட்பாளர்களிடமும் ஊடக அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ.17

ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யுமாறு இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் எட்டு ஊடக அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையின் முன்னணி ஊடக அமைப்புக்கள் கூட்டாக இணைந்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன. ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஊடக சுதந்திரம் குறித்த விடயங்கலை உள்ளடக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பத்திரிகை நிறுவனம், ஊடக நிறுவனங்களின் சார்பில் ஊடக அறிக்கை மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை உறுதி செய்தல், 1973ஆம் ஆண்டு பத்திரிகைப் பேரவை சட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட சில முக்கிய கோரிக்கைகளும் அந்தக் கோரிக்கைகளுக்கான காரணங்களும் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, பத்திரிகை ஆசிரியர் பேரவை, இலங்கை பத்திரிகை சமூகம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கை முஸ்லிம் ஊடகப் பேரவை உள்ளிட்ட அமைப்புக்கள் சேர்ந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன. (ற)



## எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை மறுதினம்

கொழும்பு, டிசெ.17

பொது எதிரணியின் தேர்தல் விஞ் ஞாபனம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் வைத்து வெளியிடப்படவுள்ளது என எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரின் ஊடகப் பேச்சாளரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பு–07 இல் உள்ள பொது வேட்பாளர் மைத்திரிபாலவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சியையும், அபிவிருத்தியையும் அடிப்படையாகக் கொண்டு இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது 100 நாள் வேலைத்திட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பான முழுமையான விவரம் தேர்தல் விஞ்ஞாபனத்தினூடாக வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

அனைத்து தரப்பினருக்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அமையும். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில், பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசனைகளை நடத்திவருகின்றோம். நல்லாட்சியையும், அபிவிருத் தியையும் உருவாக்குவதே எமது நோக்கமாகும். அதற்கான நேர அட்டவணைகளைத் தயாரித்து நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ற–சி)

## தேசிய கடனை அரசு குறைத்து காட்டுகிறது

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

இலங்கை அரசு தேசிய கடனை பல்வேறு குறுக்கு வழிகளில் குறைத்துக் காட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அரசு தமது கடன்படுகையைச் சிறிய நிறுவனங்களுக்கு மாற்றிவிடும் கொள்கையை கடைபிடித்து வருகிறது. உதாரணமாக, புத்தளம் அனல் மின்சார நிலையத்துக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை அரசு லங்கா அனல் நிறுவனத்துக்கு மாற்றிவிட்டது.

இதன் காரணமாக இறுதியில் பொதுமக்களே கடன்களையும் அதற்கான வட்டிகளையும் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது"– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அரச வங்கிகளிடம் இருந்து பெறும் கடன்களுக்கான வட்டிகளை மக்கள் வங்கி மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்றவை செலுத்துகின்றன. இதன் காரணமாகவே பொதுமக்கள் அதிகமான மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் நகர அபிவிருத்திகள் என்ற பெயரில் நகரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு பாதைகள் அதிவேக பாதைகளாக மாற்றப்படுகின்றன. எனினும் இதற்காக 7 வீத வட்டியில் கடன்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன"– என்றும் அவர் கூறியுள்ளார். (ற)




## தேர்தல் பரப்புரைக்கு பஸ்கள் ரசீதைச் சமர்ப்பிக்க உத்தரவு

### தேர்தல் ஆணையாளர் பிறப்பிப்பு

கொழும்பு, டிசெ.17

பாணந்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக்காக இரத்தினபுரி பஸ் டிப்போவில் இருந்து விடுவிக்கப்பட்ட 25 பஸ்கள் தொடர்பில் உரிய கொடுப்பனவு ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்காக 500 பஸ்களை ஈடுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக ஏற்கனவே பெபரல் என்ற தேர்தல் கண்காணிப்பு நிலையம் முறையிட்டிருந்தது. இந்த நிலையிலேயே இரத்தினபுரி பஸ் டிப்போவில் இருந்து 25 பஸ்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த பஸ்கள் விடுவிக்கப்பட்டபோது அவற்றுக்காக செலுத்தப்பட்ட பணத்துக்கான ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் இரத்தினபுரி பஸ் டிப்போ முகாமைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவும் உரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டு பஸ்களை வாடகைக்கு அமர்த்திச் செல்லமுடியும் என்று தெரிவித்திருந்தார். (ற)

NORTHSHORE
COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
www.northshore.lk



NORTHSHORE COLLEGE இல் பொறியியல் அல்லது வணிக பட்டங்களுடன் மாற்றத்தின் முன்னோடியாக இருங்கள்.
எமது பட்டதாரிகளை மாற்றத்தின் முன்னணியில் நீங்கள் காண்பீர்கள்.

UWE BRISTOL University of the West of England

- MEng / BEng (Hons) Civil Engineering
- MEng / BEng (Hons) Electrical & Electronic Engineering
- BSc (Hons) Business Administration
- BSc (Hons) Software Engineering

- University of the West of England பல்கலைகழகம் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள 50 தலைசிறந்த பல்கலைகழகங்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது.
- உயர் தரத்தில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் உண்டு.
- முன்னணி வங்கிகள் மூலம் வங்கிக் கடன்கள் ஏற்பாடு செய்துதரப்படும்.
- தங்குமிட வசதிகளை ஒழுங்கு செய்ய முடியும்.

Northshore இல் கற்பிக்கப்படும் சகல கற்கை நெறிகளும் University of the West of England, Bristol, UK யினால், வழங்கப்படுகின்றன. இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் இவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

JANUARY
அனுமதிக்கு இப்பொழுதே இணைந்து கொள்ளுங்கள்

Thorn

141, Church Road, Colombo-15, 011 599 0000 | 0715 500 200

17 DEC 2014

## சண்டைக்கு முன்....



## சண்டை...



ப.1 விரிவு

## சண்டைக்கு பின்....



நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது இரு கட்சி களுக்கிடையில் ஏற் பட்ட கைகலப்பின் பதிவுகள்.... (21-86)

# தொடர்ச்சிகள்

கூட்டம் ஆரம்பம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் சுமார் 6 மாதங்களின் பின்னர் நேற்று நடைபெற்றது. கடந்த ஒரு மாத காலத்துக்குள் இரு தடவைகள் திகதியிடப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நேற்று கூட்டம் கூட்டப்பட்டது. காலை 9.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். "தேர்தல்கள் திணைக்கள ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி, இந்தக் கூட்டத்தில், தேர்தல் தொடர்பான, கட்சி சார்ந்த கருத்துக்களை முன்வைக்க முடியாது" என்று தெளிவாக அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் சில நிமிடங்கள் மட்டுமே உரையாற்றினார். யாழ். அரச அதிபர் அறிவுரைப்படி கூட்டத்தில் அரசியல் பேசுவதைத் தான் தவிர்த்துக் கொள்கிறார் என்று கூறினார்.

முதலமைச்சர் உரை

"பொருளாதார ரீதியான கூட்டங்களில்கூட அரசியல் வேறுபாடுகளையும் வன்மங்களையும் உட்புகுத்தாதீர்கள். இணைத் தலைவர் டக்ளஸ், நான் பேசி முடித்தவுடன், வழக்கமாக நான் அரசியல் பேசுவதாகவும் இது பொருளாதார ரீதியான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் என்பதையும் எமக்கு நினைவுபடுத்துவார். வெறும் அரசியல் கட்சிகள் ரீதியான கண்ணோட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு மக்கள் நலம் சார்பான மனோ நிலையுடன் எதிர்காலத்தில் நாம் பயணம் செய்ய வேண்டும்" என்றார் முதலமைச்சர்.

"இன்றும் (நேற்று) எம்மிடையே எதிர்ப்பு அரசியல் கலாசாரமே மேலோங்கி நிற்பதாக உணர்கின்றேன். எமது 'அரசியல் பயணமானது மக்களின் குறை தீர்க்கும் பயணமாகவே அமைய வேண்டும். அரச அமைச்சரும் நாமும் ஒன்று சேர்வது எம்முடைய தனிப்பட்ட கட்சிகளின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த அல்ல, மக்களின்பிரச்சினைகளை நாம் ஒன்று சேர்ந்தேனும் தீர்த்து வைக்கவே என்ற எண்ணம் எம் ஒவ்வொருவர் மனதிலும் மேலோங்கினால்த்தான் விடிவு காலம் வரும்.

ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படையில் நாங்கள் மாறுவோமா என்ற கேள்வி பூதாகாரமாக எழுந்துள்ளது. ஆனால் எம் மனோநிலையில் மாற்றம் அவசியம்.

"மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையில் இருக்கும் உறவு முறை இன்னமும் சரியாக ஒழுங்கு செய்யப்படவில்லை. எனினும் தேர்தலின் பெறுபேறுகளைப் பாதிக்கும் வண்ணம் பேச வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் விடுத்த அறிக்கைக்கு அமைவாக நான் கூற வந்த சில விடயங்களை இத்தருணத்தில் தவிர்த்துக் கொள்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து கொழும்பு அரசால் வடக்கு அரசுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பில் விளக்கமளித்தார். ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் நிதியில் பெரும்பகுதி கொழும்பு அரசின் திட்டங்களுக்கே செலவிடப்படுகின்றது என்றும் அப்படிப்பட்ட திட்டங்களிலேயே ஊழல் இடம்பெற்றதாக அண்மையில் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் உரை

முதலமைச்சரின் உரையைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் உரையாற்றினார். அவரது உரை முற்றிலும் அரசியல் கப்பானதாக இருந்தது. தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கியவாக்குறுதிகளைநிறைவேற்றவில்லை என்று குற்றஞ்சாட்டினார். இராணுவத்தை குடாநாட்டிலிருந்து வெளியேற்றுவோம் என்றும் ஆளுநரை மாற்றுவோம் என்று கூறிய கூட்டமைப்பு அவற்றைச் செய்யவில்லை என்றும் பொய்கூறி மக்களை ஏமாற்றப்பார்க்கிறது கூட்டமைப்பு என்றும் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டே செல்கின்றனர்.

அமைச்சரின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அரசியல் பேச்சு கூட்டமைப்பு உறுப்பினர்களை உசுப்பேற்றியது. வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் அதற்குக் கண்டனம் தெரிவித்தனர். அரசியல் பேச வேண்டாம் என்று அமைச்சருக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு இடையே அமைச்சர் தனது உரையை முடித்தார். அதன் பின்னர் எழுந்த வடமாகாண எதிர்க் கட்சித் தலைவர், மாகாண சபையின் நிதி விடயங்கள் தொடர்பில் பிரதம செயலரிடம் சில சந்தேகங்களை எழுப்பினார். அவற்றுக்குப் பதிலளிக்கப்பட்டது. இதனை அடுத்து கூட்டமைப்புக்கும் பதிலளிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் எம்.சிவாஜிலிங்கம் 'மைக்'கைப் பெற்றுக் கொண்டார்.

அவர் அப்படிப் பேச முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் மறுத்தார். சிவாஜிலிங்கத்திடமிருந்து 'மைக்'கைப் பிடுங்கும்படி உத்தரவிட்டார். அப்படிச் செய்ய வேண்டாம் என்று வடமாகாண சபை உறுப்பினர்கள் அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கைகலப்பு, அடிபிடி ஆரம்பம்

சிவாஜிலிங்கம் தொடர்ந்து பேச முற்பட்டபோது ஈ.பி.டி.பியினர் தரப்பிலிருந்து கடுமையான – பொது அவையில் பயன்படுத்தத்தகாத – வார்த்தைகள் பறந்து வந்தன. பதிலுக்குக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் வேலணை பிரதேச சபைத் தலைவர் போஸ் எனப்படும் தவராசா தான் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்து, மண்டபத்தின் மத்திக்கு வந்து அமைச்சரிடம் ஏதோ முறையிட்டார். இதனைப் பார்த்த சிவாஜி, தனது இடத்திலிருந்து தவராசாவிடம் சென்று அவரை இருக்கைக்குத் திரும்பும்படி சத்தமிட்டார். அதற்கு கூட்டத் தலைவருடன்தான் தான் பேசுகிறார் என்று தவராசாவும் சத்தமிட்டார். இவர்கள் இருவரையும் விலக்குப்பிடிப்பதற்குச் சிலர் முற்பட்டனர். அதற்கிடையில் அவர்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அது வளர்ந்து அடிதடியாக மாறியது.

இரு தரப்பினருக்கும் இடையே விலக்குப் பிடிக்க முயன்ற வடமாகாண சபை உறுப்பினர் சிவயோகனை ஈ.பி.டி.பியின் கோப்பாய் அமைப்பாளர் ஐங்கரன் திடீரென எட்டித் தாக்கினார். தொடர்ந்து அந்த இடத்திலிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் மாறி மாறித் கைகளால் தாக்கிக் கொண்டனர்.

ஒரு கட்டத்தில் அது தண்ணீர்ப் போத்தல் தாக்குதலாக மாறியது. உறுப்பினர்கள் அருந்துவதற்காக மேசையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் போத்தல்களை, அமைச்சர் டக்ளஸின் சாரதி எனக் கூறப்படும் அன்ரன் நிக்ஸன் ரவி, கூட்டமைப்பினரை நோக்கி வேகத்துடன் வீசினார். அவரைப் பார்த்து வேறு சிலரும் போத்தல்களை வீசினர். அவை அமைச்சர் ஐங்கரநேசன் மற்றும் அங்கு நின்றிருந்த கூட்டமைப்பினரைத் தாக்கின.

எறியப்பட்ட ஒரு போத்தல் அமைச்சர் ஐங்கரநேசனின் உதட்டைப் பதம் பார்த்தது. குருதி சொட்டியது. இருந்தாலும் கையில் கிடைத்த தண்ணீர் போத்தல்களால் அமைச்சரும் பதிலுக்கு எறிந்தார்.

ஈ.பி.டி.பி, உறுப்பினர்கள் மறுபக்கத்தில் இருந்து மிகவும் ஆக்ரோஷமாகக் கத்திக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். கூட்டமைப்பினரும் பதிலுக்குக் கத்தினர். அமைச்சர் டக்ளஸால்கூட தனது உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியவில்லை.

சுமார் அரை மணிநேரம் நீடித்த இந்தக் களேபரங்களால் ரணகளமாகியது மாவட்ட மாநாட்டு மண்டபம்.

முதலமைச்சர் வெளியேற்றம்

இந்தக் களேபரங்களைப் பார்க்கப் பொறுக்கமாட்டாமல் முதலமைச்சர் அங்கிருந்து உடனடியாக வெளியேறினார். அவரது காவலர்கள் அவரைப் பாதுகாப்பாக அங்கிருந்து கூட்டிச் சென்றனர்.

சிறிது நேரத்தில் பின்னர் குருதி சிந்தியவாறு ஐங்கரநேசனும் வெளியேறினார். கூச்சலிட்டவாறு கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் வெளியேறினர். அதனால் சபை வெறிச்சோடியது. அமைதி திரும்பியது.

அமைச்சர் டக்ளஸ், அவரது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார், அலன்ரின் மற்றும் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் ஈ.பி.டி.பி. மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், அரச அதிகாரிகள் ஆகியோர் மண்டபத்தின் முன்புறமாக ஒதுங்கியிருந்தனர்.

ஒருவாறு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அவர்கள், இருக்கைகளுக்குத் திரும்பினர். கூட்டத்தை ஒத்திவைப்பதற்கான முன்மொழிவை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முன்வைத்தார். தவராசா வழிமொழிந்தார். அதனையடுத்து கூட்டம் திகதி குறிக்கப்படாமலேயே ஒத்திவைக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான 5 பேர் தமக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்ந்துள்ளனர். இரண்டு பேர் யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதைப் பொலிஸார் உடனடியாகக் கூறவில்லை. (உ–4,21,86)

## இராணுவத்துக்கு

வருகின்றது. மூன்றாவது நாளான நேற்று, வவுனியா நகர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போது சாட்சியமளிக்க 62 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். 55 பேர் சாட்சியமளித்தனர்.

சாட்சியமளித்தவர்களில் 31 பேர் இராணுவத்தினருக்கு எதிராக தமது சாட்சியங்களை முன்வைத்தனர். பவள் கவச வாகனத்தில் வந்து வீட்டில் வைத்து கைது செய்து கொண்டு சென்றமை தொடர்பிலும், வீதியில் விசாரணை செய்து விட்டு மோட்டார் சைக்கிளுடன் உறவுகளை கொண்டு சென்றமை தொடர்பிலும், வெள்ளை வானில் வந்து இராணுவப் புலனாய்வாளர்கள் கடத்தியமை தொடர்பிலும் என்று, இராணுவத்தினருக்கு எதிராக பகிரங்கமான முறையில் சாட்சியமளித்தனர்.

அத்துடன் மூன்று பேர், வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்துகாணாமற்போனமை தொடர்பிலும் சாட்சியமளித்தனர். இதனை விட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 9 சாட்சியங்களும், யாரால் கடத்தப்பட்டமை என்பது தெரியாது என்று 13 பேரும் சாட்சியமளித்தனர். புளொட் அமைப்புக்கு எதிராக இரண்டு பேரும், இந்திய இராணுவத்துக்கு எதிராக ஒருவரும் சாட்சியமளித்தனர். அதேவேளை, வவுனியாவில் இன்றுடன் ஆணைக்குழு அமர்வு முடிவுக்கு வருகின்றது. (ந–5)

## தமிழ்க்

கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தால், அதனைப் பயன்படுத்தி– கூட்டமைப்பு குறிவைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசு நிச்சயம் முயற்சிக்கும்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து 'உதயனுக்கு' கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி தற்போதை உறுதியாகி விட்டது. 2010 ஆம் ஆண்டிலும் நாம் தான் வெற்றி பெற்றோம். எனினும், அந்தவெற்றி திட்டமிட்ட அடிப்படையில் கொள்ளையிடப்பட்டது.

இந்த முறை தற்போதே நாம் வெற்றி பெற்று விட்டோம். 100 இற்கு 65 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவுக்கு கிடைப்பது உறுதி. அரசுமீது மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர். நீங்கள்கூறும் 'மை–3 ஒபரேஷன்' வெற்றியளிப்பது உறுதி."– என்று அவர் கூறினார்.

"பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு தமிழ்க் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தால், அதனை பயன்படுத்தி– கூட்டமைப்பு குறிவைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசு நிச்சயம் முயற்சிக்கும்.

டயஸ்போரா மற்றும் தமிழ் இனவாதிகளுடன் இணைந்து நாட்டைபிரிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது என்ற போலிப் பரப்புரையை ராஜபக்ஷாக்கள் முன்னெடுக்கலாம். எனவே, மோசடியாளரிடம் இருந்து நாட்டை மீட்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, ஒவ்வொரு பிரசைகளும் சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்தித்து செயற்பட்டால் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், பாதுகாப்பு அமைச்சு மற்றும் பீல்ட் மார்ஷல் பதவி ஆகியன தனக்கு வேண்டும் என்ற நிபந்தனையை நீங்கள் முன்வைத்துள்ளதாகக்கூறப்படுகின்றதே?"– என்று அவரிம் கேட்டபோது,

"அப்படியான பேச்சு இடம்பெறவில்லை. எனினும், நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கின்றது.

குறிப்பாக மைத்திரிபால ஆட்சிக்கு வந்தால், மீண்டும் புலிகள் அமைப்பு தலைதூக்கும் என்றும், சமாதானம் சீர்குலையும் ஆட்சியாளர்கள் பரப்புரை செய்து வருகின்றனர். நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் எனக்கு தான் அதிகம் அனுபவம் இருக்கின்றது. எனவே, நாட்டுக்காக சேவையாற்ற வேண்டியநிலை எனக்கு ஏற்படும்"– என்று பதிலளித்தார். (ந)

## டெங்கு

கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட டெங்குத் தடுப்புக் குழு, வீடுகள் மற்றும் நிறுவனங்களைப் பார்வையிட்டு, டெங்கு நுளம்பு பெருகாத வண்ணம் சூழலைத் தூய்மையாக வைத்துள்ளனரா என்று ஆய்வு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்கள் தமது சுற்றாடலைத் தூய்மைப்படுத்தி வைத்து ஒத்துழைக்குமாறும் அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. (ந–ரி)



# தங்கத்தைத் தட்டிச் சென்றது ஜேர்மனி

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான ஆண்கள் ஹொக்கி போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தானை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய ஜேர்மனி தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றது.

ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் ஜேர்மனி சார்பில் ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் ஜோனாஸ் மோனாஹூம் ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் புளோரியன் பக்ஸ் என்பவரும் அபாரமாக கோல் அடித்தனர். இதனால் போராட்டமே இல்லாமல் பாகிஸ்தான் சரணடைந்தது. ஜேர்மனி தங்கப் பதக்கமும், பாகிஸ்தான் வெள்ளிப் பதக்கமும் பெற்றன.

அரை இறுதியில் தோல்வியை சந்தித்த இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் நேற்று 3ஆவது மற்றும் 4ஆவது இடத்துக்காக மோதின. விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் ஆக்கெண்டன் 19ஆவது நிமிடத்தில் கோல் அடித்து 1:0 என முன்னிலை ஏற்படுத்தினார். 42ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் லலித் உபாத்யாய் அபாரமாக கோல் போட 1:1 என சமநிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்திய ஆஸ்திரேலிய அணி, 52 ஆவது நிமிடத்தில் மேட் கோட்ஸ் கோல் அடித்ததை தொடர்ந்து 2:1 என்ற கணக்கில் வென்று 3வது இடம் பிடித்ததுடன் சாம்பியன்ஸ் கிண்ணத்தில் 5 ஆவது முறையாக வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. இந்திய அணி 4 ஆவது இடத்துடன் திருப்தி அடைந்தது. சமீபத்தில் இந்திய அணியுடன் சொந்த மண்ணில் நடந்த தொடரில் பரிதாபமாகத் தோற்ற ஆஸ்திரேலிய அணி அந்த தோல்விக்குப் பழி தீர்த்து வெண்கலப் பதக்கத்துடன் நாடு திரும்புகிறது. முன்னதாக நடந்த தகுதிநிலை ஆட்டங்களில் பெல்ஜியம் அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய இங்கிலாந்து அணி 7ஆவது இடம் பிடித்தது. நெதர்லாந்து அணி 4:1 என்ற கோல் கணக்கில் அர்ஜென்ரீனாவை வென்று 5ஆவது இடம் பிடித்தது. (த–ரி)

# டோனியே தலைவர்

இந்திய அணிக்கு தலைவராக யாரை நியமிப்பது என்ற விவாதம் தற்போது வேண்டாம் என முன்னாள் இந்திய தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில், உடற்தகுதி காரணமாக இந்திய அணித் தலைவர் டோனி விளையாடவில்லை. இவருக்குப் பதிலாக விராட் கோஹ்லி தலைவராகச் செயற்பட்டார். துடுப்பாட்டத்தில் அசத்திய இவர், இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்தார். இருப்பினும் இந்திய அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்நிலையில் இந்திய அணியின் டெஸ்ட் தலைமைப் பொறுப்பை டோனியிடம் இருந்து விராத் கோஹ்லியிடம் கொடுக்க இதுதான் சரியான நேரம் என, முன்னாள் ஆஸ்திரேலிய தலைவர்களான இயன் சப்பல், மார்க் டெய்லர் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்தனர்.

இது குறித்து முன்னாள் இந்திய அணியின் தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியது:– இந்திய அணிக்கு தலைவராக யாரை நியமிப்பது என்ற விவாதம் தற்போது அவசியமில்லை. இது தேவையில்லாத சர்ச்சைகளை உருவாக்கிவிடும். முதல் டெஸ்ட் போட்டிக்கு மட்டும்தான் விராத் கோஹ்லி தலைவராக இருப்பார். மீதமுள்ள போட்டிகளுக்கு டோனியே தலைவராக செயற்படுவார் என ஏற்கனவே தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தலைமை குறித்து விவாதிப்பதால், டோனிக்கு மனதளவில் தேவையில்லாமல் நெருக்கடி ஏற்படும். இது டெஸ்ட் தொடரில் இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம்.

அதேவேளையில் டெஸ்ட் தலைவராக கோஹ்லியின் செயற்பாட்டில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பது மகிழ்ச்சி. நான் எப்போதும் களத்தில் ஆக்ரோஷமாக செயற்படும் தலைவருக்கு ஆதரவாக இருப்பேன். சிறந்த தலைவர்கள் டெஸ்டில் வெற்றி பெற விரும்புவார்கள். ஒருவேளை இவர்களால் வெற்றி பெற முடியாமல் போனால் குறைந்த பட்சம் சமநிலைப்படுத்த போராடுவார்கள். இதன்மூலம் தொடரில் பின்னடைவை சந்திக்காமல் மீண்டு வர முடியும். ஒரு துடுப்பாட்ட வீரனாக நல்ல முன்னேற்றம் கண்டுள்ள கோஹ்லி, விரைவில் இந்திய அணியின் சிறந்த தலைவராகவும் இருப்பார்–என்றார் (த–ரி)

# புதிய உலகக் கிண்ணம்

எதிர்வரும் உலகக்கிண்ணத்துக்கான வெற்றிக் கிண்ணம் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில் உலகக் கிண்ணத்தில் பங்குபற்றும் நாடுகளில் அது பார்வைக்கு வைக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் நடப்புச் சம்பியனான இந்தியாவில் நேற்றுமுன்தினம் புதிய கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தங்கத்தின் நிறை அதிகரிக்கப்பட்டுள்ளமை, கிண்ணத்தின் அடிப்பக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை இந்தக் கிண்ணத்தின் சிறப்பம்சங்களாக அமைந்துள்ளன. (த–ரி)




# வாகை சூடினார் ஆனந்த்



லண்டன் கிளாசிக் செஸ் தொடரின் கடைசிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியாவின் ஆனந்த் முதன் முறையாகச் சம்பியன் ஆனார்.

உலகத் தர வரிசையில் முன்னணியில் உள்ள 6 வீரர்கள் மட்டும் பங்கேற்ற கிளாசிக் செஸ் தொடர் லண்டனில் நடந்தது. ரவுண்ட் 'ராபின்' முறையில் நடந்த இந்தப் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், பேபியானோ காருணா (இத்தாலி), விளாடிமிர் கிராம்னிக் (ரஷ்யா), ஹிகாரு நகமுரா (அமெரிக்கா), மைக்கல் அடம்ஸ் (இங்கிலாந்து.), அனிஸ் கிரி (நெதர்லாந்து) பங்கேற்றனர்.

முதல் நான்கு போட்டிகளை சமநிலை செய்த ஆனந்த், ஐந்தாவது மற்றும் கடைசி போட்டியில் மைக்கல் அடம்சை சந்தித்தார். இதில் கறுப்புக் காய்களுடன் களமிறங்கிய ஆனந்த், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சமீபத்திய உலக செஸ் கிண்ணப் போட்டியில் ஆனந்துக்கு எதிராக கார்ல்சன் விளையாடியதைப் போல, அடம்ஸ் தொடங்கினார். அவரைப் போலவே 8ஆவது நகர்த்தலில் ஆனந்த்தின் ராணியை காலி செய்தார். இருப்பினும் தொடர்ந்து பல முயற்சிகளைச் செய்து நெருக்கடிகளைக் கொடுத்த ஆனந்த் போட்டியின் 36ஆவது நகர்த்தலில் வெற்றி பெற்றார். மொத்தமாக நடந்த ஐந்து சுற்று முடிவில் தலா 7 புள்ளிகள் பெற்று ஆனந்த் கிராம்னிக் அனிஸ் முதலிடம் பெற்றனர்.

இந்த மூன்று வீரர்களும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றும் நான்கு ஆட்டத்தில் சமநிலையும் செய்திருந்ததால் வெற்றி பெற்ற விதம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் படிமற்ற இருவரை (வெள்ளை நிறக் காய்) விட ஆனந்த் கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய போது வெற்றி பெற்றிருந்தார். இதையடுத்து, ஆனந்த் பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டார். லண்டன் கிளாசிக் தொடரில் ஆனந்த் பட்டம் வெல்வது இதுதான் முதன்முறை. நகமுரா (6) ஆடம்ஸ் (4), காருணா (3) ஆகியோர் அடுத்த 3 இடங்களைப் பெற்றனர். (த–ரி)

# கலக்குவாரா ஹாசில் வூட்




இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் வேகப் பந்துவீச்சாளர் ஹாசில் வூட் அறிமுக வீரராக களமிறங்கவுள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. இரு அணிகள் மோதும் இரண்டாவது போட்டி இன்று பிரிஸ்பேனில் தொடங்குகின்றது. இதற்கான ஆஸ்திரேலிய அணி இன்று அறிவிக்கப்பட்டது. இதில் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ள ரியான் ஹாரிஸ், சீடில் நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பதில் வேகப்பந்து வீச்சாளர்கள் ஹாசில் வூட், மிட்செல் ஸ்டார்க் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஹாசில் வூட் அறிமுக வீரராக களமிறங்கவுள்ளார்.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் புதிய தலைவர் ஸ்டீவன் சிமித் கூறுகையில்; இளம் வயது வீரரான ஹாசில் வூட் திறமையானவர். பிரிஸ்பேன் ஆடுகளம் இவருக்குச் சாதகமாக இருக்கும் என நம்புகிறேன்–என்றார் (த–ரி)

# தாயாரை தராவிட்டால் தற்கொலை செய்வேன்

## ஆணைக்குழு முன்னால் கதறினார் பெண்



யாழ்ப்பாணம், டிசெ. 17

காயத்துடன் இராணுவத்தினரிடம் கையளித்த எனது தாயாரை எப்படியாவது கண்டுபிடித்துத் தாருங்கள் என்று கண்ணீருடன் ஆணைக்குழுவினரிடம் கையெடுத்துக் கும்பிட்ட பெண் ஒருவர், அவ்வாறு கண்டுபிடித்துத் தராவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன், என்றும் பகிரங்கமாகத் தெரிவித்தார். ஆணைக்குழுவின் அமர்வு வவுனியா நகர் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது வலன்ரைனா என்ற பெண் சாட்சியமளித்தார்.

முள்ளிவாய்க்காலிலிருந்து வட்டுவாகல் நோக்கி வந்து கொண்டிருந்தோம். இதன் போது ஷெல் வீழ்ந்து வெடித்தது. இதனால் எனது அம்மாவின் வயிற்றில் காயம் ஏற்பட்டது. அழுது குழறினேன். இருப்பினும் எவரும் உதவிக்கு வரவில்லை. வீதியில் கிடந்த பாயை எடுத்து அதில், காயத்துடன் எனது தாயாரை வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தேன்.

வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினர் எனது தாயாரை உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றினர். நானும் ஏறியபோது என்னை இராணுவத்தினர் இறக்கி விட்டனர். இராணுவத்தினர் கொண்டு சென்ற எனது அம்மாவை இன்று வரை காணவில்லை. நான் எல்லா இடமும் அறிவித்தும் பலன் இல்லை.

எப்படியாவது எனது தாயாரை மீட்டுத் தாருங்கள் என்று கண்ணீருடன் அழுது கெஞ்சிய குறித்த பெண், ஆணைக்குழுவின் தலைவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். எனது அம்மாவை நீங்கள் கண்டுபிடித்து தராவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன். இது உறுதி என்று அழுதவாறே அவர் தெரிவித்தார்.

(த-5)

# கண்டிக்குச் சென்ற மகன் இன்று வரை இல்லை

## சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்த சில தினங்களில் காணாமற் போயுள்ளான் என தாயார் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.17

கண்டி வைத்தியசாலைக்குச் சென்ற எனது மகன் இன்று வரையில் வீடு திரும்ப வில்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியில் அவனுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்த சில தினங்களிலேயே இவ்வாறு காணாமற்போயுள்ளான். எனக்கு இருந்தது ஒரே ஒரு பிள்ளை தான். அவனையும் பறிகொடுத்து விட்டு நிற்கின்றேன் என்று தாயார் சாட்சியமளித்தார்.

ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த கருணாகரன் மாரியம்மா என்பவரே இவ்வாறு சாட்சியமளித்தார்.

எனது மகனுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்தேன். இதற்காகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கினர். அந்த நிதியில் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை செய்தேன்.

இதற்காகக் கண்டியில் தற்காலிக வீடு எடுத்து தங்கியிருந்தோம். இதன்போது ஒரு நாள் வைத்தியசாலைக்கு மருந்து எடுக்கச் சென்ற மகன், வைத்தியசாலையில் மருந்து எடுத்து விட்டு வீடு திரும்பி வரும்போது காணாமற்போய்விட்டான். வீட்டுக்கும், வைத்தியசாலைக்கும் இடையில் சோதனைச் சாவடி இருந்தது.

எனது மகன் பிடிபட்டு ஒரு வாரத்தில், இராணுவத்தினர் நாங்கள் தங்கியிருந்த கண்டி வீட்டைச் சோதனை செய்தனர். ஆனால் என்ன காரணத்துக்கு என்று எதுவும் சொல்லவில்லை. எனக்கு நஷ்டஈடு எதுவும் வேண்டாம். எனது ஒரே ஒரு பிள்ளை அவன்தான். பிள்ளைதான் எனக்கு வேண்டும் – என்றார். (த-5)

# நண்டுகள் பதனிடலை விஸ்தரிக்க ஒப்பந்தம்



யாழ்ப்பாணம்.டிசெ.17

தம்பாட்டி கிராமிய கடற்றொழில் சங்கத்தின் நண்டு பதனிடல் தொழிற்சாலையின் சந்தை வாய்ப்பை விஸ்தரிப்புச் செய்வதற்கு வியாபார உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதி உதவியில் அமைக்கப்பட்டு வரும் இந்த நண்டு பதனிடல் தொழிற்சாலை எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில் செயற்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் 100 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவமான குடும்பங்கள் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகளால் பதனிடப்படும் இறால், நண்டு ஆகியவற்றைக் கொள்வனவு செய்து சந்தைப் படுத்துவதற்குத் தனியார் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ள நிலையில் தனியார் நிறுவனத்துடன் வியாபார உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

(த-14)

# அபார வெற்றியுடன் விடைபெற்றனர் மண்ணின் மைந்தர்கள்



இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஒரு நாள்ஆட்டங்களைக்கொண்ட தொடரின் ஏழாவது ஆட்டம் நேற்றைய தினம் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் இடம் பெற்றது. ஏற்கனவே நிறைவுக்கு வந்த ஆறு ஆட்டங்களில் நான்கில் இலங்கை அணி வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியுள்ளதால் நேற்று இடம்பெற்ற இறுதி ஆட்டம் சம்பிரதாயமான ஆட்டமாக அமைந்த போதிலும் உலகக் கிண்ணத் தொடரோடு சங்கா மற்றும் மஹேல ஓய்வினை அறிவித்துள்ளதால் சொந்த மண்ணில் இவர்கள் ஆடும் இறுதியாட்டம் என்பதனால் இந்த ஆட்டம் இலங்கைத் துடுப்பாட்ட வரலாற்றில் முக்கியம் பெற்ற ஒரு ஆட்டமாக அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கைஅணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி சொந்த மண்ணில் தமது இறுதிப் போட் டியில் களமிறங்கிய மஹேல (28) ஓட்டங்களுடனும் சங்கா (35) ஓட்டங்களுடனும்வெளியேறி ஏமாற்றம் கொடுக்க இலங்கை அணி 23.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகள் இழப்புக்கு120 ஓட்டங்களைப் பெற்று ஓட்டங்களைக் குவிக்க போராடிக் கொண்டிருந்தது. டில்சான் போராடிக் கொண்டிருந்தாலும் மறு முனையில் தொடர்ந்து வந்த மத்தியூஸ் நிலைக்காமல் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த சந்திமல் டில்சானுக்கு சிறந்த இணைப் பாட்டத்தைக் கொடுக்க இலங்கை அணி துரிதமாக ஓட்டங்களைச் சேர்க்க ஆரம்பித்தது. 43.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அணியின் ஓட்டம் 236 ஆக இருந்த வேளையில் நான்காவது இலக்காக டில்சான் சதம் கடந்து (101) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த பெரேரா சந்திமலுடன் இணைந்து அதிரடியைக் கையிலெடுக்க இலங்கை அணியின் ஓட்டம் கிடுகிடு என உயர ஆரம்பித்தது. 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கையணி 6 இலக்குகள் இழப்புக்கு 302 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக டில்சான் 101 ஓட்டங்களையும் சந்திமல் 55 ஓட்டங்களையும் பெரேரா 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக ஜோர்தான் மற்றும் அலி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் குர்னி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

303 எனும் கடின இலக்கினை விரட்டுவதற்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரரான அலி எந்தவித ஓட்டங்களையும் பெறாது வெளியேறினார். இதனால் இங்கிலாந்து 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே தனது முதல் இலக்கை இழந்து தவித்தது. தொடர்ந்து வந்த முன்னிலை வீரர்களான கேல்ஸ் (7), ரெய்லர் (2), மோர்கன் (4) என ஒற்றை இலக்கங்களுடன் வெளியேற 19.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 5 இலக்குகள் இழப்புக்கு 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தவித்தது. மறுமுனையில் போராடிக் கொண்டிருந்த ரூட்டுக்கு வோக்ஸ் கைகொடுக்க அணி படிப்படியாக ஓட்டங்களைச் சேர்க்க ஆரம்பித்தது. இருப்பினும் வோக்ஸால் தொடர்ந்தும் தாக்குப் பிடிக்க முடியாமல் போகவே அவர் 34 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே ரூட்டும் 80 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வீரர்களாலும் தாக்குப் பிடிக்க முடியாமல் போகவே இங்கிலாந்து அணி 45.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே பெற்று 87 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் இலங்கை சார்பாக டில்சான் மற்றும் பிரசன்ன ஆகியோர் தலா 3 இலக்குகளையும் லக்மல் 2 இலக்குகளையும் மஹேல மற்றும் பெரேரா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியில் சதமும் தொடர் முழுதும் 357 ஓட்டங்கள் 12 இலக்குகள் என சிறப்பாக சகல துறைகளிலும் செயற்பட்ட டில்சான் ஆட்ட நாயகனாகவும் தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார். இலங்கையணி 5:2 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது. (த-ரி)


விசேட கருத்தரங்கு
NIE இன்
முதுகல்விமாணி(M.Ed)
தெரிவிற்கானது
புதன்(இன்று)
1.00-05.00மணி
வியாழன், வெள்ளி
9.00-3.00 மணிவரை
T.P : 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரிவீதி,
கொமர்ஷல்வங்கியருகில்)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH வகுப்புக்கள்
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates in French... France, Canada, Belgium, Swiss செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 865 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007. University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
No. 40. Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


பக்கங்கள் 08

# புதன் பொய்கை

உதயன்

17 டிசெம்பர் 2014 புதன்கிழமை

அழகும்
பெருந்தன்மையும்
நற்குடிப் பிறப்பும்
நற்புகழும் உடைய
தாய்மையினின்று,
சிறந்த அழகுள்ள
பெண்ணும், உரமான
ஆணும் பிறப்பார்கள்.
*-பைரன்*



# நம்பிக்கையுடன் காத்திருப்போம்

■ ராஜராஜன்

நாங்கள் என்னதான் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்று கூறிக்கொண்டாலும் எமது மண்ணில் அரங்கேறிக் கொண்டிருக்கும் மோசமான செயற்பாடுகள் இவற்றையெல்லாம் பின்தள்ளி வருகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் முக்கிய அதிகாரியொருவர் இது தொடர்பாக மனம் வெதும்பிக் கருத்து வெளியிடும் அளவுக்கு இங்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டி விட்டது.

ஆளை ஆள் ஆயுதங்களுடன் துரத்திச் செல்வதும் மக்கள் நடமாடுகின்ற பகிரங்கமான இடங்களில் மோதிக் கொள்வதும் சினிமாவில் மட்டுமே பார்க்கக் கூடியதான காட்சிகள். ஆனால் இன்று அவற்றை நேரடியாகப் பார்க்கும் அளவுக்கு நாங்கள் முன்னேறி விட்டோம். இந்த மோதல் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் இந்த நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான இளைஞர்கள் என்பதுதான் நெஞ்சத்தை உலுக்கி விடுகின்றது.

இங்கு வருகை தருகின்ற பிற நாட்டவர்கள் எமது மண்ணின் அழகைச் சிலாகித்துக் கூறுகின்றனர்– இங்கு வாழுகின்ற மக்களையும் அவர்கள் புகழ்வதற்குத் தவறுவதில்லை – அழகும், புனிதமும் நிறைந்த ஆலயங்களும், பக்திப் பரவசத்துடன் பேணப்படும் சமய மரபுகளும் அவர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. ஆண்டாண்டு காலமாகவே இங்கு வாழுகின்ற மக்கள்தமதுசமயமரபுகளைப்பேணுவதில் சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றனர். அத்தோடு கல்விச் செல்வமும் நிறைந்து காணப்படுகின்றமை சிறப்பானதொரு விடயமாகும்.

கல்வி என்ற சொல்லை உச்சரிக்கும்போது யாழ்ப்பாணத்தின் நினைவுதான் மனதில் எழும். கல்வி ஒரு மூலதனமாகவே இங்கு விளங்கியது. அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானம் வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கு உதவியது. இந்த நிலை இன்றும் பல குடும்பங்களில் நீடிப்பதைக் காண முடிகின்றது. போர் நீடித்ததால் எழுந்த அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கல்வியில் சற்றுத் தளர்ச்சி கண்டாலும் இன்று அந்தக்குறையும்நீங்கியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

சிலரது தவறான நடவடிக்கைகள் இந்த மண்ணுக்குக் களங்கம் ஏற்படுத்துவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. பூரணமான கல்வியறிவைப் பெற்றிராத சிலர் முழுச் சமுதாயத்தையும் அச்சுறுத்தி ஆட்டிப் படைப்பதைப் பொறுத்துக்கொள்வது சரியா? என்பதை இங்கு வாழும் மக்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். கோழைத்தனத்தைப் பொறுமை என்கின்ற பெயரில் மறைத்துக்கொண்டிருப்பவர்கள் எமது எதிர்காலச் சந்ததியினரின் எதிர்கால வாழ்க்கை என்னவாகும் என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமீப காலமாக பேஸ்புக் எனப்படும் முகப்புத்தகத்தில் பெண்கள் தொடர்பான இழிவான படங்களை வெளியிடுகின்ற கேவலமான கலாசாரம் இங்கும் பரவியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய இழி நிலையாளர்கள் இனம் காணப்பட்டுத் தண்டிக்கப்படல் வேண்டும்.

அதேவேளை– மற்றவர்களுக்கு உபத்திரவம் கொடுப்பதையே எம்மில் சிலர் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் உறவினர்கள், வேற்று ஆள்கள் என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை.

தமக்கு வேண்டாதவர்கள் மீது தேவையில்லாத குற்றச்சாட்டுக்களைத் தெரிவிப்பதும், அடிக்கடி காவல் நிலையங்களை நாடுவதும் இவர்களின் தொழிலாகவே மாறிவிட்டது. காவல் நிலையங்களில் இவர்கள் செலவிடும் நேரத்தை தமது குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தினால் எவ்வளவோ பயனுள்ளதாக அமைந்துவிடும். ஆனால் இவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை. இவர்கள் என்றோ ஒருநாள் திருந்தியே ஆகவேண்டும்.

போரின் போதும், அதன் பின்னரும் இந்த மண் பேரிடர்கள் பலவற்றைச் சந்தித்துள்ளது. இதனால் இனிமேல் எழவே முடியாது என்றுதான் பலரும் நம்பியிருந்தனர்.

ஆனால் இங்கு வாழும் மக்களின் மனவுறுதியும், கடுமையான உழைப்பும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் இவற்றையெல்லாம் பொய்யாக்கிவிட்டு அசுர வேகத்தில் வளர்ச்சி காண்பதற்கு உதவின. இதையொரு அதிசயம் என்றுதான் கூறவேண்டும்.

தற்போது சிலரால் கட்டவிழ்த்து விடப்படும் தவறான நடவடிக்கைகள் தொடரப் போவதில்லை. அவற்றுக்கு நிச்சயம் முடிவு கட்டப்பட்டுவிடும். எமக்கேயுரிய பண்பாடும்,கலாசாரமும் பன்மடங்கு ஓங்கிக் காணப்படும் நிலை விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

அழகும், புனிதமும் நிறைந்த ஆலயங்களும், பக்திப் பரவசத்துடன் பேணப்படும் சமய மரபுகளும் அவர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. ஆண்டாண்டு காலமாகவே இங்கு வாழுகின்ற மக்கள் தமது சமய மரபுகளைப் பேணுவதில் சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றனர்.



## புதன்பொய்கை


# போரின் வடுக்களை பிரதிபலிக்கும் சிறுகதைகள்

இ.இராஜேஸ்கண்ணன்.

நிலைமாற்றம் என்பது பல்வேறு வகைகளில் அர்த்தப்படுத்தப்படுகின்றது. இதனை தளமாற்றம் எனவும் குறிப்பிடுவர். இது ஒரு செயன்முறையின் தொடருறு நிலையாக அமைகின்றது. பொதுநிலையில் உருமாற்றம், மாற்றம் என்று பிரயோகிக்கப்படும் எண்ணக்கருக்களைவிட இது வேறுபட்டதாகும். இருப்பினும் நிகழ்போக்கிலான தொடர்ச்சியான மாற்றங்களும் உருமாற்றங்களும் ஒரு தளமாற்றத்தினுள் உள்ளடங்கியிருக்கும். நிலைமாற்றம் குறித்த ஆய்வுகள் பல்வேறு துறைகளிலும் நிகழ்ந்து வருகின்றன. சமயம், தத்துவம், கலைகள், சமூகம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு போன்ற பல்வேறு விடயங்களிலும் நிலைமாற்றம் குறித்து ஆய்வாளர்கள் சிந்தித்து வருகின்றனர்.

நிலைமாற்றம் குறித்து சிந்திப்பவர்கள் எந்தத் துறையில் நின்று சிந்தித்தாலும் ஒரு தாக்கத்தைச் செலுத்தவல்ல சமூக மாற்றத்தின் சமாந்தர விளைவாகவே நிலைமாற்றத்தைக் கருதுகின்றனர். உலகளாவிய ரீதியிலும், உலகின் குறித்துச் சொல்லப்பட்ட பிரதேசங்களிலும் சமுதாயங்களின் சிந்தனைப்போக்கு, பழக்க வழக்கங்கள், கருத்து நிலைகள், வாழ்வியல் முறைகள் என்பவற்றில் ஒரு நீண்டகாலச் செயன்முறையில் மாற்றங்கள் நிகழத்தக்க நிலைமைகள் பல்வேறு காரணிகளால் உருவாக்கப்பட்டிருந்தன. மேலைநாடுகளில் நிகழ்ந்த புரட்சிகள், யுத்தங்கள், அறிவியல் வளர்ச்சி போன்ற சமூக மாற்றத்தைத் தூண்டவல்ல காரணிகளின் தொடருறு விளைவுதான் இந்த நிலைமாற்றம் என விளங்கிக் கொள்ளப்பட்டது. கீழை நாடுகளில், குறிப்பாகக் காலனியாதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளில் காலனித்துவத்தின் விளைபொருளான நிலைமாற்றங்கள் குறித்து அதிக அக்கறை கொள்ளப்பட்டது. இத்தகைய நிலைமாற்றங்கள் பற்றி பிராந்திய ரீதியிலும், தேசங்களினுள்ளேயும் சிந்திக்கப்படுகின்ற அதேவேளையில் உலக நிலைப்பட்ட மாற்றங்களையும் உள்வாங்கியே விளக்கப்படுகின்றன. எது எவ்வாறாயினும், ஒரு நிலைமாற்றம் தொடர்பில் சிந்திப்பதற்கான அடிப்படையான முன் தேவைப்பாடாக மாற்றத்துக்கான விசையொன்று தேவைப்படுகின்றது.

இலக்கியத்தில் நிகழும் நிலைமாற்றத்தைக் குறித்த ஒரு சமூகமாற்றத்துடன் தொடர்புபடுத்தியே ஆய்வு செய்துள்ளனர். மேலைநாடுகளில் புரட்சிகள், யுத்தங்கள், வேறுபட்ட சிந்தனா கூடங்களின் எழுச்சி என்பவற்றின் பின்புலத்தில் வைத்துத்தான் இலக்கியத்துறையில் நிகழ்ந்த நிலைமாற்றங்கள் விளங்கிக்கொள்ளப்பட்டன. அத்தகைய முயற்சிகளில் ஒரு சமூகமாற்றம் எந்தளவில் இலக்கியங்களின்வடிவம்,பாடுபொருள்(உள்ளடக்கம்) மற்றும் போக்குகளை மாற்றியமைத்தன என்பதாகவோ அல்லது அத்தகைய மாற்றங்களின் சமூகப் பிரதிபலிப்புகள் இலக்கியத்தில் எவ்வாறு அமைந்தன என்பதாகவோ விளங்கின. இலக்கியத்தில் நிலை மாற்றம் என்பது வெறுமனே இலக் கியத்தின் மரபிலான மாற்றமாக மாத்திரம் விளங்கிக்கொள்ளப்பட முடியாதது. பெரும்பாலும் மொழியியல் ஆய்வுகளில் மொழி இலக்கண ரீதியாக வாக்கிய வடிவமைப்புக்கள், சொற்களின் ஆக்கம், உருபுகளின் பிரயோகம் என்பன தொடர்பில் நிகழ்ந்து வந்துள்ள மாற்றங்களைக் கருத்திலெடுத்துத்தான் இந்த நிலைமாற்றங்கள் குறித்து அதிகளவில் அக்கறை செலுத்தியுள்ளனர். ஆனால் இலக்கியத்தில் நிலைமாற்றம் என்பது மொழியியல் கூறுகளின் நிலைமாற்றமாக மாத்திரமன்றி அதன் பொருளிலும் வடிவத்திலுமான மாற்றங்களையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றது. இக்




கட்டுரை மொழியியல் கூறுகளிலான மாற்றங்களை விடுத்து பொருளிலும் வடிவத்திலுமான மாற்றங்களையே கவனத்திலெடுக்கின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் இந்த நிலைமாற்றத்தின் தடம் மிகவும் நீண்டது. குறிப்பாக நவீன இலக்கியங்களில் கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றின் வளர்ச்சிப் போக்கில் நிகழ்ந்த நிலைமாற்றங்கள் பல. பெரும்பாலும் இந்த நிலைமாற்றங்கள் இலக்கியக் கொள்கை தொடர்பாகவும் படைப்பாளிகள், விமர்சகர்களின் கருத்து நிலைத் தளம் சம்பந்தமாகவும் இருந்து வந்துள்ளன. இந்தக் கருத்துநிலையைத் தீர்மானித்தவையாக அவ்வக் காலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைவரங்கள் அமைந்திருந்தன. உதாரணமாக ஈழத்தில் படைப்புக்கள் இரசனை நோக்கிய பயனுடையவை என்றும், சமுதாய நோக்கினை அடிப்படையாகக் கொண்டவை என்றும் எதிரும்புதிருமாக இருந்த சிந்தனா குழுமங்களின் பிரதிபலிப்பு அக்கால சமூக, பொருளாதார, அரசியல் பின்புலங்களின் வழியே பார்க்கப்படும்போதுதான் அக்கால இலக் கியங்களில் நிகழ்ந்த நிலைமாற்றத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும். ஈழத்துத் தமிழிலக்கிய வளரச்சியில் முற்போக்குவாதம் மற்றும் நற்போக்கு இரசனை வாதம் என்பவை கோலோச்சிய காலத்தின் மாற்றநிலை இனமுரண்பாடு முனைப்புப் பெற்று ஆயதப் போராட்டமாகப் பரிணாமம் பெற்ற காலத்துடன் ஆரம்பிக்கின்றது. 1980களின் பின்னர் ஈழத்து மண்ணிலிருந்து வந்த தமிழிலக்கியங் கள் போர்க்கால இலக்கியங்கள் என்ற ஒரே வகுதியினுள் பெரும்படியாக உள் ளடக்கப்பட்டன. அந்த நிலையில் வந்த தமிழிலக்கியங்கள் பரணி பாடுபவையாகவும், போரின் அவலங்களைப் பாடுபவையாகவும் பெரும்பாலும் அமைந்திருந்தன. கவிதை இலக்கியம் இதற்கு மிக வாய்ப்பாக அமைந்ததால் பெருவளர்ச்சி பெற்றது. சிறுகதைகளும் போர்க் காலத்தைப் பிரதிபலித்துப் பெருமளவில் தோன்றின. இந்த நிலைவரம் போரின் பின்னான காலத்தில் பெருமளவில் மாற்றங்களுக்கு உள்ளாகத் தொடங்கியது.


இன அடிப்படையிலான முரண்பாடுகள் முனைப்புப் பெற்ற காலத்தைப் போர்க்காலம் எனக் கருதும் நிலையில் அக்காலத்து ஈழத்தமிழ் இலக்கியப் போக்கின் குவிமையம் பொதுநிலையில் தீர்மானிக்கப்பட்ட ஒன்றானது. சமகாலத்தில் ஈழத்திற்கு வெளியே தமிழிலக்கியத்தில் நிகழ்ந்துவந்த மாற்றங்கள் இந்தக் குவிமையத்துக்கு அப்பாலுள்ள போக்குகளுடன் வெகுசாதாரண நிலையில் இயங்கிக்கொண்டிருந்தன. இந்த நிலை யில், நிகழ்ந்து முடிந்த யுத்தத்தின் பின்னரான நிலையில் ஈழத்துத் தமிழிலக்கியத்தின் நிலைமாற்றம் குறித்துச் சிந்திக்கும் நிலை சாதாரணமாக உருவாகின்றது. இந்த நிலைமாற்றம் பற்றிய சிந்திப்பு பின்வரும் இரு தளங்களில் நிகழவேண்டியுள்ளது.

போர்க்காலத்தில் குவிமையப்படுத்தப்பட்ட இலக்கியப் போக்குகள், படைப்பாக்கக் கோட்பாடுகள், படைப்புக்களின் பிரதிபலிப்புக்கள் போரின் பின்னான காலப்பகுதியில் எவ்வாறு மாற்றம் பெறுகின்றது?

போர்க்காலத்தில் ஈழத்துக்கு வெளியே தமிழிலக்கியப் போக்கில் நிகழ்ந்துவந்த மாற்றங்களும் பாய்ச்சல்களும் போரின் பின்னான காலப்பகுதியில் ஈழத்துத் தமிழிலக்கிய வெளியினுள் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றன? அவற்றின் பிரதிபலிப்புக்கள் எவை?

இந்த இரு விடயங்கள் குறித்து எந்த இலக்கியத்தை முன்னிறுத்தியும் கருத்தாட முடியும். குறிப்பாக ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் நிலைமாற்றத்துக்கான நகர்வுகளைச் சிந்திக்க இந்த அடிப்படையான புரிதல்கள் அவசியமாகின்றன.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் நிலை




மாற்றத்துக்கான நகர்வுகள் வெளிப்படையாகப் புலப்படுகின்றன. சிறுகதைகளின் வடிவம் மற்றும் பொருள் குறித்து இந்த நிலைமாற்றத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். இன்னொரு வகையில் கூறுவதானால் படைப்பாக்க உத்திகளிலும் படைப்பாக்கம் தொடர்பான கொள்கைகளிலும் அண்மைக் காலங்களில் நிகழ்ந்துவரும் நிலைமாற்றங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இத்தகைய நிலைமாற்றங்களை உடனிருந்தோ அல்லது பின்னிருந்தோ உந்திய காரணிகள் பலவாகும். அந்தக் காரணிகளில் சில ஈழத்தின் அகத்தே நிகழ்கின்ற சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையிலான விசைகளாக அமைய, வேறு சில உலகளாவிய நிலையிலான விசைகளாகத் தொழிற்படுகின்றன. அவற்றைப் பின்வரும் வகையில் நோக்கலாம்.

காலமாற்றத்தினாலான சிறுகதைகளின் பொருள் மற்றும் வடிவம் தொடர்பிலான நிலைமாற்றம்.

ஈழத்தமிழ் இலக்கியத்திலிருந்து கிளைத்த புலம்பெயர் இலக்கியப் போக்குகளின் அபரிமிதமான செல்வாக்கின் வழியேயான நிலைமாற்றம்.

பொது நிலையிலும் உலகளாவிய நிலையிலும் முனைப்புப் பெறுகின்ற இலக்கியக் கோட்பாடுகளின் புரிதல் மற்றும் உள்வாங்கல் வழியான நிலைமாற்றம்.

பிரசுர ஊடகத்தின் தன்மை மற்றும் கருத்து நிலை வழியாக உந்தப்படும் நிலைமாற்றம்.

மேற்கண்ட நான்கு அடிப்படைகளும் சிறுகதைகளில் ஏற்படுத்திய நிலைமாற்றத்துக்கான நகர்வுகளைப் படைப்பாளிகளையும் அவர்களின் படைப்புக்களையும் மேற்கோள்காட்டி விளக்குவதுதான் பொருத்தமுடையது. படைப்பாளிகளையும் படைப்புக்களையும் பட்டியலிடும்போது அது முழுமையாகச் செய்யப்படுதல் இன்றியமையாதது. இது மிகுந்த பிரயத்தனத்துடன் நிகழவேண்டும். இங்கு உதாரணத்துக்காகச் சில படைப்புக்களும் படைப்பாளிகளின் பெயர்களும் எடுத்துக் காட்டப்படுகின்றனவே ஒழிய அவை முழுமையான பட்டியற்படுத்தப்பட்டதல்ல.

காலமாற்றத்தினால் சிறுகதைகளின் பொருள் மற்றும் வடிவம் தொடர்பிலான நிலைமாற்றம் குறித்து சில அவதானிக்கத்தக்க விடயங்கள் உள்ளன. உண்மையிலும் நிலைமாற்றம் என்பது ஈழத் தமிழ்ச் சிறுகதைகளைப் பொறுத்தவரை போர்க்காலத்தின் பின்னர் வந்த மாற்றங்களை மையப்படுத்தியது. இத்தகைய சிறுகதைகளில் பின்வரும் நான்கு போக்குகளைக் காணலாம்.

போர்க்காலத்தில் நம்பப்பட்டு வந்தவற்றையும், இலட்சியங்களாக நிலைத்தவற்றையும் கேள்விக்குள்ளாக்குதல். இவை பொரும்பாலும் தமிழ்த்தேசிய உணர்வின் மீதானதும் வன்முறையின் மீதானதுமான நம்பிக்கை இழப்புடன் தொடர்பான கருத்துநிலை மாற்றங்களைத் தரும் சிறுகதைகள்.

உ-ம்: கர்ணன்.யோ (2012), சேகுவேரா இருந்த வீடு, வடலி வெளியீடு, சென்னை போர்க்காலத்தில் நிகழ்ந்து முடிந்த தவறுகளைச் சிந்திக்க வைக்கும் நோக்கில் படைக்கப்பட்ட சிறுகதைகள். சில சமயங்களில் வன்முறைகளின் மீதான விமர்சனங்களாகவும் இந்தக் கதைகளைக் கருதமுடியும்.

உ-ம்: கருணை ரவி(2012), கடவுளின் மரணம், வடலி வெளியீடு, சென்னை போர்க்காலத்தில் அல்லது நான்காம் கட்டப் போரின் போது நிகழ்த்தப்பட்ட அழிவுகளின், அவலங்களின் பதிவுகளாகவும் போரின் நினைவுகளை மீட்டுவதாகவும் அமைந்த சிறுகதைகள்.

உ-ம்: கரிகாலன் (தொ.ஆ-2011), எங்கள் கடல் செந்நீராகிறது, தோழமை வெளியீடு, சென்னை. அகிலன். த (2009), மரணத்தின் வாசனை, வடலி வெளியீடு, சென்னை.

போரின் விளைவுகளாய் உருவான சமூகப் பிரச்சினைகளையும் அதன் வழியான பண்பாட்டு அதிர்வுகளையும் முன்னிறுத்திப் பேசும் சிறுகதைகள். இவை போரின் பின்னான காலத்தின் சமூகப் பொருண்மைகளாக தவிர்த்துவிட முடியாத அளவுக்கு முனைப்புப் பெற்றுள்ள முன்னாள் போராளிகளின் மீள்வாழ்வு, தனிமைப்படுத்தப்பட்ட, உளப்பாதிப்புக்கு உள்ளான சிறுவர்களின் பிரச்சினைகள், சிறுவர் தலைமைதாங்கும் குடும்பங்களின் பிணக்குகள், போரினால் விதவையாக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகள் போன்றவற்றைப் பதிவுசெய்யும் சிறுகதைகள்.

(G பக்கம் பார்க்க)

# புதன்பொய்கை

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### நம்பிக்கை வரவேண்டாமா?

தெருக்களில் காணப்படும் விளம்பரங்கள் பலவிதம். மக்களுக்குத் புரிய வைப்பதற்காக இவை சித்திரங்களாகவும், எழுத்துருவிலும் காணப்படும். "குப்பை போட வேண்டாம்", "விளம்பரம் ஒட்டவேண்டாம்", "ஒலி எழுப்ப வேண்டாம்" என்றெல்லாம் சமூக நலன்கருதியே விளம்பரப்படுத்தப்படுகின்றன. "நாய்கள் மாத்திரம் மலசலம் கழிக்குமிடம்" என்றும்கூட சில குறுகலான ஒழுங்கைகளில் எழுதப்பட்டிருக்கும். மேலோட்ட மாகப் பார்க்கும்போது சிரிப்பு வந்தாலும் இயற்கை உபாதைகளைத் தீர்ப்பதற்காக மனிதர்கள் அந்தச் சிறிய குச்சு ஒழுங்கையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டை தடுத்து நிறுத்து வதற்கான முயற்சியில் ஏற்பட்ட தோல்வியின் இயலாமை யின் வெளிப்பாடுதான் இப்படி எழுத வைத்திருக்கிறது என்பதை உணரமுடியும். வலிகாமம் பகுதி வீதி ஒன்றில் "கவனம் தாலிக்கொடி சங்கிலி அறுக்குமிடம்" என்று அட்டையில் எழுதிவைத்த விளம்பரம் பத்திரிகைச் செய்தியாகியிருந்தது. இந்த மாதிரி சமூகத்தின் மீதான அக்கறையாளர்கள் தான் இப்போது இந்த மண்ணுக்குத் தேவைப்படுகின்றனர். இந்த விளம்பரத்தைப் போன்று ஆயிரக்கணக்கில் மூலை முடுக்கெல்லாம் வைக்க வேண்டிய நிலைவரம் இங்கு இருந்தாலும் எமது சனங்கள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்வர்களா என்பது தான் வருத்தத்துக்குரியது. அயல் வீட்டுக்காரனே தாலிக்கொடியை களவெடுக்கும் நிலைக்கு அயல்வீட்டுடனான, சமூகத்துடனான உறவாடல்கள் தறுக்கணித்துப் போயுள்ளன.

எண்பதுகளில் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த தென்பகுதியைச் சேர்ந்தவர், இங்குள்ள நகை வர்த்தகர்கள் நகைகளைக் கொள்வனவு செய்தால் அவற்றை இரண்டு வாரங்கள் வரை உருக்கக் கூடாது என்பதுடன் வேறும் பல கடும் கட்டுப்பாடுகளையும் விதித்திருந்தார். "முதல் முடக்கம்" என்று சொல்லி அனேக வர்த்தகர்கள் அறியாத, தெரியாதவர்களிடம் நகை வாங்குவதைத் தவிர்த்தனர். நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற அறுப்புகள், அபகரிப்புகள் தனி நபர்களுக்கோ கடைகளிலோ விற்கப்படும்; அல்லது கூடாறட்டும் என அடைவு வைக்கப்படுகின்றன. இவர்கள் மீது சமூகப் பார்வை பதியுமானால் பொலிஸாருக்கு எதிரான சமூக விரோதச் சவால்களை வெற்றிகொள்ள முடியும் எனலாம். அது இல்லாதவிடத்து உண்ணாமல், தின்னாமல் சேர்த்து ஊதாரிகளுக்குத் தானம் பண்ண வேண்டியது தான். இதற்கு பொலிஸார் மீதான நம்பிக்கை பொது மக்களுக்கு அவசியமாகிறது. நம்பிக்கை வர வேண்டுமே.!

செல்வவேலாயுதம்

## 'புலம்பெயர் நாடக எழுத்துருக்கள்' நூல் வெளியீடு சுவிற்ஸர்லாந்தில்

புலம் பெயர் நாடக முன்னோடிகளுள் ஒருவரான சுவிற்ஸர்லாந்தில் வாழும் ஏ.ஜி. யோகராஜா எழுதிய 'புலம்பெயர் நாடக எழுத்துருக்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு லங்கந்தால் நகரில் நடைபெறும். இந்த நிகழ்வில் இலக் கிய வாதிகளான கல்லாறு சதீஸ், மாதவி சிவலீலன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்து வர். கலாநிதி த.சர்வேந்திரா, நாடக நெறியாளர் அன்ரன் பொன்ராசா, கவிஞர் தா. பாலகணேசன், இலக் கியவாதிகளான ப. ரவீந்திரன், க. ஆதவன் ஆகியோர் ஆய்வுரை களை மேற்கொள்வர். எஸ்.புண் ணியமூர்த்தியின் நெறியாள்கை யில் நடைபெறும் இந் நிகழ்வில் திருமதி கோகிலா தவராஜா வெளி யீட்டுரை நிகழ்த்துவார்.

ஆசிரியருடனான அனுபவ உரை உட்பட அரங்காற்றுகை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

## பசுமைதேடும் பறவைகள் நூல், இறுவட்டு வெளியீடு



வவுனியாதமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன், ஒட்டுசுட்டான் 'செந்தணல்' வெளியீட்டகத்தின் புதிய பிரசவமாக நோர்வே விஜேந்திரனின் "பசுமைதேடும் பறவைகள்" நூல் மற்றும் இறுவட்டு வெளியீடு வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தின் பாலாம்பிகைமண்டபத்தில் கடந்தஞாயிற்றுக்கிழமை தமிழருவி சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா தமிழ் சங்கத்தின் தலைவர் எஸ் .என் .ஜி .நாதனும், வெளியீட்டுரையை காவியப் பிரதீபா வன்னியூர் செந்தூரனும் நூலின் நயப்புரையை தமிழ் மணி க.அருந்தவராஜாவும் கருத்துரையை பிரதேச செயலாளர் குணபாலனும் நிகழ்த்தினர்.

கலை இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளிகள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்த நிகழ்வில் வவுனியா தமிழ்ச் சங்கமும் 'செந்தணல்' வெளியீட்டகமும் இணைந்து கலைஞர்களைக் கௌரவித்தன. கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன், கவின்கலைக் கல்லூரியின் நிர்வாக இயக்குநர் கலைஞர் க.சவுந்தரராஜா, இசை யமைப்பாளர் இன்னிசை இளவல் பி.எஸ்.விமல் ராஜ், ஒளிப் பதிவாளர் சீ.எம். கலீஸ் ரஸ், மூத்த படைப்பாளி நாடகக் கலைஞர் ஏழுமலைப் பிள்ளை ஆகியோருக்கும் நோர்வே விஜேந்திரன் சார்பில் அவரது தாயாருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது. (வ–421)






## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்
- வயதுவந்த மாணவர்களுக்கு மேற்கோள் நூலகத்திற்கு இலவச அங்கத்துவம்.

**ஜனவரி மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்**

**நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?**

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
  பிள்ளைகளுக்கு(16-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 800

பிரிட்டிஷ் கவுன்சில், 70 ரக்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 7521521
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0900 - 1800

நாம் மேலும் கொழும்பிலும் கண்டியிலும்

www.britishcouncil.lk

# லஞ்ச எதிர்ப்புத் தின நிகழ்வில் தமிழ் இளைஞர்களின் இரு படைப்புக்கள்



லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான சர்வதேச நிறுவனமாகிய 'ட்ரான்ஸ் பரன்ஸி இண்டர்நஷனல்' நிறுவனத்தின் லஞ்ச எதிர்ப்பு தின நிகழ்வில் இரண்டு தமிழ் இளைஞர்களின் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான படைப்புக்கள் கடந்த 9 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப் பட்டன. பல படைப்புக்கள் உருவாக் கப்பட்டபோதும் தமிழ் இளைஞர்களின் படைப்புக்கள் இரண்டு மட்டுமே தெரிவாகின. அவை இரண்டும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளை ஞர்களின் படைப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் எண்டர்டைமண்ட் நிறுவனத் தின் தயாரிப்பாகிய ஷாலினி சாள் ஸின் கையூட்டு குறும்படம் மற்றும் வீ. பிரியன் இசையமைத்த லஞ்ச ஊழலுக்கு எதிரான பாடல் என்பன வெளியிடப்பட்டுத் திரையி டப்பட்டன. தமிழர்கள் என்ற வகையில் தமக்கு அந்தநிகழ்வில் கிடைத்த கௌரவத்தை யிட்டுத் தாம் மகிழ்ச்சி யடைவதாகவும் அத்துடன் தங்களது படைப்புக்கள் வெற்றி பெற ஒத்துழைத்த அனைத்துக் கலை ஞர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் இசையமைப்பாளர் பிரியன் மற்றும் இயக்குநர் ஷாலினி சாள்ஸ் ஆகியோர் கூறினர். (வ)










# புதன்பொய்கை



## அம்மா சுட்ட பாலப்பம்

மாவைப் புளிக்க வைச்சு
மனசு வைச்சு விடிய எழும்பி
பாலைப் பிழிந்தெடுத்து
பக்குவமாய் சுவை சேர்த்து

ஆசைக்கினிய அம்மா
அடுப்பெரித்து சுட்டதிந்தப்
பால் சிந்தி வாய் வழியும்
பால் அப்பம் வலு எழுப்பம்

சொண்டால் வழிகின்ற
சுவையான பாலை நக்கி
திண்டால் இரண்டு அப்பம்
திகட்டாது அது திவ்வியமே!

*கி.முகுந்தனா, தரம்–2ஏ,*
*புற்றளை மகா வித்தியாலயம்.*

## பொது அறிவு

- ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள நாடுகள் எவை?
  அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா
- அச்சுப் பொறி எந்த ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது?
  1440 ஆம் ஆண்டு
- நிலக்கடலை அதிகளவில் பயிரிடப்படும் நாடு எது?
  இந்தியா
- வெண்மைப் புரட்சி என்று எதைக் கூறுவார்கள்?
  பால் உற்பத்தியை அதிகரிப்பதை
- ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்த ஆண்டு பிறந்தார்?
  1945 ஆம் ஆண்டு
- உலகின் மிகப் பெரிய கண்டம் எது?
  ஆசியாக் கண்டம்
- பாலைவனங்களில் பெரியது எது?
  சஹாரா
- இலங்கையை ஆண்ட அந்நியர்கள் யார்?
  போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
- [illegible]
  [illegible]
- [illegible]
  வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம்
- இலங்கைக்கு உலகளவில் புகழ் தேடித் தந்த விளையாட்டு எது?
  கிரிக்கெட்
- உலகளவில் கோதுமை உற்பத்தியில் சிறந்து விளங்கும் இரண்டு நாடுகளைக் குறிப்பிடுக?
  அமெரிக்கா, அவுஸ்திரேலியா
- இலங்கை ஜனாதிபதியின் பதவிக் காலம் எத்தனை ஆண்டுகள்?
  ஆறு ஆண்டுகள்

*சு.றிசானி*

# நன்றி கெட்ட மனிதன்

கமலா குமாரசாமி

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

குரங்கு அவருக்கு இனிமையான பழங்களை நிறையவே பறித்துக்கொடுத்ததுடன், எப்போதெல்லாம் உணவு தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் தன்னை வந்து பார்க்கும்படி அன்புடன் கூறியது.

பிறகு, அவர் புலியைக் காணச்சென்றார். புலியிடமும் தனது குடும்ப வறுமை காரணமாகவே தான் புறப்பட்டதையும் பணம் தேடமுடியாமல் ஊர் திரும்புவதையும் கூறினார்.



புலி அவரை மகிழ்வுடன் வரவேற்றுத் தனது குகையிலிருந்த ஏராளமான தங்கம் மற்றும் பொன் ஆபரணங்களைக் கொடுத்து, இவையெல்லாம் நான் ஓர் இளவரசனைக் கொன்றபோது அவன் அணிந்திருந்த நகைகளாகும். இவை எல்லாவற்றையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியது. அந்தணரும் அவற்றைப் பெற்றுக் கொண்டு செல்லும்போது, பொற்கொல்லனின் ஞாபகம் வந்தது. பொற்கொல்லனிடம் கொடுத்தால் நல்ல விலைக்கு விற்றுத் தருவான் என எண்ணி பொற்கொல்லனைச் சந்தித்து அவற்றை விற்றுத் தருமாறு கூறினார்.

நகைகளைப் பார்த்த பொற்கொல்லன் அவைகள் முன்பு இளவரசனுக்கு தான் செய்து கொடுத்தவை என்பதை உணர்ந்து கொண்டு நகைகளைப் பார்த்து பிரமிப்பதுபோல் நடித்துக்கொண்டு அவரை அங்கேயே இருக்குமாறு கூறி அந்த நகைகளை விற்றுப் பணத்துடன் வருவதாகக் கூறிச் சென்றார்.

நகைகளுடன் சென்ற பொற்கொல்லன் நேராக அரசனிடம் சென்று, நகைகளைக் காண்பித்ததுடன், இந்த நகைகளுக்காக இளவரசனைக் கொன்று விட்ட கள்வன் அந்த அந்தணரே என்று அரசனிடம் கூறினான். ஆத்திரமடைந்த மன்னன் காவலர்களை அழைத்து பொற்கொல்லன் வீட்டிலிருக்கும் கள்வனை உடன் கைது செய்து சிறையிலடைக்குமாறு பணித்தான். அவனுக்கு மரணதண்டனை அளியுங்கள் எனவும் அரசன் ஆணையிட்டான். காவலர்களும் அவரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். கைது செய்ய உதவிய பொற்கொல்லனுக்கு பரிசில்கள்வழங்குமாறும்அசரசன்உத்தரவிட்டான்.

ஐயோ! எனது விலங்கு நண்பர்கள் இவன் ஒரு நம்பிக்கைத் துரோகி, இவனை கிணற்றிலிருந்து காப்பாற்ற வேண்டாம் என்று எச்சரிக்கைசெய்தும் நான் இரக்கமனத்தினால் இவனைக் காப்பாற்றினேனே? என்று அந்தணர் மனம் நொந்து வருந்தி அழுதார். அப்போது அவருக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் தன்னை அழைக்குமாறு பாம்பு கூறியமை ஞாபகம் வந்தது. உடனே பாம்பைத் தனது மனதில் நினைத்தார். பாம்பு அவர் முன் தோன்றி என்ன உதவி செய்ய வேண்டும் என்று கேட்டது.

அவரும் நடந்தவற்றை பாம்பிடம் கூறி நான் விடுதலை பெறவேண்டும் என்றார். பாம்பு நன்கு சிந்தித்து விட்டு என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. கவனமாகக் கேளுங்கள் என்று கூறி, நான் அரண்மனையில் ராணியைக் கடித்துவிடுகிறேன். உங்களைத் தவிர அவளை வேறு யாரர்லும் காப்பாற்ற முடியாது என்று கூறிவிட்டு சிறையிலிருந்து ஊர்ந்து சென்றது.

திடீரென அரண்மனையில் கூச்சல் குழப்பம் உண்டாயிற்று. ராணியைப் பாம்பு கடித்ததால் அவள் மயக்கமாகிவிட்டாள். பல பல வைத்தியர்கள் வந்தபோதும் ராணியைக் குணமாக்க முடியவில்லை. அப்போது சிறைக்காவலர்களிடம், பாம்பு கடித்தவர்களைக் குணமாக்குவதில் நான் தேர்ச்சி பெற்றவன் என அந்த அந்தணர் தெரிவித்தார்.

காவலர்களும் அதனை அரசனுக்குத் தெரிவிக்க, அர்சன் அந்தணரை அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தான். அவரும் ராணியைப் பரிசோதிப்பதுபோல் பாசாங்கு செய்து மனதில் பாம்பை நினைத்து ராணியின் நெற்றியைத் தொட்டார். உடனே அவளிடமிருந்து விஷம் இறங்கியது. ராணி மயக்கம் தெளிந்து உயிர் பிழைத்தெழுந்தாள்.

அரசன் மிகவும் மகிழ்ந்து, அந்தணரை அழைத்து இந்த நகைகள் எப்படிக் கிடைத்தன என்று கேட்டான். ஏனெனில் ராணியின்உயிரைக்காப்பாற்றியவன்இளவரசனைக்கொன்றிருக்க மாட்டான் என்ற நம்பிக்கை அவனிடம் உதித்தது. அவரும் தான் ஓர் அந்தணர் எனவும், குடும்ப வறுமையின் நிமித்தம் பணம் சம்பாதிக்க புறப்பட்டதையும் கிணற்றினுள் இருந்த நால்வரையும் காப்பாற்றியதிலிருந்து புலி நகைகள் தந்தது வரை ஒன்றும் விடாமல் நடந்தவற்றை மன்னனிடம் கூறினார்.

அத்துடன் மிருகங்கள் நன்றியுடன் நடக்க பொற்கொல்லன் மட்டும் துரோகம் செய்தான் என்றும் கூறினார். அரசன் அவரிடம் மன்னிப்புக் கேட்டதுடன், நல்ல வேளையாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தால் நான் எத்தனை பெரும் குற்றவாளியாகியிருப்பேன் என கடவுளுக்கும் நன்றி கூறினான்.

அத்துடன் அந்தணருக்குப் பணமுடிச்சையும் வழங்கி நிறைய பரிசுப் பொருள்களையும் வழங்கி எப்போது வேண்டுமானாலும் தன்னிடம் உதவி கேட்டு வரலாம் எனக் கருணையுடன் பணித்து அனுப்பி வைத்தான். அதே சமயம் பொய்யுரை கூறிய பொற்கொல்லனை நீண்ட காலச் சிறையில் அடைக்கும் படி காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

நன்றி கெட்டவர்களுடனும், பழிக்கு அஞ்சாத தீயோருடனும் நட்பாக இருப்பதால் கெடுதியே வரும் என உணர்ந்து நல்லவர்களைத் தேர்ந்து நட்பாக இருப்பீர்களாக.



எஸ்.டக்ஷன், தரம்–8ஜி,
வவுனியா விபுலானந்தாக் கல்லூரி



சு.மதுநிசா, தரம்–5சி,
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

# புதன்பொய்கை

## ‘புயல் மழைக்குப் பின்னான பொழுது’ நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது



கவிஞர் த.ஜெயசீலனின் 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் தி.வேல்நம்பி நூலை வெளயிட்டு வைக்க முதற் பிரதியை கவிஞர் இயக்கச்சி சி.கருணாகரன் பெற்றுக்கொண்டார். (வ-250)

## மன்னாரில் நடைபெற்ற ‘கரோல் பாடல்’ இறுதிப்போட்டி



மன்னார் 'கலையருவி' ஏற்பாடு செய்திருந்த புனித செசிலியா விருதுக்கான 'கரோல் பாடல்' இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் 'கலையருவி' இயக்குநர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசேப்பு ஆண்டகை கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக பேசாலை பற்றிமா ம.ம.வி.பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ், அடம்பன் கார்மேல் கன்னியர் இல்ல முதல்வர் அருட்சகோதரி எஸ்.எலிசெபத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து சிறப்பு கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டன. (வ-56)





## வேலணைப் பிரதேச செயலகம் நடத்திய கலாசாரப் பெருவிழா





வேலணைப் பிரதேச கலாசாரப் பேரவையும், வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழா அண்மையில் வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.
முன்னதாக விருந்தினர்கள் பாரம்பரிய கலாசார நடனம், மங்கள வாத்தியம் சகிதம் மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். அரசஅதிபர் சுந்தரம் அருமை நாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் வேலணைப் பிரதேசத்தை ஆவணப்படுத்தும் 'தென்தீபம்' சிறப்பு மலரை அரச அதிபர் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண்குயின்ரஸ் பெற்றுக் கொண்டார்.
சிறப்புப் பிரதிகளை அரச அதிபர், வேலணைப் பிரதேச உதவி பிரதேச செயலாளர் ஆகியோர் வழங்கி வைத்தனர். நிகழ்வின் முக்கிய அம்சமாக கவிஞர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது. பிரதேசத்தைச் சேர்ந்த பல்துறை சார்ந்த கலைஞர்கள் 6 பேர் 2014 ஆம் ஆண்டுக்கான 'கலைவாரி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
தலைமை உரை, விருந்தினர்கள் உரைகளை அடுத்து வேலணை நாட்டியப் பயிற்சி மாணவர்களது அபிநயப் பாடல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோண்குயின்ரஸ், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

## போரின் வடுக்களை பிரதிபலிக்கும் சிறுகதைகள் ...

(B பக்கத் தொடர்ச்சி)

உ–ம்: எண்டாலும் எனக்குப் பயம் – யோகேஸ்வரி சிவப்பிரகாசம் – ஜீவநதி நான்காம் ஆண்டு மலர் (ஆவணி 2011) – சிறுவர்களின் உளத்தாக்கம்

நாயிற் கடையாய் – க. தர்மதேவன் – ஜீவநதி 50ஆவது இதழ் (கார்த்திகை 2012) – முன்னாள் போராளிகளின் மீள்வாழ்வு குறித்தது. சுமப்பவர்கள் – நங்கூரம் சமூக அறிவியல் ஏடு (பங்குனி–சித்திரை 2013) – சிறுவர் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினை, இலங்கைத் தமிழிலக்கியத்திலிருந்து கிளைத்த புலம்பெயர் இலக்கியப் போக் குகளின் அபரிமிதமான செல்வாக்கின் வழியேயான நிலை மாற்றம் என்பது இரு அடிப்படைகளில் விளங்கிக்கொள்ளப்பட வேண்டியது. ஒன்று, புலம்பெயர் தேசத் தவர்கள் தமது வாழ்விட வெளியில் பெறும் புதுவகை அனுபவங்களை ஈழத்து வாழ்வுக்கு அனுபவங்களாகவும் கருத்துநிலைகளாகவும் கொணர்ந்து சேரப்பவையாக அமைந்த சிறுகதைகள். இன்னொன்று, தங்களின் புதிய வாழ்விட வெளியில் நின்றுகொண்டு தமது மரபார்ந்த வாழ்விடத்தின் சமூக, பண்பாட்டு மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் கருத்துநிலை மாற்றத்தைத் தரும் சிறுகதைகள்.

உ–ம்: அ.முத்துலிங்கம், ஆ.சி.கந்தராஜா, சோபாசக்தி, இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், சுமதி ரூபன் என்று ஒரு பெரிய பட்டியல் விரியும்.

இதனுள் எதிரும் புதிருமான கருத்து நிலை வேறுபாடுள்ள எழுத்தாளர் குழுமங்களை இனங்காண முடியும்.

பொது நிலையிலும் உலகளாவிய நிலையிலும் முனைப்புப் பெறுகின்ற இலக்கியக் கோட்பாடுகளின் உள்வாங்கல் மற்றும் புரிதல் வழியான நிலைமாற்றம் என்பது அதிக கவனம் கொடுக்க வேண்டிய விடயமாகும். ஈழத்துச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் இன்று அதிகம் சிலாகிக்கப்படும் பின்நவீனத்துவம் சார்ந்த படைப்பாக்க முயற்சிகள் இவற்றில் முக்கியமானவை. இதன் முன்முயற்சிகளில் திசேராவின் கபாலபதி (மூன்றாவது மனிதன் வெளியீடு– ஒக்டோபர் 2000), வெள்ளைத் தோல் வீரர்கள் (மூன்றாவது மனிதன் வெளியீடு–ஓகஸ்ட் 2004), அம்ரிதாஏயெம் எழுதிய விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் (மூன்றாவது மனிதன் வெளியீடு – ஜனவரி 2002) என்பன முக்கியமானவை. தொடர்ச்சி நிலையில் இராகவன், இ.சு.முரளீதரன், தானா விஷ்ணு, மருதம் கேதீஸ், சித்தாந்தன் போன்ற பல படைப்பாளிகள் சிறுகதையில் வடிவ உடைப்புக்களைச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். மருதம் கேதீஸின் ஔவைதருமுகிலி (கலைமுகம்–50ஆவது சிறப்பிதழ், 2010, ப:71) இ.சு.முரளீதரனின் கடவுளின் கைபேசி (சிறுகதைத் தொகுதி– ஜீவநதி வெளியீடு 33– சித்திரை 2014), சித்தாந்தனின் அம்ருதாவின் புதிர் வட்டங்கள் (காலநதியின் கற்குழிவு – சிறுகதைத் தொகுதி – ஜீவநதி வெளியீடு 37, 2014) போன்றவை கவனிப்புக்குரியவை. இந்த முயற்சிகள் வெறுமனே வடிவ உடைப்புக்களாகவன்றி புதிய கருத்தாடல்களுக்கான வழிகளைத் திறக்கின்ற போதிலும் சமூக மாற்றத்துக்கான சாத்தியங்களிலும் வேகமாக கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல் நிகழ்வதால் கோட்பாட்டின் சமூகத் தேவைப்பாடு மற்றும் பொருத்தப்பாடு குறித்தான விமர்சனங்கள் எழுவதைத் தவிர்க்க முடியாது. சிறுகதைகளில் நிலை மாற்றம் பற்றி ஆய்வு செய்கையில் இத்தகைய கோட்பாட்டு மையமான நிலை மாற்றம் நிச்சயம் கருத்திலெடுக்கப்பட வேண்டும். இதனுடன் இணைந்த வகையில் உளப்பகுப்பாய்வு உளவியல் கருத்துக்களை லகானிய உளவியல் கருத்துக்களால் பதிலீடு செய்தல், அமைப்பியல்வாதப் பெண்ணியக் கருத்துக்களை பின்நவீனத்துவப் பெண்ணியக் கொள்கைகளால் நிரப்புதல் போன்ற முனைப்புக்கள் தரும் அதிர்வுகள் குறித்தும் சிறுகதைப் படைப்பாக்கங்களில் காணலாம். அதே நேரத்தில் பெண்ணியம், தலித்தியம் தொடர்பான கொள்கைகளின் செல்வாக்கினாலும், படைப்பாக்க முயற்சிகளில் அவற்றின் பிரயோக நிலையிலான போக்குகளாலும் குறிப்பிடத்தக்க நிலைமாற்றங்கள் சாத்தியமாகியுள்ளன.

பிரசுர ஊடகத்தின் தன்மை மற்றும் கருத்து நிலை வழியாக உந்தப்படும் நிலைமாற்றம் என்பது சிறுகதைகளின் பொருள் என்பதைவிட வடிவத்தினையே பெரிதும் நிலைமாற்றத்துக்கு உட்படுத்தியுள்ளதெனலாம். பத்திரிகை, சிற்றிதழ், நூல்கள் போன்ற அச்சு ஊடகங்களைக் கடந்து இணைய வழியாக முகநூல், புளொக் மற்றும் தனிப்பட்ட இணையத்தள பக்கங்கள் வழியாகச் சிறுகதைகள் பதிவேற்றம் செய்யும் போது அதன் ஒளி வடிவம் காரணமாக சிறுகதை வடிவமைப்பிலும், சில இணைய இதழ்களின் கொள்கை காரணமாக அதன் பொருளிலும் ஏற்பட்டுவரும் நிலைமாற்றங்களை ஓர் ஊடகப் பண்பாட்டின் விளைபொருளாகவே கருதமுடியும்.

இன்று ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் நிகழ்ந்துவரும் இத்தகைய நிலைமாற்றங்களில் உலகளாவிய மாற்றங்களின் போக்குக்கேற்ப துரிதப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன என்பது உண்மையே. எனினும், நாம் துரிதப்படுத்த எத்தனிக்கும் நிலைமாறுதல்கள் எமது சமுதாயத் தேவைகள் குறித்தும், அதற்கான சமூகப் பொருத்தப்பாடு குறித்தும் எந்தளவில் அமையலாம் என்பதை சரிவரத் தீர்மானித்தல் வேண்டும். இந்தப் பொறுப்பைப் படைப்பாளிகள் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, இந்த நிலைமாற்றங்களுக்கான பொருத்தமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான வழித்தடத்தைச் செப்பனிட வேண்டியவர்களாக இலக்கிய விமர்சகர்களும் ஆய்வாளர்களும் அமைகின்றனர்.

(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)




# புதன்பொய்கை

## தீவக கல்வி வலயம் நடத்திய பௌர்ணமி தின நிகழ்வு





தீவக கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி கலைவிழா அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண்குயின்ரஸ் தலைமையில் நடைபெற்றது.

மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய முன்றிலிலிருந்து விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, புங்குடுதீவு பாடசாலை மாணவர்களின் இன்னிசை மற்றும் கலாசார நடன நிகழ்வுடன் விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வுநிலை பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண்குயின்ரஸ் தலைமையுரை நிகழ்த்தினார். தீவக வலய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ–250)





## நுனிப் புல் மேய்ந்த விமர்சனம்

கண.மகேஸ்வரன்

2014.12.10ஆம் திகதி உதயனின் 'புதன் பொய்கை'யிலும் அதன் முன்னைய (2014.12.03) இதழிலும் 'தேவி பரமலிங்கம்' எழுதிய "பரிசுத் தெரிவுப் படைப்புகளின் வீக்க தூக்கங்கள்" என்ற தலைப்பிலான விமர்சனக் கண்ணோட்டம் பார்த்தேன். அவ்வப்போது அந்தப் படைப்புகளை வாசித்தபோதும், விமர்சனம் செய்யும் நோக்கு இல்லாததால், அவை பற்றி இப்போது என்னால் எடுத்துரைக்க முடியவில்லை.

எனினும், எனது படைப்பான 'வீதியோரத்துப் புளியமரம்' பற்றி அவரது பார்வையினூடே நான் கணித்தது, அரைவேக்காடான நுனிப்புல் மேய்ந்த அவரது விமர்சனக் கண்ணோட்டத்தையே.

"இருநூறு வருடப் பழைமை வாய்ந்ததென்றும், நிழல் தரும் பெரு விருட்சமென்றும்...." அந்த மரம் பற்றிய எனது குறிப்பு (உ+ம் பந்தி ஆரம்பம்) இருக்கும்போது, இருபது வருடபெருவிருட்சம் என்று இவர் குறிப்பிடும்போதே, அதன் உண்மைத்தன்மை பொய்த்து விடுவதைக் காணலாம். இருபது வருட மரம் சாதாரண மரமேயன்றி, 'விருட்சம்' என்ற

> "தேவி பரமலிங்கம்' எனது நீண்ட கால நண்பர் என்பதற்காக, இதனை முற்று முழுதாக அங்கீகரிக்க முடியாது. இனிவரும் பரிசுத் தெரிவுகளை அவர், மீள்வாசிப்பின் பின்னர் விமர்சிப்பதே நல்லது, என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்."

பெயருக்குரியதன்று.

மேலும்,"... ஒரு மரத்துக்கு இந்த எண்ணங்களெல்லாம் வர, அதைப் பேச வைத்தவர் மனிதராக இருப்பதுதான்...." என்று குறிப்பிடுகிறார். எங்காவது அஃறிணைப் பொருள்கள் பேசியதுண்டா? உருவகப்படுத்துவதுமனிதனன்றிவேறெவராம்?

'உருவகம்' என்பது, மரமே முழுவதையும் தன் கூற்றில் சொல்லியிருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். இடையிடையே படைப்பாளியின் கூற்றாகவும் வெளிப்படுத்தல் எந்த வகையைச் சார்ந்தது? உருவக உத்தியு டன் சிருஷ்டிக்கப்பட்ட 'சிறுகதை' என்ற படைப்பாளியின் நியாயமான தவிப்பை உணரவேண்டும்.

இது ஒருபுறமிருக்க, ஏனைய படைப்புகள் பற்றிய இவரது பார்வையின் கோணங்கள் சரிதானா என்ற எண்ணம் வருவதும் தவிர்க்க முடியவில்லை.

விமர்சனம் என்பதும், நாகரிகமாகக் கையாளப்பட வேண்டியதே. விமர்சனம் என்று வரும்போது, மீள் வாசிப்பின் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

'தேவி பரமலிங்கம்' எனது நீண்ட கால நண்பர் என்பதற்காக, இதனை முற்று முழுதாக அங்கீகரிக்க முடியாது.

இனிவ்ரும் பரிசுத் தெரிவுகளை அவர், மீள்வாசிப்பின் பின்னர் விமர்சிப்பதே நல்லது, என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இந்த மடல், எழுதிய வண்ணமே உதயனில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதே எனது வேணவா.

ஒரு படைப்பை – அது தரமாக இல்லாதபோது – திருத்தியமைப்பது ஆசிரியர் பொறுப்பெனக் கொண்டாலும், முடிவை அப்படியே பிரசுரிப்பதே படைப்பாளியைத் திருப்திப்படுத்தும்–

"....என்று, தன் சுய புராணத்தை முடித்தது, வீதியோரத்தில் நிற்கும் அந்தப் புளியமரம்" என்றே கதையை முடித்திருந்தேன். முடிவில் "சில மனிதர்கள் கோடரிகளுடன் மரத்தைச் சுற்றிவளைக்கின்றனர்" என்ற இறுதிவரி கூட என்னுடையதல்ல.

பரிசுக் கதைகள், கவிதைகளைத் தேர்ந்து பரிசளித்த 'உதயன்' நிறுவனத்தையே பரமலிங்கத்தின் கருத்துக்கள் பாதிப்படைய வைக்கின்றன என்பதே, எனது பெருங்கவலை.

எழுத்தாளர் 'சுஜாதா' ஒரு முறை சொன்னார், "நான் எழுதுகின்ற லோன்டரிச் சீட்டுக்கள்கூட சிறுகதையாக அங்கீகரிக்கப்படும்" என்று. இந்த இறுமாப்பு, தேவி பிரமலிங்கத்தையும் தொற்றியுள்ளதோ என்ற ஐயவுணர்வே என்னுள் பரவுகிறது.